காஞ்சிபுரம் பிரிவுத் திருக்கோயில்களின்

பயணியர் கையேடு



வெளியீடு

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

வேலூர் மண்டல

காஞ்சிபுரம்
பிரிவு
திருக்கோயில்களின்
பயணியர் கையேடு

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சார்பாக

அச்சிடுவோர்

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வல்லக்கோட்டை

விலை ரூ. 30/– மட்டும்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சார்பாக அச்சிடுவோர்
: **அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்**
வல்லக்கோட்டை – 602 105

விலை : ரூ. 30/– மட்டும்

முதற்பதிப்பு : 2002

அச்சிட்டோர் : **ஸ்ரீகல்ஸ் கிராபிக்ஸ்**
சென்னை – 35.
போன் – 4350961 / 4350638 / 4355530

உரிமை : இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை–34.

அட்டைப் படவிளக்கம்

முன் அட்டை :

பின்புலம்	காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் திருக்கோயிலின் தெற்கு ராஜ கோபுரம்
வலதுவரிசை	ஆதிசங்கரர், தேசிகர், பூசலார் நாயனார், திருக்கச்சி நம்பிகள், கூரத்தாழ்வார்.
இடது வரிசை	உடையவர், சேக்கிழார், திருமழிசை ஆழ்வார், ஆளவந்தார் நாயக்கர், பூதத்தாழ்வார்.

பின் அட்டை :

வலதுவரிசை	திருக்கழுக்குன்றம், காஞ்சி கைலாசநாதர் திருக்கோயில், திருப்பருத்திக்குன்றம், ஐயங்கார்குளம் தோரண வாயில்.
நடுவரிசை	தங்கத்தேர் (திருத்தணி) ஒப்பனை மகள் திருப்பருத்திக்குன்றம் ஆதிபட்டாரகர் ஆற்பாக்கம்.
இடது வரிசை	குன்றத்துார் மலைக்கோயில், மகாபலிபுரம் கடற்கரைக் கோயில், திருப்பருத்திக்குன்றம் வரலாற்று ஓவியம், பஞ்சபாண்டவர் ரதம்.

Email : skmkanci@md3.vsnl.in
kanchimutt@vsnl.com
www.kamakoti.org.

Phone : (04112) 22115
Fax (04112) 24305

உ

Sri Chandramouleeswaraya Namaha :

Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolomnaya

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL
SRIMATAM SAMSTHANAM

No. 1, Salai Street, Kancheepuram-631 502. Tamilnadu, India.

13:07:2001

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பெரியோர்கள் வாக்கு. நமது கிராமங்களில் சிவன் கோவில், பெருமாள் கோவில், கிராம தேவதை கோவில் மூன்றும் சேர்ந்தே இருந்து அக்கிராமவாசிகள் அவரவர்கள் குல வழக்கத்திற்கேற்ப வழிபாடு நடத்தி கோவிலை பராமரித்து வந்தார்கள். கோவில்களுக்காக மன்னர்கள் நிலங்களை சாஸனம் செய்தும் பிற்பாடு வந்த செல்வந்தர்களும் நில மானியம் அல்லது தொகையை மானியமாக கொடுத்து கோயிலின் பூஜை, உற்சவம் தடையில்லாமல் நடக்க வழி செய்தார்கள். தற்போது பல கோயில்கள் வருமானம் சரியாக வராததினால் பராமரிப்பு குறைந்து வருகிறது.

அரசாங்கம் அறநிலையத்துறை மூலம் கோவில்களுக்கு ஒரு வேளை பூஜை நடத்த திட்டங்கள் வகுத்தும், ஆங்காங்கு பல கோவில்களுக்கு திருப்பணிகள் செய்வித்து கும்பாபிஷேகம் நடத்தியும் வருகிறது.

அறநிலையத்துறை ஆங்காங்கு பிரதோஷ பூஜை, உழவாரப்பணி, திருக்குளம் சுத்தம் செய்தல், துர்க்கை ராகு கால பூஜை என பல வழிகளிலும் கோவில்களின் மேம்பாட்டுக்கு பாடுபட்டுவருகிறது. தற்போது அறநிலையத்துறை காஞ்சீபுரத்தை மையமாகக் கொண்டு சுற்றிலிலுமுள்ள வட்டங்களில் உள்ள பல்வேறு முக்கியத் திருக்கோவில்கள் பற்றிய தகவல்கள், செல்லும் வழி, ஸ்தல புராணம், கலை, பண்பாடு, சிற்பக்கலை போன்ற கண்ணோட்டங்களில் செய்திகளை அளித்து புனிதப்பயணம் செல்வோருக்கும் கலை, பண்பாடு, பண்டைய கட்டிடக்கலை பற்றி அறிந்து கொள்ள விரும்புவர்களுக்கும் உதவியாக கையேடு வெளியிடுவது கேட்டு மிகவும் சந்தோஷிக்கிறோம்.

பொதுமக்கள் யாவரும் இக்கையேட்டினை படித்து நமது பண்டைய புராதன கலைப் பொக்கிஷங்களை காப்பாற்றி அங்கு வீற்றிருக்கும் தெய்வங்களின் மகிமையைப் பற்றியும் தெரிந்து கொண்டு நம்மாலான தொண்டினை செய்து வருங்கால சந்ததியினரும் அதைத் தொடர்ந்து செய்ய எல்லாம் வல்ல இறைவனருளை பெற்று பெருவாழ்வு பெற ஆசீர்வதிக்கிறோம்.

நாராயண ஸ்மிருதி

பி.சி. இராமசாமி
இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 22.02.2002

வாழ்த்துரை

தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்றான "ஆற்றுப்படை" எனும் வழிகாட்டும் வடிவத்திற்கு மற்றும் ஒரு அணிகலன் இவ்வழிகாட்டிக் கையேடு. ஆறுபடை வீட்டில் உறையும் ஆறுமுகனைத் தரிசிக்க எழுந்த நூல், "திருமுருகாற்றுப்படை" காஞ்சிபுரம் மாவட்டத்தில் குவிந்த கரம் விரிக்க இயலாது, அடுத்தடுத்து அமைந்த அழகிய திருக்கோயில்களைத் தரிசிக்க வரும் யாத்ரீகர்களுக்கு, இக்காலத்திற்கு ஒப்ப, திருக்கோயில்களை, குறுகத்தரித்து விளக்கும், இக்கையேடு இன்றைய தலையாய ஆன்மீக சேவையாகும்.

காஞ்சி – திருவள்ளூர், மாவட்டங்களிடையே ஊடாடி, உய்விக்கும் அரும்பெருந் திருக்கோயில்களை அழகுற விளக்கும் இக்கையேடு, எம் தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சேவைகளுக்கு மற்றொரு மணிமகுடமாகும். இதன் முதற்பதிப்பு கொண்டுள்ள நற்கருத்துகளை மட்டுமின்றி, இனிவரும் பதிப்புகளில் பரிணாமம் பெருகி, எழிலுற தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் பரிணமிக்கும் என்பதில் ஐயமில்லை.

இப்பயணியர் கையேட்டின் பயனை அனைவரும் அறியும் வண்ணம் படித்தும், பரிசளித்தும் மகிழ்க !.

அன்புடன்,

(பி.சி ராமசாமி)

பி.ஏ. இராமையா, இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி பண்பாடு (ம) அறநிலையத்துறை
தமிழ்நாடு அரசு

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009
தொலைபேசி எண் : 5362887
நிகரி : (044) 5362887
நாள் :

வாழ்த்துரை

தமிழக வரலாறு தொன்மையானது. தமிழகத்தின் வரலாற்றினையும், கலை, கலாச்சாரம், மக்களின் வாழ்வு, மன்னர்களின் அரசாட்சி போன்ற பல தகவல்களையும், தமிழர் தம் பண்பாட்டையும் கட்டிக் காத்துவரும் பெருமை திருக்கோயில்களையே சார்ந்தது என்றால் அது மிகையில்லை.

இறைவனை அனுதினமும் துதித்து அவனுடைய அருமை பெருமைகளை எல்லாம் உலகத்திற்குப் பரப்பி வந்த பெருமக்கள் அனைவரும் கலையாத கல்வியும், குன்றாத வளமும், கழுபிணி இல்லாத உடலும், ஓர் துன்பமும் இல்லாத வாழ்வும் கொண்டு வாழ்ந்ததாக வரலாறுகள் உண்டு.

இறைவனுடைய அறநெறிகளை பக்தி மார்க்கமாக திருமூலர், காரைக்கால் அம்மையார், திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள், பிற நாயன்மார்கள், அருணகிரிநாதர், இராமலிங்க அடிகளார் போன்ற ஆன்மீகப் பெரியோர்கள் பரப்பி இறைவனது புகழ் செறிந்த பக்திக் கருவூலங்களான திருமந்திரம், தேவாரம், திருவாசகம், திருவருட்பா போன்ற தமிழ் இலக்கியங்களை உலகிற்குத் தந்துள்ளார்கள்.

"பச்சை மாமலை போல் மேனி",
"நமச்சிவாய வாழ்க",
" அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்"

போன்ற தொடர்களால் ஆன்மீகப் பெரியோர்கள் பக்தி பரவசத்துடன் இறைவனைப் பாடி, இறைஞ்சி அனைத்து நலங்களையும் பெற்றுத் தந்த பெருமையினைச் சிந்தாமல், சிதறாமல் சீரிய முறையில் இன்னமும் பாதுகாத்து வருவன நம் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களேயாகும்.

இத்தகைய பெருமை மிக்க திருக்கோயில்களின் பழமை, பெருமை, புராணம், கலை, பண்பாடு ஆகியவற்றைத் தமிழக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்னும் நோக்கில் வேலூர் மண்டலத்தில் காஞ்சிபுரம் பிரிவில் அமைந்துள்ள 108 திருக்கோயில்கள் பற்றிய தகவல்கள் அழகிய படங்களுடன் திரட்டப்பட்டு வெளியிடப்படவுள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இக்கையேடு அனைத்துப் பிரிவினருக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

****

24/1/2002

அரசு செயலாளர்
தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும்
அறநிலையத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009

த.ரா.சீனிவாசன்,இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும்
ஆணையர்,
இந்துசமய அறநிலைய
ஆட்சித்துறை.

119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை 600 034.

நாள்:28.01.2002.

வாழ்த்துரை

திருக்கோயில்களால் பெருமை பெற்று விளங்கும் நம் தமிழகத்தின் பெருமையை விளக்குவதற்கே காஞ்சியில் அமைந்து விளங்கும் திருக்கோயில்களே போதுமானவை என்பர் வரலாற்று ஆசிரியர்கள்.

பன்னெடுங்காலமாக இந்தியதேசம் முழுவதும் கொண்டாடும் மிகச் சிறந்த திருக்கோயில் நகரமாகக் காஞ்சிபுரம் திகழ்ந்து வருகின்ற சிறப்பினைக்

"கல்வியிற் கரையிலாத காஞ்சி"

"தேசமெலாம் புகழ்ந்தாடும் காஞ்சி"

"முத்திநகர் எழில் முதன்மையதாம் காஞ்சி"

போன்ற தொடர்களால் நாம் நன்கு அறிகின்றோம்.

ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடியுள்ள புண்ணிய திருக்கோயில்கள் காஞ்சிபுரம் பகுதியிலேயே மிகுதியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"வையம் தோறும் தெய்வம் தொழு" என்ற ஔவை மூதாட்டியின் அருள்வாக்கிற்கு இணங்கத் திருத்தல யாத்திரை மேற்கொள்ளும் மெய்யன்பர்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் "வேலூர் மண்டல காஞ்சிபுரம் பிரிவு திருக்கோயில்களின் பயணியர் கையேடு" வெளியிடப்பெறுவது பாராட்டிற்குரிய பணியாகும்.

இப்பயன்மிகு நூலை மெய்யன்பர்கள் அனைவரும் படித்து மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றின் அருமை பெருமைகளையும் உணர்ந்து எல்லாம் வல்ல இறையருளைப் பெற்று உய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(த.ரா. சீனிவாசன்)
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்

முன்னுரை

திரு. ப. ராஜா, பி.எஸ்ஸி.,பி.எல்.,
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
வேலூர் - 4.

ஆயும் நான்மறைகள் போற்ற நின்று அருந்தவம் புரியத்துாய மாதவம் செய்தது 'தொண்டை நாடு' என தொண்டை நாட்டினைச்சிறப்பு செய்து தெய்வச் சேக்கிழார் பாடியுள்ளமைக்கு காரணம், நிம்மதியை, நிறைவை, அமைதியை ஆன்மீக வழியில் தேடி செல்பவர் எவரும் அவசியம் வந்து வழிபட்டுச் செல்லும் புராதன, சிறப்பு மிக்க, வைணவமும், சைவமும் இன்று வரை அழியாத வகையில் நிலைத்து நிற்கும் ஆலயங்கள் நிறைந்த அழகிய அருள் நிறைந்த மண்ணே தொண்டை நாடாகும்.

தொண்டை நாட்டில் கோவில் நகரமாம் காஞ்சிபுரமும், அதனை சுற்றியமைந்த பகுதியில் பழமை வாய்ந்த, சமயக் குரவர் நால்வர்களால் பாடல் பெற்ற, ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட, திருமகான்கள் அவதரித்த ஸ்தலங்கள் மற்றும் திருக்கோயில்கள் பல உள்ளன. அவ்வாறான ஸ்தலங்களையும், திருக்கோயில்களையும், இந்து மதத்தின் காப்பகமாய் இணையற்று விளங்கும் காஞ்சிபுரம் மற்றும் ஸ்ரீ சங்கர மடத்தினையும், அயல் நாட்டினரும், இந்நாட்டின் பெருமக்களும் வருகை தந்து வழிபட்டு செல்லுவது பெருமைக்குரிய ஒன்றாகும். வேலூர் இணை ஆணையர் மண்டல காஞ்சிபுரம் பிரிவில் உள்ள சிறியதும், பெரியதுமான ஆனால் சீரும், சிறப்பும் வாய்ந்ததுமான அனைத்து திருக்கோயில்களையும் ஆன்மீக பெருமக்கள் திக்கு தெரிந்து தெய்வ தரிசனம் பெற 'திருக்கோயில் பயணியர் கையேடு' என்ற பெயரில் நூலொன்று தயாரிக்க வேண்டுமென்ற இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சீரிய நோக்கத்தினை நிறைவு செய்யும் பொருட்டு காஞ்சிபுரம் மாவட்டம் செயல் அலுவலர்கள் மற்றும்

ஆய்வர்கள் ஆகியோர்கள் காஞ்சிபுரம் பகுதியில் உள்ள திருக்கோயில்களைப் பற்றிய விபரங்கள் எல்லாம் ஒன்று திரட்டி இப்பயணியர் கையேட்டில் பொதித்து வைத்ததுடன், பூஜை விவரம், தரிசனநேரம் வழிபாட்டு முறை ஆகியவற்றை குறிப்பிட்டு, ஆங்காங்கே சிறப்பான படங்களையும் அச்சிட்டுள்ளது பயணியர்களை உடன் தொடர்பு திருக்கோயில்களுக்கு பயணிக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது பாராட்டுதற்குரியது.

இந்நூல் இன்று வெளியாக உழைத்திட்ட காஞ்சிபுரம் உதவி ஆணையர் திரு. பி. வாசுநாதன் அவர்களையும், அவரோடு இணைந்து இந்நூல் வடிவம் பெற சிறப்பு செயலாற்றிய அனைத்து செயல் அலுவலர்கள் மற்றும் ஆய்வர்களையும், இறைவன் அருளால் எந்நாளும் எல்லாம் வளமும் பெற்று நிறைவுடன் வாழ வாழ்த்துவதுடன், இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய ஸ்ரீ காஞ்சி ஜெகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகளை வணங்கி, மேலும் வாழ்த்துரை வழங்கிய மேன்மை தங்கிய இத்துறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், செயலாளர் அவர்கள், சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் ஆகியோர்களுக்கு எனது பணிவான நன்றியை உரிய தாக்கி முதல் தொகுதியாய், இம்மண்டலத்தில் முதன்முதலாய் வல்லக்கோட்டை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் நிதியிலிருந்து வெளி வரும் இந்நூலைப் பலரும் பெற்று ஆன்மீகத்தை நாடி இறைவன் அருள் பெற இனிதே வேண்டுகிறேன்.

அன்புடன்

(ப. ராஜா)

வேலூர்
நாள் : 9.4.2002

நூல் உருவாக உதவிய கரங்கள்

செயல் அலுவலர்கள்

திருவாளர்கள்

அ. இராமசாமி, இர. பொன்சுவாமிநாதன், வி. நடராஜமணி

பி. கோதண்டராமன், வ.ச. மறைமலை, இர. பாரிவள்ளல்,

கோ. இலட்சுமிநாதன், வீ. சுந்தரமூர்த்தி, ஏ.எஸ்.விஷ்ணுபிரசாத்,

இரா.ரகுநாதன்

மு. கண்ணபிரான், என். பாலசுப்பிரமணியன்

எம்.இராஜேந்திர குமார், வைகுண்டதாஸ், து. வள்ளுவன்,

ச. வேலரசு, ஏ. ரமேஷ் குமார், அ. ரமேஷ், ச. நடராசன்,

சு. லோகநாதன், மா. வெள்ளைச்சாமி, ஆர்.டி. கார்த்திகேயன்.

ஆய்வர்கள்

ஜி. கிருஷ்ணமூர்த்தி, என்.முனுசாமி, எம். பிச்சுமணி,

திருமதி. பி. கஸ்தூரி

வடிவமைப்பு மற்றும் உருவாக்கம்

பி. வாசுநாதன் — உதவி ஆணையர், காஞ்சிபுரம்

இரா. இரகுநாதன் — செயல்அலுவலர், திருநின்றவூர்

மேற்பார்வை

ப.ராஜா பி.எஸ்சி. பி.எல்.

இணை ஆணையர் வேலூர்.

பொருளடக்கம்

பக்கம்

முதல் வணக்கம் 1

பயணியர் கவனத்திற்கு 2

திருக்கோயில்களின் பெயர் அட்டவணை

1. அருள்மிகு பக்தவத்சலப் பெருமாள் திருக்கோயில், திருநின்றவூர் 5
2. அருள்மிகு இருதயாலீஸ்வரர் திருக்கோயில், திருநின்றவூர் 7
3. அருள்மிகு திருமழிசையாழ்வார் (ம) ஜெகந்நாதப் பெருமாள் திருக்கோயில், திருமழிசை 9
4. அருள்மிகு ஒத்தாண்டீஸ்வரர் திருக்கோயில், திருமழிசை 10
5. அருள்மிகு திருக்கச்சி நம்பிகள் (ம) வரதராஜப் பெருமாள் திருக்கோயில், பூவிருந்தவல்லி 11
6. அருள்மிகு கிருஷ்ணசாமி (ம) கோதண்டராமசுவாமி திருக்கோயில், மலையம்பாக்கம் 13
7. அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் (ம) தாத்ரீஸ்வரர் திருக்கோயில், திருமணம் (சித்துக்காடு) 13
8. அருள்மிகு பாலீஸ்வரர் திருக்கோயில், பாரிவாக்கம் 14
9. அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு 15
10. அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவேற்காடு 16
11. அருள்மிகு ஊன்றீஸ்வரர் திருக்கோயில், பூண்டி 16
12. அருள்மிகு வாசீஸ்வர சுவாமி திருக்கோயில், திருப்பாச்சூர் 16
13. அருள்மிகு சுப்பிரமணி சுவாமி திருக்கோயில், திருத்தணி 17
14. அருள்மிகு வடஆரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு 18
15. அருள்மிகு மகிஷாசுரமர்த்தினி திருக்கோயில், மத்துார் 20
16. அருள்மிகு சந்திரசேகர திருக்கோயில் கும்மிடிப்பூண்டி 21

17. அருள்மிகு திருக்கள்ளீஸ்வரர் திருக்கோயில், திருக்கண்டலம் 21
18. அருள்மிகு வைகுண்டப் பெருமாள் (ம) எம்பார்சுவாமி திருக்கோயில், மதுரமங்கலம் 22
19. அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் (ம) அருளாளர் பாஷியகார சுவாமி திருக்கோயில், திருப்பெரும்புதுார் 23
20. அருள்மிகு சோமநாதீஸ்வரர் திருக்கோயில், சோமங்கலம் 24
21. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குன்றத்துார் 24
22. அருள்மிகு நாகேஸ்வர சுவாமி திருக்கோயில், குன்றத்துார் 25
23. அருளாளர் சேக்கிழார் திருக்கோயில், குன்றத்துார் 26
24. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்,வல்லக்கோட்டை 27
25. அருள்மிகு சுந்தரேஸ்வர சுவாமி திருக்கோயில், கோவூர் 28
26. அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோயில், மணிமங்கலம் 29
27. அருள்மிகு வைகுண்டப்பெருமாள் (ம) காமாட்சி அம்மன் திருக்கோயில், மாங்காடு 31
28. அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம் 32
29. அருள்மிகு திரிகால ஞானேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் 37
30. அருள்மிகு சங்குபாணி விநாயகர் திருக்கோயில், காஞ்சிபுரம் 37
31. அருள்மிகு ஐராவதேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் 37
32. திருநெறிக் காரைக்காடு காஞ்சிபுரம் 38
33. அருள்மிகு சித்திரகுப்தன் திருக்கோயில், காஞ்சிபுரம் 38
34. அருள்மிகு ஜுரகரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் 39
35. ஓணகாந்தன் தளி சலந்தரேஸ்வரம், காஞ்சிபுரம் 39
36. அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் 40

37. அருள்மிகு நகரீஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் 41
38. அருள்மிகு கச்சி அனேக தங்காவதம், காஞ்சிபுரம் 41
39. குமரக்கோட்டம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்,காஞ்சிபுரம் 42
40. அருள்மிகு மகா ஆனந்த ருத்ரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் 43
41. முப்புராரிக் கோட்டம் காஞ்சிபுரம் 43
42. அருள்மிகு விளக்கொளிப் பெருமாள் (ம) தூப்புல் வேதாந்த தேசிகர் திருக்கோயில், காஞ்சிபுரம் 44
43. அருள்மிகு கள்வர் பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம் 46
44. அருள்மிகு ஏகாம்பர நாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் 46
45. திருக்கச்சி மயானம், காஞ்சிபுரம் 49
46. அருள்மிகு நிலாத்திங்கள் துண்டப் பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம் 49
47. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம் 50
48. அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் 51
49. அருள்மிகு பணாமுடீஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் 52
50. அருள்மிகு காயாரோகணீஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் 53
51. அருள்மிகு வைகுண்டப்பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம் 54
52. அருள்மிகு வழக்கறுத்தீஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் 55
53. அருள்மிகு சாலபோகம் கைலாசநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் 56
54. அருள்மிகு கனகதுர்கையம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம் 57
55. அருள்மிகு ஆதிபீடாபரமேஸ்வரி காளிகாம்பாள் திருக்கோயில், காஞ்சிபுரம் 58
56. அருள்மிகு அஷ்டபுஜப் பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம் 59
57. அருள்மிகு உலகளந்தப் பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம் 60

58. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்,
ஐயங்கார்குளம் 62
59. அருள்மிகு யதோத்காரி பெருமாள் திருக்கோயில்,
காஞ்சிபுரம் 63
60. அருள்மிகு திருமேற்றளீஸ்வரர் திருக்கோயில்,
காஞ்சிபுரம் 63
61. அருள்மிகு பாண்டவதூதப் பெருமாள் திருக்கோயில்,
காஞ்சிபுரம் 65
62. அருள்மிகு சஞ்சீவராயர் திருக்கோயில்,
ஐயங்கார்குளம் 66
63. அருள்மிகு திருப்பவளவண்ணர் திருக்கோயில்,
காஞ்சிபுரம் 68
64. அருள்மிகு சந்தவெளியம்மன் திருக்கோயில்,
காஞ்சிபுரம் 68
65. அருள்மிகு முத்தீஸ்வரர் திருக்கோயில்,
காஞ்சிபுரம் 69
66. அருள்மிகு விஜயராகவப் பெருமாள்
திருக்கோயில்,திருப்புட்குழி 70
67. அருள்மிகு அந்தகேசம், திருப்புட்குழி 71
68. அருள்மிகு வராகீஸ்வரர் (ம) தாமோதரப்பெருமாள்
திருக்கோயில், தாமல் 72
69. அருள்மிகு நரசிங்கேசம், தாமல் 72
70. அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் (ம) கூரத்தாழ்வார்
திருக்கோயில், கூரம் 73
71. அருள்மிகு தட்சிணாமூர்த்தி (ம) கைலாசநாதர்
திருக்கோயில், கோவிந்தவாடி 74
72. அருள்மிகு திரைலோக்கிய நாதர் திருக்கோயில்,
திருப்பருத்திக்குன்றம் 75
73. அருள்மிகு ஆதிபட்டாரகர் திருக்கோயில்,
ஆற்பாக்கம் 79
74. அருள்மிகு மாகறலீஸ்வரர் திருக்கோயில், மாகறல் 80
75. அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், பெருநகர் 82
76. அருள்மிகு இரட்டைத்தாளீஸ்வரர் திருக்கோயில்,
உத்திரமேரூர் 83
77. அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி
திருக்கோயில், உத்திரமேரூர் 84

78. அருள்மிகு சுந்தர வரதராஜப் பெருமாள் (ம) வைகுண்ட வாசப் பெருமாள் திருக்கோயில், உத்திரமேரூர் 84
79. அருள்மிகு அம்பலவாணேஸ்வரர் திருக்கோயில், அங்கம்பாக்கம் 85
80. அருள்மிகு அப்பன் வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில், திருமுக்கூடல் 86
81. அருள்மிகு வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில், திருப்புலிவனம் 88
82. அருள்மிகு கடம்பநாத சுவாமி திருக்கோயில், கடம்பர் கோயில் 89
83. அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், இளையனார் வேலூர் 90
84. அருள்மிகு குணந்தந்த நாதீஸ்வரர் திருக்கோயில், ஒரக்காட்டுப்பேட்டை 91
85. அருள்மிகு காலீஸ்வரர் திருக்கோயில், சீட்டனஞ்சேரி 92
86. அருள்மிகு லட்சுமிநரசிம்ம சுவாமி திருக்கோயில், பழைய சீவரம் 93
87. அருள்மிகு சக்திவிநாயகர் திருக்கோயில், செங்கல்பட்டு 94
88. அருள்மிகு மருந்தீஸ்வரர் (ம) தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருக்கச்சூர் 95
89. அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில், செங்கல்பட்டு 96
90. அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், செங்கல்பட்டு 97
91. அருள்மிகு நந்தீஸ்வரர் திருக்கோயில், நந்திவரம் 98
92. அருள்மிகு அகோரவீரபத்திர சுவாமி திருக்கோயில், அனுமந்தபுரம் 99
93. அருள்மிகு பாடலாத்திரி நரசிம்மப் பெருமாள் திருக்கோயில், சிங்கப்பெருமாள் கோயில் 99
94. அருள்மிகு நித்யகல்யாணப் பெருமாள் திருக்கோயில், திருவிடந்தை 101
95. அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர் 102
96. அருள்மிகு ஸ்தலசயனப் பெருமாள் திருக்கோயில், மாமல்லபுரம் 104
97. நெம்மேலி அருள்மிகு ஆளவந்தார் நாயக்கர் அறக்கட்டளை மாமல்லபுரம் 106

98. அருள்மிகு திருவரேஸ்வரர் திருக்கோயில்,
சதுரங்கப்பட்டினம் 106
99. அருள்மிகு மலைமண்டலப் பெருமாள்
திருக்கோயில், சதுரங்கப்பட்டினம் 107
100. அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில்,
திருக்கழுக்குன்றம் 108
101. அருள்மிகு ஞானபுரீஸ்வரர் திருக்கோயில்,
திருவடிசூலம் 109
102. அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயில்,
பொன்விளைந்த களத்தூர் 110
103. அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில்,
பொன்விளைந்த களத்தூர் 111
104. அருள்மிகு முன்குடுமீஸ்வரர் திருக்கோயில்,
பொன்விளைந்த களத்தூர் 111
105. அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள்
திருக்கோயில், திருமலை வையாவூர் 112
106. அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில்,
மதுராந்தகம் 114
107. அருள்மிகு வெண்காட்டீஸ்வரர் திருக்கோயில்,
மதுராந்தகம் 115
108. அருள்மிகு ஆட்சிஸ்வரர் திருக்கோயில்,
அச்சிறுபாக்கம் 116

இணைப்புகள்

இப்பிரிவின் மங்களாசாசனம் பெற்ற
திருக்கோயில்கள் பட்டியல் 118
இப்பிரிவின் பாடல் பெற்றத் தலங்கள் பட்டியல் 118
இப்பிரிவில் அவதரித்த ஆழ்வார்கள், ஆசாரியர்கள்,
நாயன்மார்கள் பட்டியல் 119
இப்பிரிவின் சில திருமடங்கள் பட்டியல் 120
கார்ஞ்சிபுராணத்தில் இடம்பெற்றுள்ள திருத்தலங்கள்
பட்டியல் 121
காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள பிற கோயில்கள் பட்டியல் 124
முக்கிய அலுவலக, திருக்கோயில்கள் தொலைபேசி
எண்கள் பட்டியல் 126
கருவி நூல்கள் 128
மையம், தொலைவு, வசதிகள் குறித்த இணைப்பு 129


திருவள்ளூர் மாவட்டம்
ஆந்திர மாநிலம்
சத்தியவேடு
கும்மிடிபூண்டி
புலிகாட்
நாகாலாபுரம்
ஊத்துக்கோட்டை
பொன்னேரி
நகரி
பெரியபாளையம்
வெங்கல்
திருகண்டலம்
தாமரைப்பாக்கம்
பொன்பாடி
மத்தூர்
பூண்டி
எண்ணூர்
திருத்தணி
திருவள்ளூர்
திருப்பாச்சூர்
பழையனூர்
திருவாலங்காடு
புழல் ஏரி
மாதவரம்
திருவெற்றியூர்
திருமுல்லைவாயில்
திருநின்றவூர்
ஆவடி
அம்பத்தூர்
அரக்கோணம்
திருவேற்காடு
சென்னை
திருமழிசை
பூவிருந்தவல்லி
தக்கோலம்
சைதாபேட்டை
வேலூர்
ஸ்ரீபெரும்புதூர்
தாம்பரம்
வாலாஜப்பேட்டை
மணிமங்கலம்
காவிரிபாக்கம்
வண்டலூர்
காஞ்சிபுரம்


காஞ்சிபுரம் மாவட்டம்
Scale 0 10 Kms
19
திருவள்ளூர் மா.
ஆவடி
அம்பத்தூர்
சென்னை
பூவிருந்தவல்லி
சைதாபேட்டை
கோவூர்
மாங்காடு
குன்றத்தூர்
வேலூர்
ஸ்ரீபெரும்புதூர்
மதுரமங்கலம்
தாம்பரம்
கோவிந்தவாடி
மணிமங்கலம்
கூரம்
தாமல்
திருபுட்குழி
படப்பை
வல்லக்கோட்டை
முட்டுக்காடு
திருப்பருத்திக்குன்றம்
நந்திவரம்
காஞ்சிபுரம்
வாலாஜபாத்
மறைமலைநகர்
ஐயங்கார்குளம்
பழைய சீவரம்
திருக்கச்சூர்
கோவளம்
சிங்கப்பெருமாள் கோவில்
திருவிடந்தை
திருமுக்கூடல்
இளையனார் வேலூர்
ஆற்பாக்கம்
மாகறல்
அனுமந்தபுரம்
திருப்போரூர்
செங்கல்பட்டு
திருப்புலிவனம்
பொ.வி.களத்தூர்
பெருநகர்
மாமல்லபுரம்
உத்திரமேரூர்
திருக்கழுக்குன்றம்
மணப்பாக்கம்
மலைவையாவூர்
வேடந்தாங்கல்
சதுரங்கப்பட்டிணம்
திருவண்ணாமலை மா.
மதுராந்தகம்
வந்தவாசி
அணைக்கட்டு
சோத்துப்பாக்கம்
மேல்மருவத்தூர்
சித்தாமூர்
அச்சிறுபாக்கம்
தெள்ளார்
தொழுப்பேடு
செய்யூர்
பெரும்பேர்கண்டிகை
வங்காள
விரிகுடா
கோட்டைகாடு
குனாம்பேடு
திண்டிவனம்
விழுப்புரம் மா.
மரக்காணம்

முதல் வணக்கம்

'காசியிலும் வீசம் பெரியது காஞ்சி' என்ற முதுமொழிக்கு ஏற்ப, காசியைப் போன்ற புராண புண்ணிய முக்கியத்துவம் உள்ள காஞ்சிபுரம் நகரினை மையமாகக் கொண்டு, பூவிருந்தவல்லி, திருத்தணி, கும்மிடிப்பூண்டி, ஸ்ரீபெரும்புதூர், உத்திரமேரூர், செங்கற்பட்டு, மகாபலிபுரம், மதுராந்தகம், ஆகிய வட்டங்களைச் சுற்றிப் பரவியுள்ள பல்வேறு முக்கியத் திருக்கோயில்களைப் பற்றிய குறிப்புகள் இயன்றவரை சுருக்கமாக, இக்கையேட்டில் தரப்பட்டுள்ளன!

தமிழ்நாட்டில் தொண்டை மண்டலம் என்பதன் முக்கிய பகுதியாக விளங்கும் இக்காஞ்சி மாவட்டத் திருக்கோயில்கள் காஞ்சிபுரம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையரின் பார்வையிலும் வேலூர் மண்டல இணை ஆணையரின் ஆளுகைக்குட்பட்ட மேலான நிர்வாகத்திலும் அமைந்துள்ளன.

தல யாத்திரை மேற்கொள்வோருக்கும், கலை, பண்பாடு, ஆன்மீகம், புராணம், புராதனம் போன்ற, சுவைமிகு கண்ணோட்டங்களிலும் திருக்கோயில்களுக்கு யாத்திரை செல்ல விரும்புவோர்களுக்கு வசதியாக இக்கையேடு வெளியிடப்படுகிறது. இதனைப்படித்துப் பயன்பெறுவோர், அந்தந்தத் திருக்கோயில்கள்குறித்த அதிகத்தகவல்களை அங்கு நேரில் செல்லும்போது தவறாது விசாரித்து அறிந்து கொள்ளவும், தல புராணப் புத்தகங்களோ, இலவசக் கையேடுகளோ அங்கு வெளியிடப்பட்டுள்ள விபரம் அறிந்து, அதனைப்பெற்றுப் படித்துப் பெரும்பயன் அடையவும் வேண்டுகிறோம்!

இத்திருக்கோயில்கள் இந்து சமய, மற்றும் இந்தியத்திருநாட்டின் விலைமதிக்க இயலாத பொக்கிஷங்கள் என்பதையும், அவைகளைப் பொலிவும் புகழும் சிறிதும் குன்றாமல் எதிர்வரும் சந்ததியினருக்கு மிகுந்த பொறுப்புடன் ஒப்பளிக்க வேண்டிய மாபெரும் கடமை நமக்குண்டு என்பதையும் நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து, திருக்கோயில்களின் நலம் குறித்த நம்மாலான தொண்டினை அவசியம் ஆற்றிட வேண்டுமென்பது எமது தமிழக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் அவாவாகும்.

வேலூர் மண்டலம், காஞ்சிபுரம் பிரிவு
திருக்கோயில்களின் நிர்வாகிகள், அலுவலர்கள்.
மற்றும் அனைத்து ஆலயப் பணியாளர்கள்.

பயணியர் கவனத்திற்கு.......

⌘ குடத்துள் இட்ட விளக்காக பல திருக்கோயில்களும் அரிய சிற்பங்களும், தொல்பொருள் முக்கியத்துவம் பெற்றும் புராண இதிகாச பெருமைகள் அறியப்படாமல் இருப்பதே உண்மை ! ஆழ்வார்களும், நாயன்மார்களும் இன்னும் ஆச்சாரியர்கள் பலரும் வந்து வழிபட்டு, முக்திப்பேறுபெற்ற பல தலங்களை, தோற்றக்குறைவாலும் மக்கள் வருகைக் குறைவாலும் கீர்த்தி அற்றவை எனக் கருதிடாமல், பேசும் தெய்வங்கள் உறையும் அத்தலங்களுக்கு நாம் தவறாமல் விரும்பி விசேடமாகச் சென்று தரிசித்து அருள் பெற்று வருவது விரும்பத்தக்கது.

⌘ பிரார்த்தனையாக ஆபரணங்களை சமர்ப்பிப்பதும், மண்டபங்கள் கட்டுவிப்பதும் மட்டுமே பெருமையுடையது அன்று. இயன்ற வரை திருக்கோயில்களைச் சார்ந்த அறச்செயல் ஏதாவது ஒன்றை மேற்கொள்வது சிறந்தது என சிவஞான முனிவர் காஞ்சிப் புராணத்தில் எடுத்தியம்புகிறார்.

⌘ ஒரே நாளில் பற்பல திருக்கோயில்களுக்கும் பரபரப்பாகவே செல்ல வேண்டியிருக்கலாம். நன்றாக நினைவில் கொள்ளுமாறு நிழற்படங்களை எடுத்துக்கொள்ளும் வண்ணம் கைக்கேமராவுடன் சென்று, அனுமதிக்கப்பட்ட இடங்களில் திருக்கோயிலின் உட்புறமோ வெளியிலோ புகைப்படம் எடுத்திடத் தவற வேண்டாம்.

⌘ அடக்கத்துடனும், பணிவுடனும், பரிவுடனும், பக்தியுடனும், பரோபகாரத்துடனும் பயணம் மேற்கொள்ள வேண்டியது நினைவு கொள்ளத்தக்க நற்பயணத்தையும் நல்ல நண்பர்களையும் ஏற்படுத்தும்.

⌘ உலகளாவிய திருவிழாச் சிறப்புக்களைக் கொண்ட திருக் கோயில்கள் அமைந்த தமிழகத்தில் நாம் ஒவ்வொருவரும் வருடத்திற்கு ஒருமுறை ஒரு பெரிய திருத்தலத் திருவிழாவிற்குச் சென்று வரவேண்டும். பிற சமயங்களில் வாழுமிடத்திற்கு அண்மையில் அமைந்த திருக்கோயில்களின் திருவிழாக்களுக்கும் சென்று கண்டுகளிப்பது ஆன்ம சுத்தி அளிக்கும்.

⌘ புராண இதிகாசங்களை அந்தந்த தலத்திற்குரிய சிறப்பு சிறு நிகழ்வுகளோடு திருக்கோயில் தலபுராணம் தெரிவிக்கும். அதற்கு தத்துவார்த்தமாகப்பொருள் உணராமல் நேரிடையாகப் பொருள்கொண்டு குதர்க்கமான விளக்கங்களால் விமர்சிப்பது தவறு! ஆலயங்களில் எந்தவொரு விளக்கமும் மெய்ஞான அடிப்படையில் மேற்கொள்ளவேண்டும். விஞ்ஞான விளக்கங்களைக் கொடுத்தும், பெற்றும் குழம்பி நிற்பதை தவிர்க்கவும்.

⌘ இப்பிரிவில் உள்ள திருக்கோயில்கள் பொதுவாக காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும், மீண்டும் மாலை 4.00 மணி முதல் சுமார் 8.30 மணி வரையிலும் மட்டுமே திறந்திருக்கும். இந்த நிர்ணயத்தை கருத்திற்கொண்டு அவரவர் உணவு இடைவேளைக்கும் ஓய்வு எடுத்தலுக்கும் சற்று அதிகதொலைவு பிரயாணம்மேற்கொள்ளவும், திரும்பவும், கணக்கிட்டுக்கொள்ளுதல் நலம். நகரங்களைத் தவிர்த்து தொலை தூரத்தில் உள்ள திருக்கோயில்களையும் தரிசித்து வர வசதியாக அனைவரும் எடுத்துச் செல்லத்தக்க எளிய சித்திரான்னங்கள் சிற்றுண்டிகளை கையிற்கொண்டு செல்லுதல் சிறந்தது.

⌘ இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையால் சிறப்பு ஆன்மீக வகுப்புகள், அர்ச்சகர்கள் ஓதுவார்கள் புத்தொளிப் பயிற்சி, இலவசத் திருமணம், சமயச் சான்றோர் விழாக்களில் கருத்தரங்கு சமயச் சொற்பொழிவு போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நன்கறிந்து பயன்பெறுக.

⌘ திருக்கோயில் என்னும் மாத இதழ் அறநிலையத் துறையினால் பிரதி ஒன்று ரூ.5/ க்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூ.60/ .ஆயுள் சந்தா ரூ.500/ இதழ் பெற அணுக வேண்டிய முகவரி, ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, உத்தமர் காந்தி சாலை, சென்னை 34.

⌘ பெரும்பாலும் ஆலய செயல் அலுவலர் எனும் அரசு அலுவலரின் பொறுப்பில் திருக்கோயில்கள் அறங்காவலர்களின் துணையோடு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. பணமோ பொருளோ அணிகளோ செலுத்தவும், இரசீது பெறவும் செயல் அலுவலரை மட்டுமே அணுகவும். பிற எந்தவொரு நபரும் சிப்பந்திகள் உட்பட ஆலயச் சார்பில் எவற்றையும் பெறத்தக்கவர் அல்ல.

⌘ திருக்கோயில்களில் திருமணங்கள் நிகழ்த்த வேண்டுமெனில் இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும் சட்டப்படி வயதும், பிற தகுதிகளும் உடையவராயும் இருக்க வேண்டும். திருக்கோயில் சார்பில் கேட்கும் சான்றிதழ்களை முறையாகவும் முன்னதாகவும் கொடுத்தல் அவசியம். எனவே, முன்னதாகக் கோவில் அலுவலகத்தில் விண்ணப்பம், பிற தகவல்கள் பெற வேண்டியது அவசியம்.தொலைபேசியைப் பயன்படுத்தலும் நலம்.

⌘ திருக்கோயில் வளாகத்தில் தூய்மை காக்க வேண்டியது, முதற்படி. நாமே அசுத்தம் செய்யாதிருப்பதும், அப்படிச் செய்பவரைத் தடுப்பதும் நலம். தவறான இடங்களில் விளக்கேற்றியும் தவிர்க்க வேண்டிய கற்பூரத்தை ஆங்காங்கு ஏற்றியும், விபூதி, குங்கும பிரசாதங்களை

சுற்றிலும், தூண்களிலும் கொட்டியும் தூய்மைக்கேடு வராவண்ணம், குறிப்பாக, உரிய இடங்களில் உணவருந்தி, உணவருந்திய இடத்தை தாமே சுத்தம் செய்து விட்டுப்போவதும் ஒரு திருப்பணியே ஆகும்.

⌘ ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் அலுவலகமும், நிர்வாகியர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்டப்படி இயங்கி வருகிறார்கள். ஆனால் இத்திருக்கோயில்களுக்குச் சிறப்பு அறச் செயல்கள் அன்னதானம் திருப்பணிகள் ஆகியவற்றை மேற்கொள்வதாக விளம்பரம் செய்து உதவி பெறுகின்ற அமைப்புகளின் செயல்பாடு சட்டத்திற்குப் புறம்பானது. அவற்றிற்கு ஆதரவு தராமல் தக்க சான்றுடன் அவை குறித்து அலுவலகத்திற்குப் புகார் அளிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

⌘ திருக்கோயில் பாக்கிகளைச் செலுத்தாத உங்களின் நண்பர்கள், உறவினர்கள், தெரிந்தவர்கள் இருந்தால் அவற்றை உடனே பாக்கியின்றிச் செலுத்திடச் செய்யுங்கள். அதைவிடக் காணிக்கை உள்ளதா என்ன?

இப்பிரிவில் **தமிழக முதல்வர் டாக்டர். ஜெ. ஜெயலலிதா** அவர்களின் **அன்னதானத் திட்டம்** கீழ்க்கண்டத் திருக்கோயில்களில் நடைபெறுகிறது.

1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி
2. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
3. அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயில், மாங்காடு
4. அருள்மிகு தேவ ராஜ சுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம்



1. அருள்மிகு பக்தவத்சலப் பெருமாள் திருக்கோயில் திருநின்றவூர்



பக்தவத்சல பெருமாள் தேவியருடன்

திருவாகிய திருமகள் வந்து நின்று தவம்புரிந்த தலம் ஆதலால் திருநின்றவூர் என்று பெயர். திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி வட்டத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. பூவிருந்தவல்லியிலிருந்து பேருந்தில் வந்தால் திருநின்றவூர் இராமர் கோயில் பஸ் நிறுத்தத்திலும், உயர்நீதி மன்றத்திலிருந்து வருபவர்கள் திருநின்றவூர் இரயில் நிலையத்திலும் இறங்கி திருக்கோயிலை அடையலாம்.

இத்திருக்கோயிலின் முன்புறம் தோப்பும், பிற்காலச் சோழ, விஜய நகர காலத்தை சார்ந்த இராஜ கோபுரமும் அமைந்துள்ளது. ஆகமமுறைப்படி பலிபீடம், கொடிமரம், சிறிய திருவடி சன்னதி, ரங்கமண்டபம் என்னும் மகாமண்டபம் உள்மண்டபம். திருவுண்ணாழிச்சுற்று என்ற அமைப்பில் உள்ளது. திருமால் திருமகள், பூமகளுடன் நின்ற கோலத்தில் பஞ்சாயுதம் தாங்கி சுமார் பதினோரு அடி உயரத்தில் காட்சி தருகிறார். மூலவர் மற்றும் உற்சவர் திருநாமம் அருள்மிகு பக்தவத்சலப் பெருமாள் ஆகும். மூலவர் பெருமாளின் வலதுபுறம் தாயார் சன்னதி உள்ளது. வருண பகவான் உலகத்தைக் காப்பவன் அவனைக் காப்பவள் இலக்குமிதேவி. அவளை வருணன் 'என்னைப் பெற்ற தாயே' என அழைத்ததால் என்னைப் பெற்ற தாயார் என்ற திருநாமத்துடன் தாயார் அமர்ந்த கோலத்தில் எழுந்தருளுகிறார்.

புராதனமான சுதர்சன ஆழ்வார் சன்னதியும், ஆதிசேஷனுக்கு என உருவோடு கூடிய ஆதிசேஷன் தனி சன்னதியும் உள்ள ஒரே தலம். ஆண்டாள், ஆழ்வார்கள், அனுமார், ஏரிகாத்த ராமர் ஆகிய தனி சன்னதிகளும் உள்ளன.

தினமும் காலை 7.30 முதல் 11.30 வரையும், மாலை 4.30 முதல் 8.30 வரையும் தரிசனத்திற்காகவும், பூசைக்காகவும் சன்னிதிகள்

திறந்திருக்கும். பாஞ்சராத்திர ஆகமம், விமானம் ஸ்ரீநிவாச விமானம். தல விருட்சம் பூச்சொரியும் பாரிஜாதம் எனப்படும் பவளமல்லி. தீர்த்தம் வருண புஷ்கரணி எனப்படும். இத்தலத்தில் தரிசிப்பதற்கு ஒவ்வொரு பவுர்ணமி, உத்திரம், திருவோணம், வெள்ளி, சனிக்கிழமைகள் மிகவும் உகந்த நாட்களாகும்.

தங்க கருட சேவை

ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள், திருநட்சத்திரங்கள், சித்ரா பௌர்ணமி, ஆனிகருடன், ஆடிகருடன், பவித்ரோத்சவம், புரட்டாசிசனிக்கிழமைகள், திருக்கல்யாண உற்சவம், தீபாவளி, திருக்கார்த்திகை, தனுர்மாதம், பகல் பத்து, இராப்பத்து, வைகுண்ட ஏகாதசி பரமபதவாசல் திறப்பு, போகி, திருக்கல்யாணம், தைப்பொங்கல், கனு பார் வேட்டை, இரத சப்தமி, மாசிமகம், பங்குனி மாதம் பத்து நாட்கள் பிரம்மோற்சவத் திருவிழாவும், அதன் மூன்றாம் நாள் அதிகாலை கருடசேவையும், ஏழாம் நாள் திருத்தேரும் பத்தாம் நாள் சப்தாவர்ண உற்சவமும் மிகச் சிறப்பானவை.

திருமங்கை ஆழ்வார் இக்கோயிலை கடல் மல்லையைப் பாடும் போதும், திருக்கண்ண மங்கையைப் பாடும் போதும் இரு பாடல்களில் 'நின்றவூர் நின்ற நித்திலத்தை' எனவும் 'நின்றவூர் நித்திலம்' எனவும் மங்களா சாசனம் செய்து பாடுகிறார்.

திருக்கோயில் உட்புறம்

2. அருள்மிகு இருதயாலீஸ்வரர் திருக்கோயில், திருநின்றவூர்

மேற்கு நுழைவாயில்

திருநின்றவூர் அருள்மிகு பக்தவத்சலப்பெருமாள் திருக்கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள திருக்கோயிலாகும். புகைவண்டி நிலையத்திலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் அமைந்து உள்ளது. பூவிருந்தவல்லியிலிருந்து வரும் பேருந்தில் பெருமாள் கோயில் நிறுத்தத்தில் இறங்கி 200 அடி நடந்தால் திருக்கோயிலை அடையலாம்.

அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவரான பூசலார் நாயனார் வரலாற்றோடு தொடர்புடைய திருக்கோயிலாகும். ராஜசிம்ம பல்லவன் கட்டிய கைலாசநாதர் கோயிலுக்கு குடமுழுக்கு நாள் குறிக்க இறைவன் மன்னன் கனவில் தோன்றி அதே நாளில் பூசலார் நாயனார் கட்டியுள்ள கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள இருப்பதாகத் தெரிவித்தார். மன்னன் கும்பாபிஷேகம் நடக்கும் கோயிலைக் காண திருநின்றவூர் வர பூசலார் நாயனாரை அழைத்து விசாரித்த போது பூசலார் நாயனார் தன் மனதிற்குள் கோயில் கட்டியதைக் குறிப்பிட்டார். அதே நாளில் குடமுழுக்கு செய்யத் தீர்மானித்திருப்பதையும் தெரிவித்தார். அவரது அவாவினைப் பூர்த்தி செய்யும் வகையில் திருநின்றவூரில் ஆலயம் ஒன்றை எழுப்பி குடமுழுக்கும் மன்னன் செய்வித்தான். அத்திருக்கோயில் இன்றும் இருக்கிறது. தவிர மனதிற்குள் ஆலயம் எழுப்பிய மகானை சிவலிங்கத்தை வணங்கும் வகையில் ஒரு கோயிலில் அமைத்தான். அக்கோயில் மனதிற்குள் ஆலயம் எழுப்பிய 'மன ஆலய ஈஸ்வரன்' என்பது மாறி 'இருதய ஆலய ஈஸ்வரன்' என வடமொழியாக்கம் பெற்றது.

'கஜபிருஷ்டம்' என்னும் அமைப்பில் தூங்கானை மாட வடிவில் அமையப் பெற்றுள்ள விமானமும் உள்ளது. இத்திருக்கோயிலில் சுவாமிக்கும், மரகதாம்பிகை அம்மனுக்கும் தனித்தனி சன்னதிகளும், விமானங்களும், பிரதான வாயில்கோபுரம் கிழக்கு நோக்கியும்,

மேற்கு நோக்கி சிறிய வாயிலும் உள்ளது. மூலவர் கிழக்கு நோக்கி சிவலிங்க வடிவில் மன ஆலய ஈஸ்வரர் (இருதய ஆலய ஈஸ்வரர்) என்ற பெயருடன் இருக்கிறார். விநாயகர், முருகர், வள்ளி, தெய்வானை, நந்தி தேவர், சண்டிகேஸ்வரர், நடராஜர் சன்னதிகள் தனித்தனியே அமைந்துள்ளன. சிவாகமப்படி ஆறு கால பூஜைகளாக நடைபெறுகின்றன. காலை 7 மணி முதல் 12 மணி வரையும் மாலை 5 மணி முதல் 9 மணி வரையும் பொது மக்கள் தரிசனத்திற்காக திருக்கோயில் திறந்திருக்கும். சுக்ரவாரம், பிரதோஷம், கிருத்திகை, பௌர்ணமி, சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனி அபிஷேகம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை, ஆருத்ரா, மகாசிவராத்திரி, தைப்பூசம், மகா சங்கராந்தி, பங்குனி உத்திரம் ஆகியவை விசேட தினங்களாகும். இருதய ஆலய ஈஸ்வரர் என்பதால் இருதயம் தொடர்பான நோய்களுக்காக பிரார்த்தனை செய்து கொள்ளும் பழக்கமும் இருக்கிறது. காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தின் நினைவாக பழமையான கைலாச நாதர் ஆலயம் ஒன்றும் இங்கு உள்ளது.

மனக்கோயில் கட்டிய பூசலாரை மன்னனும் மற்றவரும் தொழுதல்

3. திருமழிசை ஆழ்வார் மற்றும் அருள்மிகு ஜெகந்நாதப் பெருமாள் திருக்கோயில் திருமழிசை



திருமழிசை ஆழ்வார்

'மஹீசாரம்' எனச் சிலரால் வடமொழியாக்கம் பெற்று வழங்கப்பட்ட திருமழிசை 12, 13ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலேயே திருமழிசை, திருமழிசை அகரம் என வழங்கப்பட்டுள்ளது. பூவிருந்தவல்லியில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இத்திருக்கோயில் அமைந்து உள்ளது. திருமழிசை ஆழ்வாரின் அவதாரத் தலமான இவ்வூரில் 'பிருகு தீர்த்தம்' என்னும் திருக்குளம் உள்ளது. கிழக்கு நோக்கிய ராஜ கோபுரத்துடன் அருள்மிகு ஜெகந்நாதப் பெருமாள் ருக்மணி சத்யபாமாவுடன் பிருகு மார்க்கண்டேயருடன் கிழக்கு நோக்கிய சன்னதியில் காட்சி தருகிறார். திருமங்கைவல்லித்தாயார், லட்சுமி நரசிம்மர் ஆண்டாள், மணவாள மாமுனிகள் ஆகியோரின் தனிச் சன்னதிகளோடு வைகானச ஆகமப்படி நான்கு கால பூஜை நடைபெறுகிறது. காலை 8 மணிக்கு கால சந்தியும், 11 மணிக்கு உச்சிக் காலமும் 7 மணிக்கு சாயங்காலமும் 8 மணிக்கு திருக்காப்பிடுதலும் நடைபெறுகிறது. தினமும் தேசாந்திரி கட்டளை நடைபெறும். இவ்வூரில் திருமழிசை ஆழ்வார் தனிச் சன்னதியில் காட்சி தருகிறார்.



திருக்கோயில் முன்தோற்றம்

சித்திரை வருடப் பிறப்பும், திருவாடிப்பூரமும், ஆவணிப் பவித்ரோத்சவமும், புரட்டாசி நவராத்திரி, திருக்கார்த்திகை, மார்கழி பகல் பத்து, இராப்பத்து, வைகுண்ட ஏகாதசி, தனுர்மாதப்பூஜை

மாசியில் தெப்போத்சவம், பங்குனி உத்திரம், மணவாள மாமுனி திருநட்சத்திரம் ஐப்பசி உற்சவம் ஆகியவை சிறப்பான மாத உற்சவங்களாகும். தை மாதம் திருமழிசை ஆழ்வார் அவதார உற்சவம் 10 நாட்களும், ஆனி மாத பிரம்மோற்சவம் 10 நாட்களும் சிறப்பானவை. தை மாத அவதார உற்சவத்தில் 9ம் நாள் திருத்தேர் உற்சவம் நடைபெறும். தேர் நிலையை அடைய சுமார் 3 மணி நேரம் ஆகும். இத்தலம் மத்திய ஜெகந்நாதம் என அழைக்கப்படுகிறது.

அருள்மிகு வீற்றிருந்த பெருமாள் திருக்கோவில் என்னும் திருக்கோயிலும் இதன் அருகில் அமைந்துள்ளது.

4. அருள்மிகு ஒத்தாண்டீஸ்வரர் திருக்கோயில் திருமழிசை

சென்னை பூவிருந்தவல்லி திருவள்ளூர் நெடுஞ்சாலையில் திருமழிசை தலத்தில் அமைந்துள்ளது அருள்மிகு ஒத்தாண்டீஸ்வரர் திருக்கோயிலாகும். அகத்திய முனிவர் அழிஞ்சல் மரத்தின் கீழ் தம் சீடரான புலத்தியருடன் வழிபட்ட தலம் 'அழிஞ்சல் தலம்' என்பது 'அழிசை' என்றாகி 'திரு' என்னும் அடைமொழி சேர்ந்து திருமழிசை என வழங்கப்பட்டது. இங்கு இருக்கும் இறைவன் அன்பர்களின் செயலுக்கு ஒத்து அவர்கள் வழியே சென்று அவர்களை ஆண்டு அருள் செய்வதால் ஒத்து + ஆண்டு + ஈஸ்வரர் 'ஒத்தாண்டீஸ்வரர்' என அழைக்கப்பட்டார். சோழ மன்னனுக்கு வெட்டிக் கொண்ட கையை மீண்டும் அளித்ததால் 'கை தந்த பிரான்' எனவும் அழைக்கப்படுகிறார்.

அம்பிகை, அன்பர் மனம் குளிர அருள்வதால் 'குளிர்ந்த நாயகி' என்ற திருப்பெயரால் அழைக்கப்படுகிறாள் அழிஞ்சல் மரம், வில்வ மரம், பவள மல்லி ஆகியன தல விருட்சங்களாக உள்ளன. சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோயிலாகக் கருதப்படும் இக்கோயிலில் கிழக்கு நோக்கிய ஒத்தாண்டீஸ்வரர், தெற்கு நோக்கிய குளிர்ந்த நாயகி சன்னதி தவிர சோமாஸ்கந்தர், விநாயகர், முருகர், வள்ளி, தெய்வானை, நடராஜர், ரிஷப நாயகர், சண்டிகேஸ்வரர் ஆகிய சன்னதிகள் உள்ளன. தீர்த்தம் 'அகத்திய தீர்த்தம்' எனவும் வழங்கப்படுகிறது. இது கோயிலுக்குக் கிழக்கே உள்ளது.

தூங்கானை மாட வடிவில் அமைந்துள்ள மூலவரின் கருவறை, விமானம் தவிர நடராஜர் சன்னதி மீது சபாஹார விமானம்.

அம்பிகையின் சன்னதி மீது சாலகார விமானம், காட்சி தந்த நாயகர் சன்னதி மீது நீள்சதுர விமானம், சுப்ரமணியர் சன்னதி மீது அமைந்த எண்பட்டை விமானம் ஆகியவை குறிப்பிடத்தக்க விமானங்களாகும்.

காரண ஆகம முறைப்படி இருகால பூஜை நடைபெறும் இத்திருக்கோயிலின் ராஜகோபுரம் தென்திசை நோக்கி அமைந்துள்ளது. காலை 7.30 மணி முதல் 11 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் 9 மணி வரையும் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். அருள்மிகு வீர ஆஞ்சநேயர் திருக்கோயில், பஜனைக் கோயில், அருள்வாம்பிகை திருக்கோயில், எல்லையம்மன் திருக்கோயில் ஆகியவை இத்திருக்கோயிலின் உபகோயில்களாகும். அமாவாசை, பௌர்ணமி, பிரதோஷம், மாதபிறப்பு, சுக்கிரவாரம், சங்கடஹர சதுர்த்தி ஆவணியில் பிட்டு உற்சவம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, அன்னாபிஷேகம், கந்தசஷ்டி, கார்த்திகை தீபம், ஆருத்ரா, தைப்பூசம், மகா சிவராத்திரி ஆகியவற்றுடன் பங்குனி உத்திரத்தை இறுதியாகக் கொண்டு பத்து நாள் பிரம்மோற்சவமும் நடைபெறுகிறது.

5. அருள்மிகு திருக்கச்சி நம்பிகள் மற்றும் அருள்மிகு வரதராசப் பெருமாள் திருக்கோயில் பூவிருந்தவல்லி

வைணவ அருளாளர்களில் முக்கியமானவரான திருக்கச்சிநம்பிகளின் அவதாரத்தலம் பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்திற்கு வெகு அருகில் அமைந்துள்ளது. மூலவர் அருள்மிகு வரதராசப் பெருமாள் சன்னதியும், கோபுரமும் மேற்கு நோக்கி அமைந்துள்ளன. தாயாருக்கென தனி சன்னிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. தாயார் 'பூவிருந்த வல்லித் தாயார்' என அழைக்கப்படுகிறார். இதன் காரணமாகவே பூவிருந்தவல்லி எனக் கூறுவர். கல்வெட்டுக்கள் பூந்தண்மலி எனக் குறிப்பிடுகின்றன. வழக்கில் புஷ்பவல்லித்தாயார் என இத்தாயார் அழைக்கப்படுகிறார். மூலவர் வரதராசர் சன்னதிக்கு வலப்புறத்தில் அவருக்கு ஆலவட்டக் கைங்கர்யம் செய்த திருக்கச்சிநம்பிகளுக்கெனத் தனி சன்னதி உள்ளது. தவிர ஸ்ரீரெங்கநாதர், ஸ்ரீநிவாசர், கண்ணன், ஆண்டாள், ஆளவந்தார் எனத் தனித்தனி சன்னதிகள் உள்ளன. வெள்ளிக்கிழமைகளில் தாயாருக்குத் திருமஞ்சனமும், மாதந்தோறும் சனி மற்றும் முக்கியத் திருநட்சத்திரங்களில் திருமஞ்சனத்துடன் உற்சவங்களும்

நடைபெறுகின்றன. மாசி மாதத்தில் ஸ்ரீதிருக்கச்சிநம்பிகள் அவதார உற்சவம் வெகு விமரிசையாக நடத்தப்படும். பங்குனியில் மூன்று கருடன்களுடன் மங்களாசாசன உற்சவமும் தவன உற்சவமும் நடைபெறும். சித்திரையில் ரெங்கநாதருக்கும், வைகாசியில் வரதராசப்பெருமாளுக்கும், ஆடியில் ஆண்டாளுக்கும், பத்து நாட்கள் உற்சவம் திருக்கார்த்திகை, பகல்பத்து, இராப்பத்து, வைகுண்ட ஏகாதசி ஆகியவை முக்கிய திருவிழா நாட்களாகும்.

ஸ்ரீ ராமானுஜருக்கு திருக்கச்சி நம்பிகள் மூலம் வரதராஜ பெருமாளே வைணவத்தின் முக்கியம் எனக் கருதப்படும் வார்த்தைகளாகிய

★ பெருமாளே பரம்பொருள்

★ அந்திமக் காலத்தில் ஸ்மிருதி (நாமசங்கீர்த்தனம்) அவசியம் இல்லை.

★ சரண் அடைவோர்க்கு மரணத்திற்கு பின் மோட்சம் நிச்சயம் என்பவற்றை உபதேசித்தார் என்பர்.

பூவிருந்தவல்லியில் அருள்மிகு வைத்தீஸ்வரன் கோயில், அருள்மிகு பனையாத்தம்மன் கோயில், அருள்மிகு தர்மராஜா திருக்கோயில், அருள்மிகு ஐயப்பன் திருக்கோயில் என்னும் வேறு சில திருக்கோயில்களும் அமைந்துள்ளன.

திருக்கோயில் கோபுரம்

6. அருள்மிகு கிருஷ்ணசுவாமி மற்றும் அருள்மிகு கோதண்டராம சுவாமி திருக்கோயில் மலையம்பாக்கம்

பூவிருந்தவல்லியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மலையம்பாக்கம் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி 500 மீட்டர் நடந்தால் திருக்கோயிலை அடையலாம். இத்திருக்கோயில் பிரதான வாயிற்கதவும், மூலவர் சன்னதியும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. மூலவருக்கு கிருஷ்ணசுவாமி மற்றும் கோதண்டராமர் என்று பெயர் வழங்கப்படுகிறது. தாயாருக்கு சீதை என்ற பெயர். வைகானசாகம முறைப்படி இரு கால பூஜை நடைபெறுகின்றது. காலை 9 மணி முதல் 11 மணி வரையும், மாலை 6 மணி முதல் 7மணி வரையும் தரிசனத்திற்காக சன்னதி திறந்து வைக்கப்படும்.

கோதண்டராமர், கிருஷ்ணசுவாமி சன்னதிகள் தவிர நம்மாழ்வார் சன்னதி, ஆஞ்சநேயர் சன்னதி ஆகியவை உள்ளன. ஒவ்வொரு மாதமும் ரோகிணி, புனர்பூசம் ஆகியவற்றுடன் கிருஷ்ண ஜெயந்தி, ஸ்ரீ ராமநவமி, கார்த்திகை தீபம், வனபோஜனம், வைகுண்ட ஏகாதசி போன்றவையும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

7. அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் மற்றும் அருள்மிகு தாத்ரீஸ்வரர் திருக்கோயில் திருமணம் (சித்துக்காடு)

பூவிருந்தவல்லியில் இருந்து தண்டுரை பேருந்து சாலை மூலம் சென்று சித்துக்காடு என்னும் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி ஒரு கிலோ மீட்டர் சென்றால் திருக்கோயிலை அடையலாம்.

அருள்மிகு தாத்ரீஸ்வரர் திருக்கோயில்

கல்வெட்டில் இரண்டு கோவிலையும் ஒன்றாக இணைத்து திருமன்றம் அரிஹரணாலய நல்லூர் எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. திருமன்றம் என்பது திருமணம் என மருவி வழங்கியுள்ளதாக அறிய முடிகிறது.

அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் திருக்கோயில்

ஆஞ்சநேயர் சன்னதி ஒன்றும், சிறிய திருவடி சன்னதி ஒன்றும் உள்ளது. செல்லியம்மன் கோயில், மாரியம்மன் கோயில் ஆகியவை உபகோயில்களாக உள்ளன.

இருதிருக்கோயில்களுக்கும் ராஜகோபுரக் கதவு கிழக்கு நோக்கியுள்ளது. சுவாமி, தாயார் ஆண்டாள் ஆகியோருக்குத் தனித்தனி விமானங்கள் உள்ளன. பிரகாரத்தில் ஆண்டாள், தாயார், கண்ணன் ஆகியோருக்குத் தனித்தனி சன்னதிகள் உள்ளன. மூலவர் சன்னதி கிழக்கு நோக்கியிருக்கின்றது. தாயார் பெயர் சுந்தரவல்லித் தாயார். வைகானச ஆகம பூஜை நடைபெறுகிறது.

8. அருள்மிகு பாலீஸ்வரர் திருக்கோயில் பாரிவாக்கம்

பூவிருந்தவல்லியில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இவ்வூருக்கு தண்டுரை செல்லும் பேருந்தில் சென்று பாரிவாக்கம் என்னும் நிறுத்தத்தில் இறங்கினால் 500 மீட்டர் தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலின் பிரதான நுழைவு வாயில் மற்றும் மூலவர் சன்னதி கிழக்கு நோக்கியுள்ளது. சுவாமி, அம்மன், நந்தி மூவருக்கும் தனித்தனி விமானம் உள்ளது. அம்மன் பாலாம்பிகை என்ற பெயருடன் தெற்கு நோக்கியுள்ளார்.

சிவ ஆகமப் பூஜை நடைபெறுகிறது: காலை 8 மணி முதல் 10 மணி வரையும், மாலை 6 மணி முதல் 7 மணி வரையும் தரிசனத்திற்காகத் திறந்துள்ள இத்திருக்கோயிலில் காலை வேளையில் ஒரு கால பூஜை மட்டும் நடைபெறுகிறது. சிறிய சிற்றுண்டிச் சாலை அமைந்துள்ள இவ்வூரில் குறிப்பிட்ட நேரம் வரைதான் உணவு கிடைக்கும். இத்துடன் விநாயகர் சன்னதி ஒன்றும் உள்ளது. பிரகாரத்தில் அம்மன் மற்றும் சண்டிகேஸ்வரர் சன்னதிகள் உள்ளன.

ஒவ்வொரு வெள்ளியும், கிருத்திகை, பௌர்ணமி போன்ற நாட்களும், சித்திரை வருடப்பிறப்பு, விநாயகர் சதுர்த்தி, தீபாவளிப் பண்டிகை, கார்த்திகை தீபம், மகா சிவராத்திரி, ஆருத்ரா, ஆடிக் கிருத்திகை, தைப்பூசம், பங்குனி உத்திரம், பொங்கல் ஆகிய திருநாட்கள் திருவிழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன.

யாளி வாகனம்

9. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் திருவேற்காடு

சென்னையிலிருந்து பூவிருந்தவல்லி செல்லும் பெருவழிச் சாலையில் சுமார் 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இங்கு, கருமாரி அம்மன் நாக உருவில் காட்சியளித்தார் (முதன் முதலில் 1943) சிலா விக்ரஹம் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டு குடமுழுக்கும் நடைபெற்றது.

கருவறைக் காட்சி

அன்னை கருமாரி திருச்சாம்பரால் (சாம்பல் -விபூதி) வழிபடுவோரின் வினை போக்கி அருளாட்சி செய்து வருவதனால் நாளுக்கு நாள் பக்தர்கள் இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்தும் வந்து அன்னையை தரிசித்து அருள்பெற்றுச் செல்கின்றனர்.

வேற்கண்ணி அம்மை சூரர்களை மாய்ப்பதற்கு முருகப்பெருமானுக்கு வேல் கொடுத்த சக்தி இவள் என்பது புராணம். 'க' என்பது பிரம்மனையும், 'ரு' என்பது ருத்திரனையும் 'மா' என்பது மாலையும் குறிக்கும். முத்தேவர்களின் மூலசக்தி இவளே என்பது கருத்து. பஞ்சபூதங்களும் அன்னையை வழிபட்டு வேண்டிக் கொண்டதற்கு இணங்க அப்பஞ்ச பூதங்களை ஐந்து நாகங்களாகத் தன்முடி மேல் கொண்டு திருவருள் பாலித்தவள் கருமாரி.

அம்மை சிவக் கோலம் பூண்டு பிறைச்சந்திரன், மூவிலைச்சூலம், உடுக்கை, வாள், பொற்கிண்ணம் ஏந்தி சிவக்கோலம் பூண்டு சிவை, நாராயணி என ஈருருக் கொண்டு காட்சி தருவது திருவேற்காட்டில் தான்.

அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் ஆடிப்பெருவிழாவும், பிரம்மோற்சவமும் மிகச் சிறப்புற நடைபெற்று வருகிறது. இங்கு சீனிவாசப்பெருமாள் சன்னதி, சப்தமாதாக்கள், பிரத்யங்கரா சன்னதி, துர்க்கை சன்னதி, புற்றடி போன்ற பல சுற்றுச் சன்னதிகள் உள்ளன. திருக்கோயில் காலை 5 மணி முதல் இரவு 9.30 மணிவரை தொடர்ந்து நடை திறந்தேயிருக்கும். ஞாயிறு மற்றும் விழாக்காலங்களில் காலை 4.30 மணி முதல் இரவு 10.00 மணி வரை நடை திறந்திருக்கும்.

10. அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில் திருவேற்காடு.

சோழர் காலத்தைச் சார்ந்த அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், எம்பெருமான் பார்வதி தேவியுடன் திருமணக் கோலத்தில் அகத்தியருக்குக் காட்சியளித்த தலமாகும். அருணகிரிநாதர், திருஞானசம்பந்தர் ஆகியோரால் பாடல் பெற்ற தலம். அன்னையின் பெயர் பாலாம்பிகை என்பதாகும். கஜபிருஷ்ட விமானம். தலமரம் வெள்வேலம். ஆதலால் வேற்காடு திருவேற்காடு எனப்பட்டது. மூர்க்க நாயனார் அவதாரத் தலம் ஆகும். தீர்த்தம் வேததீர்த்தம் என வழங்கப்படுகிறது. பொதுவாக திருக்கோயில் காலை 7 மணி முதல் 12 வரையும், மாலை 4 முதல் இரவு 8 மணி வரையும் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும்.

11. அருள்மிகு ஊன்றீஸ்வரர் திருக்கோயில் பூண்டி

சென்னையிலிருந்து சுமார் 60 கி.மீ. தொலைவில் உள்ளது பூண்டி அருள்மிகு ஊன்றீஸ்வரர் திருக்கோயிலாகும். அம்மன் மின்னொளியம்மன். சுந்தரருக்கு காஞ்சிபுரம் வரையில் மின்னலாக வழிகாட்டியதால் அம்பாள் மின்னொளியம்மன் என்ற திருநாமத்தால் அழைக்கப்படுகிறார். சுந்தரரால் பாடல் பெற்ற தலம். கண் பார்வை இல்லாத சுந்தரருக்கு ஊன்றுகோல் கொடுத்தத் திருத்தலம். உடல் ஊனமுற்றவர்கள் இங்குள்ள இறைவனை வேண்டி உடல் வலிமை பெறுகின்றனர். தலப்பெயர் வெண்பாக்கம் என்பதாகும். தலவிருட்சம் இலந்தை. தீர்த்தம் குசஸ்தலை. சுந்தரர் சிலை கையில் கோலுடன் நிற்கும் பாவனையில் அமைந்துள்ளது.

12. அருள்மிகு வாசீசுவரசுவாமி திருக்கோயில் திருப்பாச்சூர்

இத்திருத்தலம் அருள்மிகு வீரராகசுவாமி பள்ளி கொண்டுள்ள திருவள்ளூர் என வழங்கும் புகழ்மிக்க வைணவத் தலத்திற்கு மேற்கில் அமைந்துள்ளது. சென்னை, திருத்தணி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டித் திருப்பாசூர் என்னும் இத்திருத்தலம் உள்ளது.

பாசு என்பது மூங்கிலைக் குறிக்கும், புதர்களை வேடுவர்கள் வெட்டும் போது சுயம்பு மேனியாக அருள்மிகு வாசீசுவரர் வெளிப்பட்டுத் தோன்றியபடியால் இறைவனார் இலிங்கத்

திருமேனியின் மேற்புறத்திலும் பக்கவாட்டின் இரு புறங்களிலும் வெட்டுப்பட்ட தழும்புகள் உண்டு.வேடுவர்களால் இறைவன் எழுந்தருளியுள்ள செய்தியறிந்த கரிகால் வளவன் திருக்கோயிலைக் கட்டியதாக திருக்கோயில் வரலாறு கூறுகின்றது.இத்திருக்கோயிலில் தனிச் சந்நிதி கொண்டு விளங்கும் அம்பாள் 'தங்காதலி' என்று அழைக்கப்படுகின்றார். இறைவனே அம்பாளின் வடிவழகில் மயங்கி 'தங்காதலி' என்று அழைத்ததால் இப்பெயர் உண்டானதாக அறிகின்றோம். இத்திருக்கோயிலில் உள்ள விநாயகர் சபையில், வலம் புரி விநாயகர் பிரதானமாக விளங்க இவரையும் சேர்த்துச் சிறியதும் பெரியதுமாகப் பதினோரு விநாயகர்கள் இங்கு வீற்றிருந்து அருள்பாலிப்பது தனிச்சிறப்பாகும். இக்கோயிலில் தனிச் சந்நிதி கொண்டு விளங்கும் முருகன், அடியவர்களுக்கு அருள்செல்வத்தை வாரி வாரி வழங்குவதால் செல்வ முருகன் என்றே அழைக்கப்படுகின்றான்.அருட்பிரகாச வள்ளலார், திருப்பாசூர் இறைவனைப் பாடியுள்ளார். காலை 8 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4 முதல் 7 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

13. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருத்தணிகை - 631209

திருத்தணிகை முருகன் உறையும் ஆறு படை வீடுகளில், ஐந்தாம் படை வீடாகும். நக்கீரர், அருணகிரிநாதர், இராமலிங்க அடிகளார், முத்துசாமி தீட்சதர் ஆகிய அருளாசிரியர்களால் பாடல் பெற்ற புனிதத் தலமாகும். இத்தலம் சென்னை பம்பாய் இரயில் பாதையில் அரக்கோணத்திற்கு 13 கி.மீ. தூரத்திலும், சென்னையில் இருந்து 84 கி.மீ. தூரத்திலும், திருப்பதிக்கு தெற்கே 66 கி.மீ தொலைவிலும், காஞ்சிபுரத்திற்கு வடக்கே 44 கி.மீ. தொலைவிலும், அமைந்துள்ளது. திருப்பதி செல்வோர் அவசியம் வழிபட வேண்டிய திருத்தலம். அசுரர்களையும் அவர்கள் தலைவனான சூரபதுமனையும் அழித்த முருகப் பெருமான் தணிகைக்கு எழுந்தருளி வள்ளியம்மையை மணந்து அமைதியுடன் காட்சியளிக்கின்றார். முருகன் அசுரர்களுடன் போர்

அலங்கார உற்சவர்

செய்து சினம் தணிந்து வீற்றிருப்பதால், இத்தலத்திற்கு 'தணிகை' எனப்பெயர் ஏற்பட்டது. இப்பெரும்பதி ஓர் சிறந்த பிராத்தனை தலமாகத் திகழ்கின்றது.

தங்கத் தேர்

வள்ளித்திருமணம், சிவராத்திரி, 1008 சங்கு அபிஷேகம், தமிழ்புத்தாண்டு, 1008 பால் குட விழா, தெய்வயானைத்திருமணம், ஆடிக்கிருத்திகை தெப்பத் திருவிழா, கந்தர் சஷ்டி விழா, திருப்புகழ் திருப்படித் திருவிழா ஆகியவற்றுடன் பரணிதோறும் தங்கத் தேர் புறப்பாடும் ஒவ்வொரு கிருத்திகைதோறும் வெள்ளி மயில் வாகனப் புறப்பாடும் உண்டு. அதிகாலை விஸ்வரூப தரிசனம், காலை சந்தி, உச்சிகாலம், சாயரட்சை, அர்த்தஜாமம், இரவு பள்ளியறை ஆக ஆறு கால பூஜை நடைபெறும். இத்திருக்கோயிலில் நாள்தோறும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை தொடர்ந்து தரிசனம் உண்டு. விழாக்காலங்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் பூஜை நேரங்கள் மாறுபடும். குடில்கள், தங்கும் அறைகள், திருமண மண்டபங்கள், சித்த மருத்துவமனை, நூலகம், கருணை இல்லம் ஆகியவை உண்டு. இத்திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் பல திருக்கோயில்கள் உபகோயில்களாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.



மலைத்தோற்றம்

14. அருள்மிகு வட ஆரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு

இறைவனால் 'அம்மையே' என்று அழைத்துச்சிறப்பிக்கப் பெற்ற காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து வந்து நடராசரின் திருவடிக்கீழிருந்து சிவானந்த இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் திருத்தலமே 'வடாரண்யம்' என அழைக்கப்பெறும் 'திருவாலங்காடு' திருத்தலம் ஆகும். இறைவன் காளியுடன் ஊர்த்துவ நடனமாடிய திருத்தலமாகவும், நடராசப் பெருமான் திருநடனம் புரியும் பஞ்சசபைகளுள் இரத்தின சபையாகவும் சிறப்புற்றிலங்குவது இத்திருவாலங்காடு வடாரண்யேசுவரர் ஆலயமாகும்.

நடன ராசன்

நடனத்தில் தன்னை மிக்கவர் இல்லை. தானே இறை என செருக்குப் பெற்றாள் காளி. முஞ்சிகேச கார்கோட முனிவர் வேண்ட, காளியின் செருக்கடங்க சிவன் தனது இடது காலைத் தலைக்கு மேல் உயர்த்தியும் எட்டுக்கரங்களும் விரித்த சடையுடனும் ஊர்த்துவ தாண்டவம் புரிந்து காளியின் செருக்கு அடக்கினார். கால் தூக்கி ஆட பயந்த காளி தன் செருக்கு அடங்கி குளக்கரையில் சென்று ஒதுங்கினாள். ஊர்த்துவ நடனம் புரிந்த நடராசனின் தரிசனத்தை, சிவனின் பாதம்பட்ட ஊரில் தன் பாதம்படக் கூடாது என அஞ்சி தலையால் நடந்து வந்த காரைக்காலம்மையார், அவரது திருவடியின் கீழ் வாழும் பெருமை பெற்ற திருத்தலம் திருவாலங்காடு அருள்மிகு வடாரண்யேஸ்வரர் திருத்தலம் ஆகும். காரைக்காலம்மையார் இறை பக்தியில் ஒன்றி உடல்மெலிந்து நாதன் தாள்புகழ் பாடும் பாவணையில் அமர்ந்த கோலத்தில் உள்ள திருத்தலம் ஆகும். காரைக்காலம்மையார் கால்பதியாத ஊரில் சென்று நடனராசனையும், நாணியமங்கையையும் கண்டு திருவடிதொழுவோம்.



காரைக்கால் அம்மையார்



கமலத்தேர்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் இத்தலத்தை பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் காரைக்கால் அம்மையார், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், கச்சியப்ப சிவாச்சாரியார், இராமலிங்கசுவாமிகள், பாம்பன் சுவாமிகள் முதலான பல அருளாளர்களும் இத்திருத்தலத்தைப் பாடிப்பரவி உள்ளனர். திருவாலங்காட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பழையனூர், சத்தியத்திற்காக தம்முயிரைத் தந்து புகழ் கொண்ட வேளாளர் பெருமக்களால் பெருமை கொண்டு விளங்குகின்றது. வேளாளர்கள் தீப்பாய்ந்த மண்டபம் இன்றும் இத்திருவாலங்காட்டுத் திருத்தலத்தில்இருப்பது குறிப்பிடத்தக்கஒன்றாகும். திருஞானசம்பந்தரும் பழையனூர் நீலி சரிதத்தைத் தாம் அருளியுள்ள தேவாரத்திருப்பதிகத்தில் பாடியுள்ளார். மிகவும் பழமையான இத்திருக்கோயிலில் ஏராளமானகல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டில் நடராசப் பெருமானின் பெயர் 'அரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளிய நாயனார்' என்று கூறப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் தலவிருட்சம் ஆலமரம் ஆகும்.

தீர்த்தம் முத்தி தீர்த்தம். உள்பிரகாரங்களில் சித்தி விநாயகர் சுப்பிரமணியர் அகோரவீரபத்திரர், நாயன்மார்கள், தட்சிணாமூர்த்தி, சண்டிகேஸ்வரர், லிங்கோத்பவர், பிரம்மா துர்கை பஞ்சலிங்கங்கள், சூரியன், சந்திரன், பெருமாள் நவக்கிரகம் ஆகியோர் உள்ளனர்.

தீர்த்தக் கரையில் பத்திரகாளியம்மன் கோயில் உள்ளது. நான்கு காலபூசையும், ஆருத்திராவும் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்குள்ள கமலத்தேர் எங்கும் இல்லாத சிறப்புப் பெற்றது. அழகியவடிவில் கமலம் மலர்ந்தது போன்ற அமைப்பு உடையது. காலை 7 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் 8 மணி வரையும் தரிசனம் செய்ய இயலும். இவை விஷேட தினங்களில் மாறுதலுக்கு உட்பட்டதும் ஆகும்.

15. அருள்மிகு மகிஷாசுரமர்த்தினி அம்மன்திருக்கோயில் மத்தூர்.



மகிஷாசுரமர்த்தினி மூலவர்

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், மத்தூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் மகிடாசுரமர்த்தினி அம்மன், பூமியில் இருந்து வெளிப்பட்டு சுமார் 46 ஆண்டுகளாகின்றன. இத்திருத்தலம் 64 சக்தி பீடங்களுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுகிறது. மத்தூர் எல்லையில் 1954 ஆம் ஆண்டு அரக்கோணம் ரேணிகுண்டா இரண்டாவது இருப்பு பாதை போடும் பணிநடைபெற்றபோது, சக்திமேடு என்ற இடத்தில் கூலியாட்கள் கடப்பாறையால் மண்ணைப் பெயர்த்தார்கள். ஒரு கூலியாள் கடப்பாறையால் பூமியைக் குத்தியபோது 'டங்க்' என்று வெங்கல சப்தம் கேட்டது. அந்தக்கூலியாள் தெய்வ அருளால் மயக்கமடைந்தான். கூட்டம் கூடி மண்ணை அகற்றினர். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. ஆம், அன்னையின் கம்பீரமான திருவுருவம் எந்தவித சிதைவும் இன்றி மீட்கப்பட்டது. எட்டு கரங்களில் சங்கு, சக்கரம், வில், அம்பு, கத்தி, கேடயம், திரிசூலம் மற்றும் கபால மாலை ஆகியவற்றை தரித்து, மகிடாசுரனை தனது திரிசூலத்தால் குத்தி வென்று அருட்பார்வையால் உலகினை நோக்கும் சாந்த வடிவுடன் அன்னை எழுந்தருள் புரிந்து வருகிறாள். ஏழு அடிக்கும் மேல் நெடிதுயர்ந்து உள்ள மகிடாசுரனின் தலையின்மேல் அன்னை ஆனந்த நடனம்புரியும் காட்சி காண்பவர்க்கு பக்திப் பரவசத்தை கூட்டும், மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டி பிரமிப்பையும் மெய்சிலிர்ப்பையும் ஏற்படுத்தும். இத்திருக்கோயிலில் செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்படும் இராகு கால சிறப்பு அர்ச்சனைகள். ஒவ்வொரு அமாவாசை, பௌர்ணமிதோறும் நண்பகல் 12.00 மணிக்கு நடத்தப்படும் 108 குட பால் அபிஷேகம், பௌர்ணமி நாட்களின் இரவில் 9.00 மணி முதல் 11.00 மணி வரை நடத்தப்படும் நவகலசயாக பூசைகள், 108 சங்காபிஷேகம் ஆகியன பக்தர்கள் பங்கு கொண்டு பலன் பெறத் தக்கவை.

உலகம் போற்றும் சிறப்பும், பெருமையும், மிக்க மத்தூர்

அருள்மிகு மகிடாசுரமர்த்தினி அம்மன் ஆலயம், திருத்தணி திருப்பதி நெடுஞ்சாலையில், திருத்தணியில் இருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ள பொன்பாடி இரயில் நிலையத்தில் இருந்து மேற்கே 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கோயில் முகப்பு வரை செல்ல திருத்தணியில் இருந்து பேருந்துகள் தினமும் இயக்கப்படுகின்றன. ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும், பௌர்ணமி நாட்களிலும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

16. அருள்மிகு சந்திரசேகரர் ஆலயம் (புது) கும்மிடிபூண்டி

கும்மிடிபூண்டி புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. பிரதான வாயிற்கதவு தெற்கு நோக்கியும், மூலவர் சன்னதி கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளன. அம்மன் 'தெய்வானை அம்மாள்' எனவும் மூலவர் 'சந்திரசேகரர்' எனவும் வழங்கப்படுகின்றனர்.

திருச்சுற்றில் விநாயகர் சன்னதி மற்றும் சண்முகர் சன்னதிகள் அமைந்துள்ளன. காமிக ஆகம முறைப்படி ஒரு கால பூஜை நடைபெறுகிறது. காலை 7 மணி முதல் 11 மணி வரையும் மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

17. அருள்மிகு திருக்கள்ளீஸ்வரர் திருக்கோயில் திருக்கண்டலம்

சென்னையிலிருந்து செங்குன்றம், சோழவரம், காரனோடை வழியாக குசஸ்தலை ஆற்றைக் கடந்து பெரியபாளையம் செல்லும் சாலையில் கன்னிப்புத்தூரிலிருந்து நான்கு கிலோ மீட்டர் சென்றால் திருக்கண்டலம் அடையலாம். திருவள்ளூரிலிருந்து வெங்கல் சென்றும் அடையலாம்.

இத்திருக்கோயிலின் தல விருட்சம் கள்ளி ஆகும். கள்ளி மரத்தடியில் இறைவன் குடிகொண்டிருந்ததால் 'திருக்கள்ளிநாதர்' என்றும் 'திருக்கள்ளீஸ்வரர்' என்றும் அழைக்கப்படுகிறார். பிருகு முனிவர் இங்கு இருந்த இறைவனை கள்ளி மலரால் வழிபட்டதாக

தல புராணம் கூறும். அதனால் 'திருக்கள்ளீஸ்வரர்' எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர். இத்திருக்கோயிலின் தீர்த்தம் முன்புறம் அமைந்துள்ள திருக்குளம் 'நந்தி தீர்த்தம்' என வழங்கப்படுகிறது.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் 11 பாடல்கள் பாடியுள்ளார். பாடல்களில் திருக்கள்ளிநாதர் 'கள்ளின்மேயான்' என்று பாடுகிறார். கிழக்கு நோக்கி வாயில் உள்ளது. இவர் 'திருக்கள்ளீஸ்வரர்' எனவும் 'சிவானந்தேஸ்வரர்' எனவும் அழைக்கப்படுகிறார். அம்மன் 'ஆனந்தவள்ளியம்பாள்' என அழைக்கப்படுகிறார். சிவாகம முறைப்படி காலை 8 மணி முதல் 9 மணி வரை பூஜை நடைபெறுகிறது. மாலை 4 முதல் 7 மணி வரையும் சன்னதி திறந்திருக்கும். திருச்சுற்றில் அம்பாள் சன்னதி தவிர விநாயகர் சன்னதி, காளத்தி நாதர், பாலமுருகன் சன்னதி, சண்டிகேஸ்வரர் சன்னதி, நால்வர் சன்னதி ஆகியவை உள்ளன.

மூலவர் விமானம் கஜபிருஷ்ட அமைப்பில் உள்ளது. இத்திருக்கோயிலில் பிருகு முனிவரும், அகத்தியரும், குச லவர்களும், திருஞானசம்பந்தரும் பாடிப் பரவி வணங்கி உள்ளனர். நவராத்திரி, ஐப்பசி அன்னாபிஷேகம், கந்தசஷ்டி, கார்த்திகை சோமவாரம், கார்த்திகை தீபத்திருவிழா, ஆருத்ரா போன்ற உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

18. அருள்மிகு வைகுண்ட பெருமாள் அருளாளர் எம்பார் சுவாமி திருக்கோயில் மதுரமங்கலம்

கடம்பத்தூர் இரயில் நிலையத்திலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவிலும், சோகண்டி, சென்னை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகளும் வந்து செல்லும் ஊர் மதுரமங்கலமாகும். ஸ்ரீகருட புஷ்கரணி எனப்படும் தீர்த்தத் திருக்குளம் உள்ள இத்திருக்கோயிலில் வைகானச ஆகம முறைப்படி இருகால பூசை நடைபெறுகின்றது. ஸ்ரீகமலவல்லித் தாயார், ஆண்டாள், மணவாள மாமுனிகள், ஆஞ்சனேயர் ஆகிய சன்னிதிகள் உள்ளன. அவதார உற்சவம் தைமாதமும் சித்திரை மாதத்தில் வைகுண்டப் பெருமாள் பிரம்மோற்சவமும் நடைபெறுகிறது.

19. அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் மற்றும் அருளாளர் பாஷ்யகார சுவாமி திருக்கோயில் திருப்பெரும்புதூர்



கோபுர முன்தோற்றம்

ஆதிகேசவப் பெருமாள் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார். தெற்கு நோக்கி இராமானுஜர் உள்ளார். எத்திராஜ நாதவல்லி தாயார் உள்ளார். இத்திருக்கோயிலில் வைகானஸ ஆகமப்படி ஆறுகால பூஜை நடைபெறுகிறது. இத்திருக்கோயில் ஸ்ரீ இராமானுஜரின் அவதாரத் தலம் ஆகும். ஆலயத்தின் பெரும்பகுதி கிருஷ்ண தேவராயர் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

இராமானுஜர் ஆதிசேடனின் அம்சமென்பதால் இத்திருக்கோயில் ராகு மற்றும் கேது தோஷங்கள் நிவர்த்திக்கு பிரபலமானது. திருவாதிரை நன்னாளில் 'தாமே உகந்த' ராமானுஜர் திருமேனி அபிஷேகம் காண்பது மிகுந்த புண்ணியம் என்பர். இத்திருக்கோயிலில் நவராத்திரி, கார்த்திகை, சித்திரையில் பிரம்மோற்சவம் விசேஷமாக நடைபெறும்.

இத்திருக்கோயில் காலை 6 மணி முதல் 12 மணி வரை மாலை 4 மணி முதல் 8.30 மணி வரை திறந்திருக்கும்.

அருள்மிகு பூதபுரீஸ்வரர் திருக்கோயிலும் இவ்வூரில் உள்ளது.



பாஷ்யகாரர் எனப்படும் ஸ்ரீ ராமானுஜர்

20. அருள்மிகு சோமநாதீஸ்வரர் திருக்கோயில் சோமங்கலம்

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் சென்னையிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் போரூரிலிருந்து பேருந்து வசதி கொண்ட சோமங்கலத்தில் அருள்மிகு சோமநாதீஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயிலில் தெற்கு திசை நோக்கி பிரதான வாயிற்படி உள்ளது. தெற்கு நோக்கி லிங்க வடிவில் காட்சி தருகிறார் சோமநாத ஈஸ்வரர். அம்மன் காமாட்சி அம்மன். ஒரு கால பூஜை காலை 8 மணி முதல் 10 மணிக்குள் நடைபெறும். கிருத்திகை, விநாயக சதுர்த்தி, நவராத்திரி, சிவராத்திரி, கார்த்திகை தீபம் மற்றும் பஞ்சபர்வாதி உற்சவங்கள் விசேடம். இத்துடன் உபகோயிலாக அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் கோவில் என்ற திருக்கோயிலும் உள்ளது.

21. அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் குன்றத்தூர் சென்னை - 69.

மூலவர் தேவியருடன்

திருப்பெரும்புதூர் வட்டத்தில் உள்ள குன்றத்தூர் சென்னை போரூரில் இருந்து 7 கிலோ மீட்டர் தொலைவிலும், பல்லாவரத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவிலும் , பூந்தமல்லியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. எழுபத்தி எட்டே படிக்கட்டுகள் கொண்ட மலையில் வடக்கு நோக்கி உள்ள ராஜகோபுர வாயிலாக கோயிலின் உள்ளே சென்றதும் வடக்கு நோக்கி வள்ளி தெய்வானையுடன் காட்சி தருகிறார் ஸ்ரீசுப்ரமணியர் திருப்போரூரில் போர் புரிந்து அசுரர்களை அழித்து திருத்தணிகை செல்லும் வழியில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் ஒரு முகூர்த்த நேரம் இங்கு தங்கிச் சென்றதாகக் குறிப்புகள் உள்ளன. சன்னதி கருவறை அமைப்பு வித்தியாசமானது. ஒரு புறம் இருந்து தரிசனம்



கலை (க்) கோயில்களின் அங்கம்

இறைவனுக்கு செய்யப்படும் அனைத்து பொருட்களும் மதிப்பும் தகுதியும் வாய்ந்தவை ஆகும். அவை கலைச்சிறப்போடு இருக்க வேண்டும் என்பது நமது முன்னோர்களின் எண்ணம். அதன்படியே கலைநயம் மிக்க பொருட்களை வடிவமைத்தனர்.

இறைவனை எழுந்தருளச் செய்யும் கட்டிலுக்கு மேலாக மரவிதானம் அமைப்பது பழக்கம். அதன்படி குன்றத்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு திருவூரகப் பெருமாள் திருக்கோயிலின் மரக்கட்டிலின் மேல் அமைக்கப்பட்ட மரத்தினால் ஆன மேல் விதானம் கலைச்சிறப்பு மிக்கது. கடினமான மரத்தில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு பூவும், கொடிகளும் யாளிவரிசைகளும் சிறப்புடன் தொகுக்கப்பட்ட சுமார் 16 சதுர அடி விதானம் கலைச் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

செய்யும் போது வள்ளியுடனும் மறுபுறத்திலிருந்து தரிசிக்கும் போது தெய்வானையுடனும் முருகனை தரிசனம் செய்யும் வகையில் அமைந்துள்ளது. அருணகிரி நாதரால் பாடல் பெற்ற தலமாகும். வடதிசை நோக்கி உள்ளதால் இவ்வூரைத் தென்தணிகை எனக் கூறுவர். குழந்தைவரம், திருமணம் ஆகிய பிரார்த்தனைகள் இங்கு வந்து வழிபட்டால் கைகூடும்.



மலைக்கோயில் முன்தோற்றம்

இம்மலைக்குக் கீழே திருவூரகப் பெருமாள் ஆலயமும், கந்தழீஸ்வரர் கோயில், உபகோயிலாகவும், சேக்கிழார் கோயில் குழுக்கோயிலாகவும் உள்ளது. சேக்கிழார் கட்டிய நாகேஸ்வரசுவாமி திருக்கோயில் உள்ள திருநாகேச்சுரத்தை அடுத்த ஊரே குன்றத்தூர். இங்கு புது வருடப் பிறப்புகள், ஆடிக்கிருத்திகை, கார்த்திகை தீபம் மற்றும் அனைத்து கிருத்திகைகளுக்கும் மக்கள் ஏராளமானவர்கள் வந்து பிரார்த்தனை செலுத்தி வழிபட்டு செல்கின்றனர். காலை 7 மணி முதல் 12.30 மணி வரையும் மாலை 3.30 முதல் 8.30 வரையும் தரிசிக்கலாம்.

22. அருள்மிகு நாகேச்சர சுவாமி திருக்கோயில் வடதிருநாகேச்சரம், (குன்றத்தூர்)

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் குன்றத்தூரில் திருநாகேச்சரம் கிராமத்தில் அமைந்துள்ள இத்திருக்கோயில் தெய்வச் சேக்கிழார் பெருமானால் கட்டப்பட்டதாகும். சென்னை பல்லாவரத்திலிருந்து 7 கிலோ மீட்டர், போரூரிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இத்தடங்களில் பேருந்து வசதிகள் உள்ளன. பேருந்து நிலையத்திலிருந்து நேரே கிழக்கு நோக்கி 5 நிலை இராஜ கோபுரம் பக்தியுடன் வரவேற்கும். உள்ளே நுழைந்ததும் சேக்கிழார் சன்னதி, பிறகு விநாயகர் சன்னதி. உள்ளே லிங்க வடிவில் நாகத்தின்கீழ் அருள்மிகு நாகேஸ்வரப் பெருமான் காட்சி தருகிறார். அம்மன் காமாட்சி அம்மன் என அழைக்கப்படுகின்றாள். காரணாகம பூஜை நான்கு காலமும் நடைபெறும். இத்திருக்கோயிலில் வைகாசி மாதத்தில் சேக்கிழார் விழா மற்றும் அனைத்து மாதங்களிலும் பஞ்சபர்வ உற்சவங்கள் நடைபெறும். வெளியில் 'சூர்ய புஷ்கரணி'

என்றழைக்கப்படும் திருக்குளம் நல்ல நிலையில் உள்ளது. தலவிருட்சம் செண்பக மரமாகும். இத்திருக்கோயிலுக்கு வடக்குபுறம் ஊர் எல்லை தெய்வமாக ஸ்ரீபொன்னியம்மன் கோயில் உள்ளது. இவ்வாலயத்தில் பொன்னியம்மன் வடக்கு நோக்கிக் காட்சி தருகிறார். இக்கோயிலின் தலவிருட்சமாக இரண்டு மகிழமரங்கள் உள்ளன. ஒன்று பூ பூக்கும். மற்றொன்று காய் காய்க்கும் அதிசயம் கொண்டது. ஆடிப்பூரத்தில் 1008 பால்குட அபிஷேகம் நடக்கும். ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்வர். காலை 7 மணி முதல் 11 மணி வரையும் மாலை 4 மணி முதல் 9 மணி வரையும் தரிசிக்கலாம்.



சோழ முதலமைச்சர் சேக்கிழார் கட்டிய கோயில்

அருள்மிகு சடையாண்டீஸ்வரர் திருக்கோயில் என்னும் கோவிலும், அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோவில் என்னும் கோவிலும் இவ்வூரில் அமைந்துள்ளன.

23. அருளாளர் சேக்கிழார் திருக்கோயில் குன்றத்தூர்

குன்றத்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மலையின் அடிவாரத்தில் திருவூரகப் பெருமாள் திருக்கோயிலுக்கும், கந்தழீசுவரர் திருக்கோயிலுக்கும் நடுவில் சாலையின் இடதுபுறம் அமைந்துள்ள திருக்கோயிலாகும். இது சேக்கிழார் பெருமான் அவதரித்த திருக்கோயிலாகும். கிழக்கு நோக்கிய கருவறையில் சேக்கிழாரும், வெளி மண்டபத்தில் விநாயகரும் உள்ளனர். இவரது தம்பி பாலறாவாயன் என்பவர் எடுத்த திருக்குளம் இத்திருக்கோயிலுக்குச் சொந்தமானது. அருண்மொழித் தேவன் என்ற பெயர் பெற்றிருந்த சேக்கிழார், சோழ அரசனிடம் முதல் அமைச்சராக இருந்தவர். ஆன்மீக ஈடுபாட்டுடன் அவர் கட்டிய திருக்கோயில் இவ்வூரின் அருகில் திருநாகேச்சுரம் என்ற பெயருடன் இன்றும் வழங்கி வருகிறது.

சேக்கிழார்

இரண்டுகால பூசை சைவாகம முறைப்படி நடைபெறுகிறது. சேக்கிழார் அவதார திருவிழா இத்திருக்கோயிலில் நடைபெறுகிறது. பெரிய புராணம் எழுதிய சேக்கிழார் அவதரித்த இடம் இன்று கோயிலாக உள்ளது.

24. அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், வல்லக்கோட்டை - 602 105.



கருவறையில்.....

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் வல்லக்கோட்டை கிராமத்தில் கோடை ஆண்டவர் என்றழைக்கப்படும் சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் உள்ளது. சென்னை தாம்பரத்திலிருந்தும் திருபெரும்புதூரிலிருந்தும் வல்லக்கோட்டைக்குப் பேருந்து வசதிகள் உள்ளன. சென்னை வேலூர் தேசிய நெடுஞ்சாலையில் ஸ்ரீபெரும்புதூரிலிருந்து தெற்கிலும், சென்னையிலிருந்து விழுப்புரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் செங்கல்பட்டுக்கும், தாம்பரத்துக்குமிடையே சிங்கப் பெருமாள் கோயில் எனுமிடத்திலிருந்து மேற்காகவும் இங்கு செல்ல வசதி உண்டு. 7 அடி உயரத்தில் கோடையாண்டவர் கிழக்கு நோக்கி வள்ளி தெய்வானையுடன் காட்சி தருவது சிறப்பு. அருணகிரி நாதரால் பாடல் பெற்ற தலமாகும். வல்லன் என்ற மன்னன் ஆண்டு வந்ததால் வல்லன் கோட்டை என்ற பெயர் பெற்று மருவி வல்லக்கோட்டை என்று மாறியது.பகீரத மன்னன் தனது ஆணவம் நீங்கி வழிபட்ட தலமாகும்.இத்திருத்தலத்தில் ஆங்கிலப் புத்தாண்டு, ஆடிக்கிருத்திகை, கந்த சஷ்டி தினங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுவர்.

வியாழ பகவான் சொன்னபடி இந்திரன் வஜ்ஜிராயுதத்தால் உண்டாக்கிய திருக்குளம் வஜ்ஜிர தீர்த்தம், கோயிலுக்கு முன்பாக உள்ளது. பகீரதன் வெள்ளிதோறும் (சுக்ரவார) விரதமிருந்து பாதிரி மரத்தின் கீழிருந்து வழிபட்டதாக கந்தபுராணம் கூறுவதால் இங்கு தல விருட்சம் பாதிரிமரமாகும்.

அறுபடை வீடு போன்று புகழ்பெறும் இக்கோயிலுக்கு பரணி, கிருத்திகை நாட்களிலும், பொது விடுமுறை நாட்களிலும் பக்தர் வருகை அதிகம். பால்குடம், முடி காணிக்கை செலுத்துதல், திருமணம்,

காது குத்தல், ஆண்டு நிறைவு இங்கு நடைபெறுகின்றன. காலை 6 மணி முதல் 12 மணி வரையும் மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரையும் தரிசிக்கலாம்.

மேல்படப்பை அருள்மிகு தழுவக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயில், கீழ்படப்பை அருள்மிகு வீரட்டீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்கள் அருகில் அமைந்துள்ள முக்கிய தலங்களாகும்.

25. அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயில் கோவூர் - 602 101


திருக்கோயில் முன்தோற்றம்

காஞ்சிபுரம்மாவட்டம், திருபெரும்புதூர்வட்டத்தில் சென்னையிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் போரூர் மார்க்கமாக வந்தால் கோவூர் வந்தடையலாம். பேருந்து நிலையத்தில் இறங்கி 100 அடிகள் நடந்தால் மிகவும் அழகான எழு நிலை கொண்ட ராஜகோபுரம் தெற்கு நோக்கி வரவேற்கும். திரைப்படங்கள் பலவற்றில் இடம் பெற்ற இத்திருக்கோயில் முகப்பும் முன் தெருவும் திருக்குளமும் நேரில் செல்லுவோர்க்கு நெடுநாள் பழகிய உணர்வளிக்கும். உள்ளே நுழைந்ததும் விநாயகர் சன்னதியும் அதனைக் கடந்து உள்ளே நுழைந்ததும் சுந்தரேஸ்வரர் எனப்படும் திருமேனீஸ்வரர் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறார். அம்மை சுந்தராம்பிகை தெற்கு நோக்கிக் காட்சி தருகிறாள்.

இத்திருக்கோயில் 12ம் நூற்றாண்டில் சோழ மன்னர்களால் கட்டப்பட்டது ஆகும். அன்னை மாங்காடு காமாட்சியம்மன் தவம் செய்தபோது மூவுலகிலும் வெப்பம் தோன்றி துன்பம் தந்த வேளையில் இலக்குமி காமதேனுவாக வந்து காட்சி தந்ததால் தேவர்களுக்குக் குளிர் நிழலாக அமைந்து கோ + ஊர் = கோவூர் என வழங்கலாயிற்று. இத்திருக்கோயிலில் தியாகராஜசுவாமிகள் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் பாடியுள்ளார். நாற்புறமும் குடவரை

துவாரங்களையும் அழகான தனி மாடங்களை வெளியில் நீட்டியபடியாக ஒவ்வொரு நிலைகளிலும் கொண்ட ராஜகோபுரம் பொம்மைகள் அனைத்தும் சங்கீத மூர்த்தி தியாக ராஜ சுவாமிகளின் பிறப்பு வளர்ப்பு வாழ்வை விளக்குவது ரசிக்க தக்கவை. இத்திருக்கோயில் காமிகாமக முறைப்படி பூஜைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலில் வைகாசி விசாகம் பிரம்ம உற்சவமாகவும், மற்ற எல்லா பஞ்சபர்வாதி உற்சவங்களும் மிகச்சிறப்புடன் நடைபெறுகின்றன. தினமும் காலை 7 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் 8.30 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

26. அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோயில் மணிமங்கலம்

வண்டலூரிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிலும், தாம்பரத்திலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவிலும் தாம்பரம் ஸ்ரீ பெரும்புதூர் சாலையில் மணிமங்கலம் காவல்நிலைய பேருந்து நிலையத்தில் இறங்கினால் மேற்கே சுமார் 300 அடி தொலைவில் நடந்து இக்கோயிலை அடையலாம்.



திருக்கோயில் முன்தோற்றம்

சுமார் 1 ஏக்கர் பரப்பில் விரிந்து கிடக்கும் இத்திருக்கோயிலின் நுழைவாயிலில் 'தீபஸ்தம்பம்' 'பலிபீடம்' 'துவஜ்ஸ்தம்பம்' கருடன் சன்னதி ஆகியவை உள்ளது. இவற்றைக் கடந்து சென்றால் உள்பிரகாரமும், உள்ளிட்ட மூலவர் சன்னதியும் உள்ளது. உள்பிரகாரத்தில் யோக நரசிம்மரும், ஈசான்ய மூலையில் ஆழ்வார்கள் சன்னதியும் உள்ளது. கருவறையில் திருமகள் நிலமகள் சகிதமாக ராஜ கோபாலன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். வெளிப் பிரகாரத்தில் தெற்குப் புறத்தில் தனிக்கோயில் தாயாராக செங்கமலவல்லித் தாயாரும், வடக்குப் புறத்தில் ஆண்டாள் சன்னதியும் சன்னதித் தெருமுடிவில் திருவடிக் கோவிலும் உள்ளது.

இரு கால பூசை நடைபெறும் இக்கோயிலில் தரிசனத்திற்காக காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 7 மணி வரை நடை திறந்திருக்கும் பாஞ்சராத்திர ஆகம முறைப்படி பூசை நடைபெறுகிறது.

வருடப் பிறப்பு உற்சவங்கள், புரட்டாசி நவராத்திரி வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீ ஜெயந்தி, திருக்கார்த்திகை, ஆவணிப் பவித்ர உற்சவம் ஆகியவற்றுடன் ஆழ்வார்கள், ஆசாரியர்கள் சாற்று முறை உற்சவங்களும் நடைபெறுகின்றன.

பல்லவர் காலத்தில் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இத்திருக்கோயில் அமைந்திருக்கும் ஊருக்கு மணிமங்கலம் என்று பெயர் வழங்கப்பட்டாலும், சோழர் காலத்தில் 'லோக மாதேவி' சதுர்வேதி மங்கலம் எனவும் ராஜாதி ராஜ ராஜேந்திரன் மற்றும் வீர ராஜேந்திரன் காலத்திலும் ராஜ சூடாமணி சதுர்வேதி மங்கலம் எனவும் குலோத்துங்க சோழர் காலத்தில் பாண்டியனை இருமுடி வெற்றி கண்ட சோழ சதுர்வேதி மங்கலம் எனவும் வழங்கப்பட்டது. பின்னர் வந்த சோழர் காலத்தில் கிராம சிகாமணி சதுர்வேதி மங்கலம் எனவும் குறிக்கப்படுகிறது. நான்கு வேதமும் ஓதும் அந்தணர்களுக்கு தானமாக வழங்கப்பட்ட கிராமமாக இருந்துள்ளது.

இத்திருக்கோயில் கல்வெட்டுகளில் 'காமகோடி விண்ணகர்' எனவும் பரவர் வாரி விண்ணகர் எனவும் திருவைகுளம் எனவும் வழங்கப்படுகிறது. இந்தக் கல்வெட்டுகளில் துவாரபுரி தேவன் எனவும் வண்டுவார் பதி எனவும் இறைவன் வழங்கப்படுகிறார்.

இத்திருக்கோயிலுக்கு நன்கொடைகள் அளித்துள்ளதைப் பற்றியும், சண்டைகள் நடந்துள்ளதைப் பற்றியும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. வண்டுவார் பதி எனப்படும் பகுதி தற்போது வண்டலூர் எனப் பெயர் மாற்றம் பெற்றிருக்கலாம் அல்லது வண்டுவாஞ்சேரி என்னும் பகுதியாகவும் இருந்திருக்கலாம் என்பது வரலாற்று அறிஞர்கள் கருத்து.

இத்திருக்கோயிலின் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள யோக நரசிம்மருக்கு விளக்கேற்றுவதற்காக தனியாக நிலம் வழங்கப்பட்டு இருப்பதையும் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இத்திருக்கோயிலின் உபகோயிலாக வைகுண்டப் பெருமாள் கோவில் உள்ளது.

27. அருள்மிகு வைகுண்டப் பெருமாள் மற்றும் காமாட்சி அம்மன் திருக்கோயில் மாங்காடு.

ஸ்ரீ சக்கர அர்த்தமேரு

திருக்கயிலாயத்தில்தன் பிராட்டியுடன் சிவ பெருமான் வீற்றிருந்த போது ஈசனின் கண்களைப் பொத்தினால் என்ன? என்று விளையாட்டாய் அம்மை கண்களைப் பொத்த, சூர்ய, சந்திரர்களான ஈசனின் கண்கள் அம்மையால் மறைக்கப்பட்டதால், சர்வலோகங்களும் இருளில் மூழ்கித் திண்டாடின. ஈசனின் கோபத்திற்கு ஆளான அம்பாள் அவரின் சொற்படி பூவுலகில், மாங்காட்டில் ஐந்து குண்டங்களில் தீ வளர்த்து, நடுக் குண்டத்தில் தனது இடது காலின் கட்டை விரலின் நுனிப்பகுதி அக்னியில் படுமாறும், வலது காலை இடது காலின் தொடைக்கு மேற்புறமாயும், இடது கையை நாபிக் கமலத்திற்கு அருகிலும் வலது கையில் ஜப மாலையுடன் தனது சிரசிற்கு மேலும், அழகிய கண்களை மூடிய நிலையிலும் அம்பாள் தவம் செய்தார். தன்னை பூஜித்து வந்த சுக்ராச்சாரியருக்கும் காட்சி கொடுத்தார். சிவபெருமான் அசரீரி மூலம் அம்மையை காஞ்சிக்குச் செல்லச் சொல்கிறார். அம்மையும் அவ்வாறு சென்று, காஞ்சியிலே மணலால் லிங்க வடிவில் ஈசனை பூஜித்து பின்னர் மணம் புரிந்து கொள்கிறார். காஞ்சிக்கு செல்கையில் தவம் செய்த பஞ்சாக்னியை அப்படியே விட்டு சென்றதால், மாங்காடும், சுற்று பிரேதசங்களும் தீயின் வெம்மையால் வறண்டன. இந்நிலை நெடுங்காலம் நீடித்ததாக வரலாறு. பின்னர் ஸ்ரீ ஆதிசங்கரர் தேசாந்திரம் செல்லும் போது மாங்காட்டின் நிலையை அறிந்து, அஷ்டகந்தம் எனப்படும் எட்டு மூலிகைகளால் ஆன அர்த்த மேரு ஸ்ரீ சக்கரத்தை அம்மை தவம் புரிந்த இடத்தில் பிரதிஷ்டை செய்கிறார். அதன் காரணமாக ஸ்ரீ சக்கரமே மூலஸ்தானமாக வழிபாடு செய்யப்படுகிறது. இதனால் தீயின் கொடுமை மறைந்து மக்கள் சுபிட்சம் பெற்றனர். செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் இத்திருக்கோயிலில் விசேஷ வழிபாடுகள் நடைபெறும். காலை 6 மணி முதல் தரிசனம் செய்யலாம்.

28. அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில் காஞ்சிபுரம்

சரஸ்வதியும், இலக்குமியும் கல்வி, செல்வம் இதில் எது சிறந்ததென இந்திரனிடம் கேட்ட போது, இந்திரன் செல்வமே சிறந்தது என இலக்குமிக்கு ஆதரவாகக் கூறவே, கோபமுற்ற சரஸ்வதி இந்திரனை மதம் கொண்ட யானையாகிடுமாறு சபித்தாள். இலக்குமி இந்திரனை சத்தியவிரத க்ஷேத்திரம் என்றழைக்கப்படும் காஞ்சி மாநகருக்குச் சென்று வரதராஜபெருமாளைச் சரணடைந்து சாப விமோசனம் பெற்றிட தெரிவித்தாள்.

யானையான இந்திரன் நரசிம்மமூர்த்தியை காஞ்சி தலத்தில் தியானித்து வருகையில் இந்திரனின் இதயத்திலிருந்து வெளிப்பட்டு சாபவிமோசனம் அளித்தார். நரசிம்மர் இந்திரனின் இதயத்தில் தாம் இருந்த இடத்தை குகையாக்கி யானையின் உடலை மலையாக்கி அமைத்ததாலேயே இத்திருக்கோயிலில் வரதராஜர் சன்னதி அமைந்த இடம் குன்றின் மீதும் அக்குன்றின் கீழே உள்ள குகையில் அருள்மிகு நரசிம்மரும் எழுந்தருளுவதாக அமைந்துள்ளது.


அத்திவரதர்

அத்தி (யானை) யால் கிரி (மலை) உண்டாகியதால் 'அத்திகிரி' என்று அழைக்கப்படும் இத்திருக்கோயிலில் குன்றின் மேல் எழுந்தருளி உள்ள வரதராஜர் 'அத்திகிரிநாதர்' என்றழைக்கப்படுகிறார். ஹேமன், சுக்கிலன் எனும் இரு சிறுவர்கள் கொங்கண தேசத்தில் கௌதம முனிவரிடம் சீடராய் இருந்து விஷ்ணு பூஜைக்கு புனித நீரும் யாகசாலை சமித்துகளும் (மரக்குச்சிகள்) சேகரித்து வரும்போது மூடாமல் இருந்த புனித நீர் பாத்திரத்திலிருந்து எதிர்பாராது பல்லி ஒன்று துள்ளிக் குதித்து வெளியேறியது. இச்சீடர்களின் குரு இப்புனிதக் குறைவை வெகுண்டு அவர்களது கவனக்குறைவுக்காக இருவரையும் பல்லிகளாகப்

போகுமாறு சபித்துவிட்டார். காஞ்சிபுரம் சென்று அருள்மிகு வரதராஜரை தியானித்து சாபவிமோசனம் பெறவும் தெரிவித்தார். அவர்களிருவரும் இந்திரன் சாபவிமோசனம் பெற்றபோது இந்திரனின் யானையின் துதிக்கையால் அங்கிருந்த மரத்தை உலுக்கவே பல்லிகளிரண்டும் வீசியெறியப்பட்டு இந்திரனின் திருமேனியில்பட்டு பூர்வ உருவைப் பெற்று சாபவிமோசனம் அடைந்தனர்.


அனந்த சரஸ் தெப்பக்குளம்

இந்நிகழ்ச்சியின் நினைவாக இந்திரனின் வரத்தால் இத்திருத்தலம் பல்லி தோஷம் போன்ற பல தோஷங்களையும் நிவர்த்திக்கும் விசேடமுடையதாக விளங்கி வருகிறது. இத்திருக்கோயிலின் அத்திகிரியில் உள்ள யோக நரசிம்மரை தரிசித்து அத்திகிரி மலையேறி அத்திகிரிநாதன் அருள்மிகு வரதராஜரையும் தரிசித்தபின் சன்னதியின் பின்புறம் உள்ள தங்க, வெள்ளியிலான இரு பல்லிகளை தம் கரங்களால் தொட்டு வணங்குவதன் மூலம் எவரொருவரும் ஏகாதசியில் அகோராத்ரம் இரவுபால் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்வதால் கிடைக்கும் விரதாபலனை அடைவதோடு தோஷங்கள் நீங்கப்பெறுகின்றனர்.

சரஸ்வதியும், இலக்குமியும் கல்விக்கும் செல்வத்துக்கும் நடத்திய போட்டியில் இலக்குமி சிறந்தவளென இந்திரன் தீர்ப்பளித்தான். இந்திரனை சபித்து சரஸ்வதி, பிரம்மாவிடம் மீண்டும் முறையிட்டபோது, பிரம்மாவும் இலக்குமியை ஆதரித்தார். பிரம்மாவையும் சரஸ்வதி சபித்து அவனிடமிருந்து திருமாலினால் வழங்கப்பட்ட சிருஷ்டி தண்டத்தை ஒளித்ததால் உலக இயக்கம் தடைபடவே திருமாலை நோக்கி பிரம்மா தவம் செய்தார். ஆயிரம் அசுவமேதயாகம் செய்தால் அவருக்கு வரதராஜராக வந்து அருளி சிருஷ்டி தண்டத்தை அளிப்பதாகத் திருமால் வரமளித்தார். அசுவமேதயாகம் எனும் பரி வேள்வி ஆயிரம் நடத்துவது மிகக் கடினம் என்பதால் சுலபமாக ஆயிரம் அசுவமேதயாகத்தை மேற்கொள்ளும் வழியை விளக்குமாறு திருமாலை வேண்டினார். அவரும் காஞ்சிபுரம்

எனும் சத்திய விரத க்ஷேத்திரத்தில் ஒரு முறை செய்யும் அசுவமேதயாகம் ஆயிரம் முறை செய்த பலனைத் தரும் எனத் தெரிவித்தார். பிரம்மா காஞ்சியில் அத்திகிரிக்கு மேற்கே யோக நரசிம்மர் முன்பு குண்டம் அமைத்து வேள்வியைத் தொடங்கினார். இச்செய்தியறிந்த சரஸ்வதி கோபமுற்று யாகத்தைத் தடுக்குமாறு நெருப்புக் கோளத்தை ஏவினார். அத்தீக்கோளத்தை தமது ஒரு கையினால் ஏந்தியருளிய திருமால் 'தீபப்பிரகாசர்' எனப் பெயர் பெற்றார்.

கருட வாகனத்தில் வரதர்

பிரம்மாவின் யாகத்தை திருமால் காத்தருளி பூர்ணாகுதி நிறைவேறியது. அந்த ஹோம குண்டத்திலிருந்து மகா விஷ்ணு வரம் தரும் ராஜனாக தோன்றியருளினார். இவ்வாறு யாக குண்டத்திலிருந்து, நெருப்பினிலிருந்து எழுந்தருளிய திருமேனி என்பதால்தான், இப்பெருமாளின் உத்சவர் உலோகத் திருமேனி மிகுந்த தீக்காயத்துடன் காணப்படுவதாக கூறப்படுகிறது. பிரம்மாவின் யாகத்துக்குப்பின் இத்தலத்தில் எழுந்தருளும் பேரருளாளன் வரதராஜனுக்கு அவர் எழுந்தருளும் அத்திகிரி எனும் குன்றிற்கு இருபத்து நான்கு படிகள் அமைத்து சன்னதி எழுப்பி புண்ணியகோடி விமானம் என்பதையும் நிறுவி இரண்டு பல்லிகளுக்கான முத்திரையையும் பதித்து ஆலயத்தை தேவேந்திரன் அமைத்ததாகக் கூறுவர். கி.பி 1335 ஆம் ஆண்டு தை மாதத்தில் ஹொய்சாள வீர வல்லாளன் இங்கு முகாமிட்டிருந்தபோது அருளாளப் பெருமாள் கோயிலுக்கு 'வீர வல்லாளன்' என்ற சிம்மாசனத்தை அளித்தான். கோயிலின் அபிசேக மண்டபத்தில் அரியண்ண வல்லாளன் என்னும் பந்தலின் கீழ், வீரவல்லாளன் சிம்மாசனத்தில் அருளாளப் பெருமாள் வீற்றிருந்து, நம்மாழ்வரின் திருவாய்மொழியைக் கேட்டு மகிழும் காலத்து பல புலவர்களுக்கும் வீரர்களுக்கும் வல்லாளன் பரிசுகள் வழங்கினான் என்று கல்வெட்டு செய்தி கூறுகிறது. நெட்டூருடையான் இளையாழ்வான் காளிங்கராயன் தான் பிறந்த சித்திரை நட்சத்திரத்தில் சிறப்பு விழாக்கள் எடுத்து திருவாழி ஆழ்வாரை (சக்கரத்தாழ்வார்) எழுந்தருளிவித்தார் என்றும், எம்பெருமான்

ஸ்ரீஇராமானுஜரின் பாஷ்யத்தையும் பரப்புவதற்காக நிவந்தங்கள் அளித்தான் என்றும் இக்கோயிலிலிருந்து கிடைக்கும் பாண்டியன் ஐந்தாம் சடையவர்மன் சுந்தரப் பாண்டியன் (கி.பி.1304 1319) 14வது ஆண்டு (1318) கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ஆங்கிலேயர் காலத்தில் ராபர்ட் கிளைவ் தனது படையினருடன் இத்திருக்கோயிலினுள் தங்கி இருந்ததாகவும் அவரது பிரார்த்தனை நிறைவேறியதால் மகரகண்டி எனும் கழுத்தாபரணம் ஒன்று வழங்கியதாகவும் சரித்திரமுண்டு.

பூவிருந்தவல்லியிலிருந்து திருக்கச்சி நம்பிகள் மலர் மாலை தொடுத்து பெருமாளுக்கு அணிவித்து திரு ஆலவட்டக் கைங்கரியம் புரிந்து வந்தததால் திருவாலவட்டத் திருக்கச்சி நம்பி என்ற பெயர் ஏற்பட்டது. தெய்வத்திரு இராமானுஜரை சிலர் அழிக்க எண்ணியபோது வரதராஜபெருமாள் தாமே அவரைத் தடுத்து தனக்குரிய கைங்கரியத்திற்கு அழைத்து வந்தார். தீர்த்த கைங்கரியம் செய்து வந்த அவரை ஆளவந்தாருக்கு அறிமுகம் செய்திடும் வகையில் இங்குதான் திருக்கச்சி நம்பிகளும் உதவினார். கச்சி வரதர், அத்தி வரதர், என்றழைக்கப்படும் இப்பெருமாளுக்கு இன்னும் உள்ள திருநாமங்கள் உறஸ்திகிரிநாதன். திரு அத்தி ஊரான், தேவராஜன், தேவாதிராஜன், வரதராஜன், பேரருளாளன், தவப்பெருமாள், ப்ரணதார்த்திகரன் (தன்னை அண்டியவர்களின் துயர் தீர்த்து ஆட்கொள்ளும் கருணை படைத்தவன்) ஆகும். அத்திகிரி அஸ்திகிரி என்று சன்னதி அமைவிடத்திற்கு பெயர் என்றாலும் அத்திகிரிநாதர், அத்திவரதர் என்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. முன்னர் இத்தலத்தில் மூலவர் விக்கிரகமானது அத்தி மரத்தால் செய்யப்பட்டு வழிபாட்டில் பல நூறு ஆண்டுகள் இருந்தது என்றும் பின்னால் சிலாரூபமாய் அமைக்கப்பட்ட பின் ஆகமப்படி அத்திவரதர் இத்திருக்கோயிலின் அனந்தசரஸ் என்னும் திருக்குளத்தில் தனியே ஒரு அறையில் நீருக்கடியே நிரந்தரமாக எழுந்தருளச் செய்யப்பட்டது என்றாலும் 40 அல்லது 60 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த பழைய மூர்த்தியான அத்திவரதரை மக்கள் தங்கள் வாழ்நாளில் கண்டு தரிசிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இறுதியாக 1979 ஆம் ஆண்டு அத்தி வரதர் எழுந்தருளி இவ்வாலயத்தின் வசந்த மண்டபத்தில் ஒரு மண்டல காலம் பக்தர்களுக்கு சேவை சாதித்தார். அவ்வமயம் முன்னாள் உடுத்தப்பட்ட வஸ்திரங்களும் மரத்திருமேனியும்கூட சேதமுறாமல் இருந்த ஆச்சரியத்தை காணும் பேறுபெற்றவர் பல்லாயிரமாவர்.

வரதராஜபெருமாள் கோவில் பஞ்சபிரகாரங்கள் என்னும் 5

திருச்சுற்றுகளுக்கு நடுவே சிறு குன்றாக உள்ளது. இராஜகோபுரத்தினின்று உள்ளே செல்லும் போது இடது புறம் அத்திவரதர் அறிதுயில் கொள்ளும் அனந்த சரஸ்புஸ்கரணி என்னும் திருக்குளம் உள்ளது. இக்குளக்கரையில் அரங்கநாதர் சன்னதி இராமபிரான் சன்னதியோடு சுதர்சன ஆழ்வார் எனப்படும் மிகப்பெரிய சக்கரத்தாழ்வார் சன்னதியும் உண்டு. இத்திருச்சுற்றில் நம்மாழ்வார், மதுரகவிகள், நாதமுனி, மணவாள மாமுனிகள், உடையவர் ராமானுஜர் சன்னதிகள் முக்கியமானவை. இத்திருக்கோயிலுக்கு தம்மை அர்ப்பணித்துக்கொண்ட தாத்தாச்சாரியார் என்பவருக்கு வாகன மண்டபத்தை ஒட்டி சன்னதி ஒன்று உண்டு.

இரண்டாம் திருச்சுற்றில் திருவனந்தாழ்வான் கரிய மாணிக்க வரதர் சன்னதிகள் உள்ளன. மூன்றாம் திருச்சுற்றில் ஆண்டாள், இராமர், சேனைமுதல்வர், மலையாள நாச்சியார் பெருந்தேவித்தாயார், குஹநரசிம்மர் எனப்படும் அழகிய சிங்கர் வலம்புரி விநாயகர் சன்னதிகள் உள்ளன. இங்குள்ள தன்வந்திரி சன்னதி நோய்தீர்க்கும் பிரார்த்தனை அபிஷேகங்களுக்கு பெயர் பெற்றது. நான்காவது பிரகாரமானது குன்றில் வரதராஜ சன்னதியைச் சுற்றி அமைந்துள்ளது. இங்கே தங்கப்பல்லி, வெள்ளிப்பல்லி மற்றும் சூரிய சந்திரர் பிம்பங்கள் சிறப்பாக பக்தர்கள் படியேறிச் சென்று தொட்டுச் செல்லும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. மத்தியில் அமைந்த வரதராஜர் மேற்கே திருமுகம் காட்டி அருளுகிறார். காஞ்சியில் 'கருடசேவை' அரசாங்கத்தால் பல காலமாக 'அறிவிக்கப்பட்ட' உலகளாவிய விழாக்களுள் ஒன்று. சோளங்கிபுரம் தொட்டாச்சாரியார் அங்கிருந்த படியே கருடசேவை காட்சியைக்காண அருளியதாகவும், அதனாலேயே கருடசேவையின் போது திருக்குடை சில கணங்கள் மறைத்து பின் தரிசனம் தருவதாகவும் கர்ணபரம்பரைச் செய்தி உண்டு. காலை 6 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4 முதல் 8.30 வரையும் ஆராதனை தவிர்ந்த நேரங்களில் தரிசனம் செய்யலாம்.



கோட்டோவியத்தில் முன்புறத் தோற்றம்

29. அருள்மிகு திரிகாலஞானேஸ்வரர் திருக்கோயில் காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் பிரதானமாக அமைந்து அருள் பாலிக்கும், மூன்று காலங்களின் நிகழ்வுகளை அறிந்த ஞானத்தை உடைய சிவ பிரானின் இத்திருக்கோயில் கல்வி வளம் மற்றும் காரிய வெற்றிக்காகப் பயணியர்களால் பல காலமாக வணங்கப்பட்டு வருகிறது. காலை 7 மணி முதல் 10 மணி வரையும் மாலை 5 முதல் 7 மணி வரையும் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும்.

30. அருள்மிகு சங்குபாணி விநாயகர் திருக்கோவில் காஞ்சிபுரம்

கருவறை மூலமூர்த்தி விநாயகர் சங்கு வடிவில் அமையப் பெற்றுள்ளதால் சங்குபாணி விநாயகர் என அழைக்கப்படுகிறார். காஞ்சிபுரத்தை நிர்வானிப்பதற்கு முன்பாக இந்த விநாயகரை நிறுவி வழிபட்டதாக கூறுவர். காஞ்சிபுரம் இரட்டைமண்டபப் பகுதியில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. சங்குபாணி பிள்ளையார் என்பது மக்கள் வழக்கில் சப்பாணி பிள்ளையார் கோயில் என்றுமாற்றம் பெற்று வழங்குகிறது. இக்கோயில் அமைந்துள்ள தெரு சப்பாணிப் பிள்ளையார் கோயில் தெரு என்று அழைக்கப்படுகிறது.

கருவறையில் விநாயகரும் பிரகாரத்தில் நாகலிங்கங்களும் நவகிரக சன்னதியும் தனியாக சனீஸ்வர சன்னதியும் அமைந்துள்ளன. சனிப் ப்ரீதிக்காக விநாயகரை வணங்கி பலன் பெறும் பழக்கம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. நினைத்ததை நடத்திக் கொடுப்பவர் இவ்விநாயகர் என்ற கருத்தும் இம்மக்கள் மத்தியில் உள்ளது. காலை 7 முதல் 10 வரையும் மாலை 5 முதல் 7 வரையிலும் தரிசனத்திற்காகத் திருக்கோயில் திறந்திருக்கும்.

31. அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில் காஞ்சிபுரம்

காஞ்சிபுரம், இராஜ வீதியில் கச்சபேஸ்வரர் திருக்கோயிலுக்கு எதிரே சற்று வலது ஓரமாக அமைந்துள்ள இத்திருக்கோயில் பதினாறு பட்டைகளைக் கொண்ட தாராலிங்கத்தைக் கொண்டது. சுவர் முழுவதும் தொன்மை மிக்க புராண சிற்பங்களில் பல்வேறு தேவர்கள் சிவபெருமானை வணங்கும் வடிவினைத் தாங்கியுள்ளது. சிவராத்திரி வழிபாடு சிறப்பானது. காலையும் மாலையும் 6 மணி முதல் 7 மணிவரையில் தரிசனம் செய்யலாம்.

32. திருநெறிக்காரைக்காடு (திருக்காலிமேடு) காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்திற்கு வட கிழக்கில், வேப்பங்குளத்திற்கு அருகே அமைந்துள்ள இத்திருக்கோயில் திருக்காலீஸ்வரர் கோயில் என்றும் புராணங்களில் சத்தியவிரதநாத க்ஷேத்திரம் என்றும் வழங்கப்படுகிறது. புதன் கிரக பரிகாரத் தலமாக விளங்குகிறது. காரை மரமே தல விருட்சமாகும். பாடல்பெற்றது என்ற சிறப்புடைய இத்திருக்கோயிலுக்கு பயணியர் வருகை அதிகம். காலை 7 முதல் 10 வரையும் மாலை 5 முதல் 7 வரையும் திருக்கோயிலில் தரிசனம் செய்யலாம்.

திருஞானசம்பந்தர் இரண்டாம் திருமுறையும் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் புராணமும், காஞ்சி புராணமும் எடுத்தியம்பும் சிறப்புடையது இத்திருக்கோயில்.

33. சித்திரகுப்தன் திருக்கோயில் காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் நெல்லுக்காரத் தெருவின் மேற்குப்புறத்தில், பேரூந்து நிலையத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது இத்திருக்கோயில்.

கருவறையில் 'சித்திராபுத்திரர்' தமது தேவியான 'கருணகி தேவியுடன் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளுகின்றார். இந்திர சபையில் அனைத்து ஜீவன்களின் பாவ புண்ணிய கணக்குகளை விநாடி தவறாமல் வெகு கவனத்துடன் எழுதி வருவதாக கருதப்படும் சித்திரகுப்தர் தம் தேவியோடு எழுந்தருளும் இத்திருக்கோயில் உலகில் ஒரே தனித் திருக்கோயிலாகும்.

ஏடும் எழுத்தாணியும் தாங்கியுள்ள சித்திராபுத்திரனின் வழிவந்தவர்களே கருணீகர் என்ற வகுப்பினர் என்னும் நம்பிக்கையுண்டு. பொதுவாக நவக்கிரக வழிபாட்டுக்கும், மிகக் குறிப்பாக கேது கிரகத்தின் பரிகாரத் தலமாகவும் இத்திருக்கோயில் விளங்குகிறது. சித்திரா பௌர்ணமி திருக்கல்யாண உற்சவம் மிகச் சிறப்பானது. தினமும் காலை 8 முதல் 11 மணி வரையும், மாலை 5 முதல் 8 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

34. அருள்மிகு ஜுரகரேஸ்வரர் திருக்கோயில்
காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கும், காஞ்சி சங்கர மடத்திற்கும் வெகு அருகிலேயே அமைந்துள்ளது. ஜுரம் காய்ச்சல்; ஹரன் தீர்த்தல் என்ற பொருளில் நோய் தீர்த்த ஈஸ்வரர் என்ற பெயரில் விளங்கும் மிகத் தொன்மை வாய்ந்த இத்திருக்கோயிலுக்கு நோய்தீர்க்கும் பிரார்த்தனை, அபிஷேகங்கள் பலராலும் செய்விக்கப்படுகிறது. குபேரனுக்குரிய திருக்கோயில் இது என்பதாலும் உலகெங்கிலிருந்தும் வருகை தரும் பக்தர்கள் ஏராளம்.

சிவபெருமான் சூரபதுமனை அழிக்க வேண்டி தனது பன்முக நெற்றிக் கண்ணிலிருந்து தோற்றுவித்த ஆறுமுகப் பெருமானால் சூர சம்ஹாரம் முடிவடைந்த பின்பும் வெம்மை குறையாமற்போகவே தேவர்களின் அந்த ஜுரத்தை (வெம்மை) ஹரம் செய்த (அழித்த) ஈஸ்வரன் எழுந்தருளுகின்ற புராணப் பெருமை மிக்கது. மகுடத்தில் கஜலட்சுமியின் உருவம் தாங்கிய உலகப் புகழ் பெற்ற வடிவழகுடன் குபேரன் திருவுருவத்தையும், கருவறையில் சிவலிங்கத்தின் பின்புறம் இந்திரன் நின்ற திருக்கோலத்தில் பூஜை செய்யும் சிற்பத்தையும் சிறப்பான கட்டிடக்கலையம்சம் மிக்க வடிவத்தையும் வேறு எங்கும் காண இயலாததாகக் கூறுவர். கருவறைக்குள் காற்றும் வெளிச்சமும் வரவேண்டி மூன்று திசைகளில் சன்னல்கள் அமைந்த வித்தியாசமான கருவறை அமைப்பு உடையது இத்திருக்கோயிலாகும். காலை 8 முதல் 9 மணி வரையும் மாலை 4 முதல் 5 மணி வரையும் தரிசன நேரங்களாக உள்ளன.

35. ஓணகாந்தன் தளி - சலந்தரேசுவரம்
காஞ்சிபுரம்

ஓணகாந்தன் தளி முன்தோற்றம்

பாணாசுரன் என்ற அசுரனின் சேனாதிபதிகள் ஓணன், காந்தன் என்ற இருவரின் பெயரில் வழிபடப்பட்டு வரும், இரு சிவலிங்கங்களின் பெயரால் திருக்கோயில் விளங்குகிறது. இங்கு சுந்தரமூர்த்திசுவாமிகளின் தேவாரப் பதிகத்தில் 'கணபதியேல் வயிறுதர்ரி' என்று குறிக்கப்பட்ட விநாயகர் இன்றும் 'வயிறுதாரிப்பிள்ளையார்' என்ற பெயரில் அருளி வருகிறார். காலை 8 முதல் 12 வரையும் மாலை 4 முதல் 7 வரையும் தரிசனம் செய்யலாம்.

36. அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில் காஞ்சிபுரம்

காஞ்சியில் வாழ்ந்த சிவஞான முனிவர் இயற்றிய காஞ்சி புராணத்தில் ஒரு படலம் இத்திருக்கோயிலுக்கு எழுதப்பட்டது. முன்காலத்தில் பெரும் சிறப்பு உடைய திருக்கோயிலாக இது இருந்திருப்பதை அறிய முடிகிறது. கார்த்திகை, கந்தர் சஷ்டியும், ஐந்து சோமவார வழிபாடும் மிக விசேஷம். ஏகாம்பரநாதர் திருக்கோயிலிருந்து நால்வர் திருவுலா சிவராத்திரி அன்று இத்திருக்கோயிலுக்கு வருவது வழக்கமாகும். மார்கழி திருவாதிரையும் விசேடத் திருநாளாகும். தினமும் காலை 8 முதல் 9 மணிவரை தரிசன நேரமாகும்.

வசிஷ்ட முனிவரின் தங்கையை, வியாக்ரபாதர் மணந்ததால் பிறந்த உபமன்னியர் என்னும் அறவோர்க்கு சிவபிரான் காமதேனுவின் பாலை வழங்க வேண்டி இந்திர வடிவில் தோன்றி அருளி மூப்பு இலா இளமையும், மெய்யறிவும் அருளியதாக புராணம்! குறிப்பாக திருமால், கிருஷ்ணாவதாரத்தின்போது இத்தலத்தில் வாழ்ந்த போற்றுதற்குரிய உபமன்னியரிடத்தில் சிவ தீட்சை பெற்றதாக புராணச் செய்தி ஒன்று உண்டு. உபமன்னிய முனிவர் பாலகனாக இருந்தபோது, பாலுக்காக பாற்கடலையே (திருமால் பள்ளி கொள்ளும் இடம்) பாலகனுக்கு அளித்தார் என்று சைவத் திருமுறைகளும் மாணிக்கவாசகர் அருளிய 'திருவுந்தியாரி'லும் மேற்கோள்கள் உள்ளன. தம்மை உரிய வழியில் வழிபட்டால் எல்லா உயிர்களும் முக்தியடையலாம் என்று வேண்டி தாமே வெளிப்பட்டு அருளிய காரணத்தால் 'தான்தோன்றீசப் பெருமாள்' என்று (பெருமாள் நாமமும் தாங்கி) பெயர். ஏகாம்பரநாதர் சன்னதி தெருவில் இத்திருக்கோயிலில் அமைந்துள்ளது.

தகவல் பலகை

காஞ்சியில் மூன்று தேவியர்களும் வணங்கிய திருக்கோயில்கள்

1. உமையம்மை வணங்கியது திருவேகம்பம்
2. இலக்குமி வணங்கியது காயாரோகணம்
3. கலைமகள் வணங்கியது கச்சபேசம்

37. அருள்மிகு நகரீசுவரர் திருக்கோயில்
காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மேட்டுத் தெரு பேருந்து நிறுத்தத்திற்கு எதிரில் கிழக்கு நோக்கிய வாயிலுடன் உள்ளது. அம்மன் பார்வதி அம்மன் என்னும் உற்சவர் உருவில் இருக்கிறார். இதைத்தவிர முருகன், அனுமன், நவக்கிரகம், பெருமாள், விநாயகர் சன்னதிகளும் அமைந்துள்ளன. காஞ்சி புராணத்தில் இக்கோயில் பற்றிக் குறிப்பு வருகிறது. காலை 7 மணி முதல் 11 மணி வரையும் மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் திருக்கோயில் சேவார்த்திகள் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். மாதாந்திர பிரதோஷம், கார்த்திகை, சோமவாரம், சிவராத்திரி ஆகியன குறிப்பிடத்தக்க உற்சவ நாட்களாகும். 'நகரேஷு காஞ்சி' என்று காளிதாசன் காஞ்சிபுரம் நகரமே நகரங்களில் அழகுள்ளது எனக்குறிப்பிடுகிறான். அந்நகர ஈஸ்வரர் என்ற பொருளில் நகரீஸ்வரர் என்ற பெயருடைய இம்மூலவரை பழம்பெருமை நோக்கி நினைந்துருகும் சிவனடியார் பல்லாயிரம் பேர் ஆவர்.

38. கச்சி அனேக தங்காவதம்
காஞ்சிபுரம்

வடநாட்டிலும் இதே பெயரில் புகழ்ப்பெற்ற திருக்கோயில் ஒன்று உண்டு என்பதால், காஞ்சிபுரம் நகரில் அமைந்த, இது கச்சி என்ற பதத்துடன் அழைக்கப்படுகிறது. விநாயகர் பூசை செய்ததாலும் யானையின் தோலை உரித்து ஆடிய சிவபிரானின் திருக்கோயில் என்பதாலும் யானையின் பெயர் தாங்கி இத்திருக்கோயில் அழைக்கப்படுகிறது.

இறைவன் அருண் மன்னேசுவரர், அம்பிகை மனோன்மணி காளஉறஸ்தி திருத்தலத்தில் இருந்துகொண்டே, திருஞானசம்பந்தர் இத்தலம் குறித்து பாடிய பதிகம் இரண்டாம் திருமுறையில் உள்ளது. சுந்தரர் பாடிய பாடலில், சிவபிரான் யானையின் தோல் உரித்த நிகழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோவிலுக்குரிய வயல்கள் இன்னமும் 'ஆனை உரித்தான் வயல்' என்ற பெயரில் கோவிலுக்கு மேற்கே உள்ளன. கருவறை மீது மூன்று தள சதுர விமானமும் வடக்கு வாயிலில் ஒரு நிலைக் கோபுரமும் உள்ள இத்திருக்கோயிலில், சூரிய சந்திரர் பூஜித்த புராணமும் உண்டு. காஞ்சிபுரம் நகரின் வடமேற்கில் இரண்டரை கிலோ மீட்டர் தொலைவில், புத்தேரி தெருவின் அருகில் உள்ளது. தினமும் காலை 8 முதல் 10 வரையும் மாலை 5 முதல் 6 வரையும் தரிசனம் செய்யலாம்.

39. அருள்மிகு குமரக்கோட்ட
சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
காஞ்சிபுரம்



கருவறைத் தோற்றம்

சிவகாஞ்சி பகுதியில் புகழ்பெற்ற சங்கர மடத்தினருகே ராஜவீதியில் அமைந்துள்ளது. இக்கோயிலமைப்பு வலப்புறத்தில் ஏகாம்பர நாதர் திருக்கோயில். இடப்புறத்தில் காமாட்சி அம்மன் திருக்கோயில். இவ்விரண்டுக்கும் இடையில் பாலசுப்பிரமணியராக, சோமாஸ்கந்தர் அமர்ந்திருப்பது போல அமைந்துள்ள திருக்கோயில். பிரம்மனைச் சிறை செய்து அவனது ருத்ராட்ச மாலையையும், கமண்டலத்தையும் பெற்று மேற்கு நோக்கிய கோலத்தில் மேற்கு நோக்கிய கோபுரத்தோடு காட்சி தருபவர். அருணகிரி நாதரும், பாம்பன் சுவாமிகளும் இத்திருக்கோயில் குமரனைப் பாடியுள்ளனர்.

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் எழுதும்போது 'திகட சக்கரம்' என அடியெடுத்துக் கொடுத்து எழுதச் செய்தவன் இத்திருக்கோயில் குமரன் என்பது புராணம் ஆகும். தவிர அருணகிரிநாதர், சிவஞானமுனிவர் இயற்றிய நூல்களிலும், இக்கோயில் குறிப்பு உண்டு.

கிருத்திகை, ஆடிக் கிருத்திகை, கந்த சஷ்டி, வைகாசி விசாக பிரம்மோற்சவம் போன்றவை குறிப்பிடத்தக்க விசேஷ தினங்கள் ஆகும். சேவார்த்திகள், தரிசனத்திற்காகக் காலை 5 மணி முதல் 12.00 மணி வரையும் மாலையில் 4.00 மணி முதல் இரவு 8.30 வரையும் சன்னதிகள் திறந்திருக்கும்.

இங்கு கந்தபுராணம் அரங்கேறிய மண்டபம் இன்றும் உள்ளது. மலத்தை மரிக்கச் செய்பவன் குமரன் அவனது கோட்டம் குமரக் கோட்டம் எனப்படுகிறது.

கச்சியப்பர் நூலகம் இத்திருக்கோயிலில் இயங்குகிறது.

குமரக்கோட்ட கல்யாண சுந்தரர்

நாக வழிபாடு தொன்மையானது. இவ்வழிபாட்டுக் கூறுகள் அனைத்து சமயங்களிலும் புகுந்து விரவிக் கிடக்கின்றன. காஞ்சிபுரம் குமரக்கோட்டத்தில் இப்படத்தில் காணும் முருகன் வள்ளி தெய்வானை நாகம் குடைபிடிக்கும் வகையில் காட்சி தருகின்றனர். முருகனுக்கு ஐந்து தலை நாகமும், வள்ளிதெய்வானைக்கு மூன்று தலை நாகமும் குடை பிடிக்கின்றன. இவரைக் கல்யாண சுந்தரர் என அழைக்கின்றனர். வைகாசி 11ஆம் நாள் பிரம்மோற்சவத்தில் வள்ளியுடன் சேர்ந்து சுப்பிரமணியருக்கும் ஐப்பசி கந்தசஷ்டியில் தேவசேனையுடன் முருகனுக்கும் திருமணம் நடைபெறுகிறது. கர்நாடக மாநிலம் உடுப்பிக்கு அருகில் ஒரு கோவிலில் மூலவர் நாகசுப்பிரமணியர் இருப்பதாக தகவல் அறியமுடிகிறது. இதுபோல் விக்கிரகம் வேறு எங்கும் இருப்பதாக அறிய முடியவில்லை. நாக ஸ்கந்த வழிபாட்டின் கூறாக இவ்விக்கிரகம் அமையப்பட்டுள்ளது. நாகதோஷம் நீக்கும் தன்மையுடைய நாகசுப்பிரமணியரைக் கண்டு தரிசித்து பலன் பெறுவோம்.

நாகதோஷம் நீக்கும் நாகசுப்பிரமணியர்

40. அருள்மிகு மகா ஆனந்த ருத்ரேஸ்வரர் திருக்கோயில் பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் நகரில் பிள்ளையார் பாளையத்திலுள்ள இந்த திருக்கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. காமிக ஆகம முறைப்படி ஒரு கால பூஜை நடைபெறுகிறது. காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலும் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். இத்திருக்கோயிலில் தட்சிணாமூர்த்தி, சுப்பிரமணியர், சனி பகவான் ஆகியோர் உள்ளனர்.

உருத்திரன் வழிபட்ட சிறப்புடைய இக்கோயிலில் ஆனந்த ருத்திரேசர் தீர்த்தம் எனும் குளம் பிரகாரத்தின் வெளியே உள்ளது.

காஞ்சிபுரம் மாதனம் பாளையம் தெருவில் உள்ள மகாருத்ரேஸ்வரத் திருக்கோயில் வேறொரு திருக்கோயிலாகும். ஏகாதசி ருத்ரர்கள் மகாருத்ரர்கள் ஆவர், இவர்கள் வந்து வழிபட்ட திருக்கோயில் இது. வில்வம் தல விருட்சம்.

41. முப்புராரிக் கோட்டம், காஞ்சிபுரம்

பெரிய காஞ்சி சந்தவெளியம்மன் கோவிலை ஒட்டிச் செல்லும் கீழ் அம்பி சாலையில் 3வது கிலோ மீட்டரில் இக்கோயில் உள்ளது. இதற்கு எயிற்கோட்டம் என்ற பெயர் வழங்கியதாகவும் தற்போது ஈயப்பிள்ளையார் கோவில் எனவும் வழங்கப்படுகிறது. மண்டபத்தின் இடப்புறம் முப்புராரி என வழங்கப்படும் சிவலிங்கம் உள்ளது. இந்த லிங்கமே திரிபுரத்தைச் சார்ந்த மூவர் வழிபட்டதாகும்.

திரிபுரத்து சுதன்மன், சுசீலன், சுபக்தி ஆகிய மூவரும் புத்தன் என்பவனின் பொய்யுரைகளில் மயங்காது சிவநெறியில் நின்றனர். மகிழ்ந்த இறைவன் அவர்களுக்கு வேண்டும் வரம் தருவதாக கூற சிவனின் வாயிற்காவலராக பணி செய்ய வேண்டினர். இறைவன் ஆணைப்படி காஞ்சி அடைந்து 'முப்புராரீசன்' என்ற பெயரில் சிவலிங்கம் நிர்மாணித்து பூசித்து வேண்டிய பேறு அடைந்தனர். அதனாலே இத்திருக்கோயில் முப்புரத்தைச் சேர்ந்தவர்கள் ஆராதித்த கோட்டம், முப்புராரிக் கோட்டம் என வழங்கப்பட்டது. தினமும் காலை 8 முதல் 10 மணி வரை தரிசனத்திற்கும், பூஜைக்கும் என திருக்கோயில் திறந்திருக்கும்.

42. அருள்மிகு விளக்கொளிப் பெருமாள் மற்றும் தூப்புல் வேதாந்த தேசிகர் திருக்கோயில் காஞ்சிபுரம்

திருக்கோயில் முன்தோற்றம்

காஞ்சித் தலபுராணப்படி வரதராசப் பெருமாள் திருக்கோயில் தோன்றிய காலத்தே சரஸ்வதியின் சாபத்தில் பிரும்மா தவம் புரிந்த யாகசாலை முதலான இடங்கள் இருள் கவிழ்ந்து போயின. நீராய், நிலனாய், காற்றாய், ஆகாயமாய் காட்சி தந்த பெருமாள் ஜோதி வடிவமாய் விளக்கிலே ஒளியாய் காட்சி தந்து இருள் போக்கியதால் 'விளக்கொளிப் பெருமாள்' எனவும் 'தீபப்பிரகாசர்' எனவும் அழைக்கப்படுகிறார். திருமங்கையாழ்வார் பாடல் பெற்றது.

தர்பைப்புல் வளர்ந்த பகுதியாக இருந்த இக்கானகப் பகுதியில் திருமால் தோன்றி காட்சி தந்ததால் 'தூப்புல்' என இப்பகுதி அழைக்கப்பட்டது. இத்திருக்கோயில் இருக்கும் இடத்திலேயே வடகலை ஆச்சார்யரான வேதாந்த தேசிகர் தோன்றியதால் அவர் தூப்புல் வேதாந்த தேசிகர் என அழைக்கப்பட்டார். 'திருத்தண்கா' எனவும் 'தூப்புல்' எனவும் அழைக்கப்பெற்ற இத்திருத்தலத்தில் பெருமாள் ஸ்ரீகர விமானத்துடன் நின்ற திருக்கோலத்தில் மேற்கே பார்த்த திருமுக மண்டலத்துடன் காட்சி தருகிறார்.

108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான இத்திருக்கோயிலில் தாயாரின் திருநாமம் 'மரகதவல்லித் தாயார்' என்பதாகும். தேசிகருக்கென அருகில் தனி சன்னதி உள்ள அவதாரத்தலமான இத்திருக்கோயிலின் பிரதான வாயில் மேற்கு நோக்கியே அமைந்துள்ளது. இத்தலத்தில் தேசிகனின் தாயார் தங்கியிருக்கையில் அவர் கனவில் கண்டவாறே திருப்பதி திருமலையார் கைமணி

காணாமற்போய் அவரது மணி வயிற்றில் தேசிகராக அவதரித்ததாகவும் கூறுவர். அன்று காணாமல் போன கைமணி நினைவாக இன்றும் திருமலையில் மணி சாதிப்பதில்லை என்றும் கூறுவர். தினமும் காலசந்தி, சாயரட்சை என இரு காலங்களில் பூஜைகள் நடைபெறுகின்றன. வைகானச ஆகமப் பூஜை நடைபெறுகின்றது. காலை 7.30 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 7 மணி வரை சேவார்த்திகள் தரிசனத்திற்காக திருக்கோயில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'சரஸ்வதி தீர்த்தம்' என்பதும் 'லட்சுமி புஷ்கரணி' என்பதும் இத்திருக்கோயிலின் தீர்த்தங்களாகும். சித்திரை மாதம் ரேவதி நட்சத்திரத்தில் அவதார உற்சவமும் வைகாசியில் வரதர் இத்திருக்கோயிலுக்கு வந்து கருடவாகன ஆரூடராக தேசிகருக்கு மரியாதை செய்வதும் ஆவணி மாதத்தில் விளக்கொளிப் பெருமாள் தேசிகர் சன்னதிக்கு புறப்பட்டுச் செல்வதும், புரட்டாசி மாத தேசிகர் உற்சவமும், மார்கழியன்றும், சித்திரா பருவத்தன்றும் வரதர் எழுந்தருளி தேசிகருக்கு மரியாதை செய்வதும் அரிதானக் காட்சியாகும். இதைத்தவிர ஆண்டாள் சன்னதி, தாயார் சன்னதி, கருடன் சன்னதி தனியே உள்ளன. சரசுவதிக்கு காட்சி தந்த திருத்தலம் ஆகும். பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தெற்கே உத்திரமேரூர் சாலையில் இருந்து கிழக்கே பார்த்தால் திருக்கோயில் தெரியும்.

1268 ம் ஆண்டு தோன்றிய வேதாந்த தேசிகர் 1369ம் ஆண்டு வரை நூற்றாண்டுகள் வாழ்ந்து கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி பல நூல்களை வட மொழிகளிலும், காஞ்சி வரதப் பெருமாள் மீது அடைக்கலப்பத்து எனும் தமிழ் நூலும் 50 சுலோகங்களை வரதராஜ பஞ்சகத்திலும் எழுதினார். இவரது புதல்வர் நயின வரதாச்சாரியார் இக்கோயிலை கட்டி முடித்தார் என்பர். தேசிகர் வணங்கிய ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவர் இன்றும் செப்புத்திருமேனியாக இங்கு வணங்கப் பெறுகிறது. தேசிகர் திருக்கோயிலுக்கு வந்து தீபப்பிரகாசரைத் தரிசித்து ஆண்டவருடன் ஆச்சாரியனையும் தரிசிக்கப் பெறும் வாய்ப்பைப் பயன்படுத்தல் நன்று.

தகவல் பலகை

ஒருவரது ஜாதகத்தில் 12 ஆம் இடமான மோட்சதானத்தில் கேது அமையப்பட்டால் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்யும் யோகம் உண்டாகிறது.

43. அருள்மிகு கள்வர் பெருமான் திருக்கோயில்

நூற்றெட்டு வைணவ திவ்விய தேசங்களில் ஒன்றானதும், திருமங்கை ஆழ்வாரால் 'கள்வா' என விளிக்கப்பட்ட கள்வர் பெருமாள் காமாட்சி அம்மன் திருக்கோயில் கருவறையின் இடதுபக்கச் சுவரில் எழுந்தருளி இருக்கிறார். நின்ற கோலத்தில் காட்சி தரும் கள்வனின் இருப்பிடம் வைணவ சாக்த இணை வழிபாட்டுக்கு ஒரு முக்கியதலமாக விளங்குகிறது. இத்திருத்தலம் கள்வனூர் என அழைக்கப்படுகிறது.

44. அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் நகரில் உயர்ந்த கோபுரம் கொண்ட திருக்கோயில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயம் ஆகும். சங்கரமடம் வெகு அருகிலமைந்துள்ளது. ஏகம் + ஆம்ரம் (ஒற்றை மாமரம்) தல விருட்சமாகக் கொண்ட திருக்கோயில் ஆகும். அத்தலவிருட்சத்தினடியில் ஏகாம்பர நாதரை ஏலவார் குழலி அம்மை கைப்பிடித்ததனால் மாவடி என அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு திருமணமும் மாவடியில் நடப்பது சிறப்பெனக் கருதி திருமணம் நடைபெறுகிறது.

மாவடி

தெற்கு ராஜ கோபுரம், பல்லவ கோபுரம், மேற்கு கோபுரம் என மூன்று ராஜ கோபுரங்களைக் கொண்டது இத்திருக்கோயில். தெற்கு ராஜ கோபுரம் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டதாகும். பிருதிவி (பூமி,மண்) தலம் என்று பஞ்சபூதத்தலங்களில் காஞ்சி தனித்த பெயர் பெறுகிறது. கிழக்குத் திசை நோக்கி இருக்கும் ஏகாம்பரநாதர் சன்னதியில் மணல் லிங்கம் உள்ளது. கருவறை பிற்கால பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்டதற்குச் சான்றாக சோமாஸ்கந்தர் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது.

ஏகம்பத்தைத் 'திருவேகம்பம்' என்று பாடல்கள் பாடுகின்றன. சுந்தரர் இடக்கண் பெற்ற திருத்தலம் இதுவாகும். 1,2,3ம் திருமுறையில்

சம்பந்தர் 44 பாடல்களும், 4,5,6ம் திருமுறைகளில் அப்பர் 70 பாடல்களும், 7ம் திருமுறையில் சுந்தரர் 11 பாடல்களும் 8ம் திருமுறையில் மாணிக்கவாசகர் ஒரு பாடலும் ஆக 126 பாடல்கள் பாடியுள்ளனர். காமிக ஆகம முறைப்படி பூசைகள் நடைபெறும் இத்திருக்கோயிலில் காலை 6 மணிக்கு உஷக்காலம், 8.30க்கு காலசந்தி, 12 மணிக்கு உச்சிக் காலம், மாலை 6 மணிக்கு பிரதோஷம், மாலை 7 மணிக்கு சாயரட்சை, 8.30 மணிக்கு அர்த்த ஜாமம் என ஆறு கால பூசைகள் நடைபெறுகின்றன. இத்திருக்கோயிலுக்கு நான்கு தீர்த்தங்கள் உள்ளன. திருக்கோயிலின் உட்புறம் 1) சிவகங்கை 2) கம்பா தீர்த்தம் (திருக்கோயிலமைவிடத்தின்கீழ் கண்கள் உணராவண்ணம் ஒன்றும் செல்வதாக ஐதீகம்) என்பவையும், வெளிப்புறம் சர்வ தீர்த்தம், மங்கள தீர்த்தம் என நான்கு தீர்த்தங்களும்உள்ளன. இத்திருக்கோயிலுக்கு அம்மன் மூலவர் சன்னதி கிடையாது. உற்சவர் மட்டும் உண்டு. உற்சவர் பெயர் அம்மை ஏலவார் குழலி ஆகும். ஐந்து பிரகாரங்கள் உடைய இத்திருக்கோயிலில் முதல் பிரகாரத்தில் பிரளயம் காத்த நாதர், 63 நாயன்மார்கள், சந்தானக் குரவர்கள், வெள்ளைக் கம்பர், மத்தள மாதேசுவரர், மார்க்கண்டேயர், கள்ளக் கம்பர், நல்லக் கம்பர், அகத்தீசர், சூரியன் ஆகியோருடன் வியத்தகு வகையில் நிலாத்துண்டப் பெருமாள் என்னும் 108 வைணவ திவ்விய தேசத்துள் ஒரு திவ்விய தேசமும் அமைந்துள்ளது. இரண்டாம் பிரகாரத்தில் தாராலிங்கங்கள் 136, பிரளயம் காத்த அம்மன், உற்சவர் மண்டபம், பஞ்சமுக விநாயகர், மாவடி, ஆயிரத்தெண் லிங்க சன்னதி, ஏலவார் குழலி சன்னதி, முருகர், நடராச சபை, பள்ளியறை ஆகியவை அமைந்துள்ளன. மூன்றாம் பிரகாரத்தில் தம்பட்ட விநாயகர் சன்னதி, விஷ்ணுவேசுவரர். கச்சி மயானம், வாலீசுரம், ரிசபேசம் என்ற சன்னதிகள் அமைந்து உள்ளன. நான்காம் பிரகாரத்தில் ஆயிரங்கால் மண்டபம் விகட சக்கர விநாயகர், முருகர் சன்னதிகள் உள்ளன.

மணல் லிங்கத்தைத் தழுவும் நாயகி

ஒவ்வொரு சோமவாரமும், பிரதோஷமும் சிறப்பானவை. சித்திரையில் திரு ஊறல் உற்சவம், வைகாசியில் விசாகம், ஆனியில் திருமஞ்சனம், ஆடியில் பவித்ரோத்சவம், ஆவணியில் நடராசர்

அபிஷேகம் மற்றும் மூலம், புரட்டாசி நவராத்திரி, ஐப்பசி தீபாவளி கந்தசஷ்டி, கார்த்திகை சோமவார லட்சதீபம், தைரத சப்தமி, தெப்பத் திருவிழா, தைப்பூசம், மாசிமகா சிவராத்திரி, தவன உற்சவம் நடைபெறுகின்றன.

பங்குனி உத்திர பிரம்மோற்சவம் குறிப்பிடத்தக்க விழா ஆகும், பதிமூன்று நாள் நடைபெறும் இவ்விழாவில்ஐந்தாம் நாள் அதிகார நந்தி சேவையும், ஆறாம் நாள் அறுபத்தி மூவர் திருவிழாவுடன் வெள்ளி ரத வீதி உலாவும், ஒன்பதாம் நாள் மாவடி சேவையும், பத்தாம் நாள் இரவு பங்குனி உத்திரத் திருக்கல்யாணமும், பன்னிரண்டாம் நாள் பஞ்சமூர்த்தி புறப்பாட்டுடன் உற்சவம் நடைபெறும். அனைத்து சிவத்தலங்களிலும் பொதுத் துதியாக கூறப்படும் தென்னாடுடைய சிவனே போற்றி....... என்பனவற்றுள் 'ஏகம்பத்துறை எந்தாய் போற்றி' எனப்போற்றும் தனிச்சிறப்புடைய சிவ பெருமானை மணல் லிங்கமாயும் மாவடியிலும் கண்டு வணங்காமல் சிவனடியார் பிறவிப்பேறு எய்த இயலாது என்பர். காலை 6 மணி முதல் 12.30 வரையும் மாலை 3.45 முதல் இரவு 8.45 வரையும் தரிசனம் செய்யலாம்.



கோட்டோவியத்தில் மாவடி

தகவல் பலகை

காஞ்சி புராணப்படி கீழ்கண்ட 7 தீர்த்தங்களில் நீராடுவது பலன் தரும்.

1. ஞாயிறு	இஷ்ட சித்தி தீர்த்தம்	கச்சபேசம்
2. திங்கள்	சிவகங்கை தீர்த்தம்	ஏகம்பம்
3. செவ்வாய்	மங்கள தீர்த்தம்	கங்கை கொண்டான்
4. புதன்	இந்திர தீர்த்தம்	திருக்காலிமேடு
5. வியாழன்	தாயார் குளம்	காயா ரோகணீசம்
6. வெள்ளி	உலகாணி தீர்த்தம்	காமகோட்டம்
7. சனி	சர்வ தீர்த்தம்	ஏகம்பம்

45. திருக்கச்சி மயானம்

ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலின் கொடி மரத்தின் தென்புறம் அமைந்துள்ளது. பாடல் பெற்ற வைப்புத்தலமாகும் இது. கடவூர், நாலூர், ஆகிய பிற இரு மயானங்களுடன் இதுவும் மூன்றாவது மயானமாக சைவர்களால் வணங்கப்படுகிறது. கபாலிக சமயத்தவர் தொழும் இடமே மயானங்கள். இம்மரபினர் சிவ பார்வதி திருவுருவை ஒரே பீடத்தில் வணங்கி, 'கட்டங்கம்' எனும் கைப்பிரம்பால் அறியப்படுபவர்கள். நாவுக்கரசர் பாடல் சிவனே கட்டங்கம் ஏந்தியுள்ளாரென்று குறிப்பிடுகிறது. இக்கோயில் புதிதாக வெளியிடத்திலிருந்து கொணரப்பட்டது அல்லது தனிக்கோயிலாக இருந்து பின்னால் ஒரே வளாகத்தினுள் ஒரே நிர்வாகத்தில் வந்து விட்டது என்பர்.

ஆலய அலுவலகத்தின் அருகிலுள்ள இடபேசர் சன்னதியில் உமாசகிதர் வடிவமும் (சிவபார்வதி ஒரே பீடம்) இருவருக்கும் மேற் கரங்களில் கட்டங்கமும் கீழ்க்கரங்களில் வாளும் கபாலமும் உள்ளன. இவ்வரிய வடிவம் வேறெங்கும் காண இயலாத ஒன்று.

46. நிலாத்திங்கள் துண்டப் பெருமாள்

ஏகாம்பரேசுவர் சன்னதிக்கு அடுத்த வெளிச்சுற்றின் வலப்புறம் மேற்கு நோக்கிய பெருமாள் (திருமால்) சன்னதி சைவ வைணவ அமைதிக்கு ஒரு சான்று.மாவடியில் தவமிருந்த பார்வதி தேவிக்கு உதவ வாமனரை வேண்டவே, வாமனர் சங்கு சக்கரம் தரித்து அமிர்த கிரணங்கள் கொண்டு பார்வதியின் குறைகளைத் துடைத்தமையால் 'நிலாத்திங்கள்துண்டத்தான்' எனப் பெயர் அமைந்தது.

திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இந்த சன்னதியை இங்கு வந்து வணங்காமல் நூற்றெட்டு திவ்ய தேசதரிசனம் முற்றாகாது. இத்திருக்கோயில் சன்னதியின் தாயார் பெயர் வேறொருவர் இல்லா வல்லி எனவும், 'நிலாத்திங்கள் துண்டத் தாயார்' எனவும் அழைக்கப்படுகிறார். புருஷ சூக்த விமானத்தில் மேற்கே திருமுக மண்டலத்துடன் சந்திரனுக்கும் சிவனுக்கும் காட்சி அருளிய திருத்தலமாகும்.

47. அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயில் காஞ்சிபுரம்

அன்னை காமாட்சி

காஞ்சியில் இருந்து முப்பத்திரண்டு வகை அறம் செய்ய வந்த உமையானவள், காமாட்சியாக அவதாரம் எடுத்து அருள் வழங்கும் திருக்கோயில் காம கோட்டம் என்னும் இத் திருக்கோயிலாகும். காஞ்சிபுரத்தின் பழைய சிவன் திருக்கோயில் எதிலும் அம்மனுக்கு என தனி சன்னதி அமையவில்லை. காஞ்சி முழுவதற்கும் காமாட்சி தேவியே அம்மன் சன்னதியாக இருந்து அருளாட்சி செய்கிறாள்.

காமாட்சி, கருவறையில், காயத்ரி மண்டபத்தின் நடுவில் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கிறாள். பாசம், அங்குசம், கரும்புவில், புஷ்பபாணம் ஏந்தி சந்திர சூடாமணிக் கிரீடம் தரித்து, சூரிய சந்திரர்களை இரு செவிகளிலும் காதோலையாகக் கொண்டு, செம்பட்டாடையுடன் பலவகை ஆபரணங்களுடன், திருமாங்கல்யத்துடன் திரிபுர சுந்தரியாய் இருக்கிறாள். ஆதி சங்கரர் அம்பாளின் எதிரில் ஸ்ரீ சக்கரத்தை பிரதிஷ்டை செய்துள்ளார். இதனில் யந்திர ரூபமாய் காமாட்சி விளங்குகிறாள். சரசுவதியும், இலட்சுமியும் தோழியராக உள்ளனர். திருக்குளமானது, உலகாணித் தீர்த்தம் எனப்படுகிறது. அம்பாள் விமானமும், ஆதி சங்கரர் விமானமும் தங்கத்தகடு வேயப்பட்டவையாகும். தினசரி பூசைகளுடன், மாசியில் பிரம்மோற்சவமும் மற்ற மாதாந்திர உற்சவங்களும் சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு வெள்ளியும், பௌர்ணமி மற்றும் பிற விழா நாட்களிலும் தங்கத்தேர் உலா நடைபெறும். ஆதிசங்கரர் ஸ்தாபித்த சங்கரமடத்தின் மடாதிபதியரே இவ்வாலய பரம்பரை அறங்காவலர்கள் ஆவர். தினமும் காலை 6 முதல் 12 மணிவரையும் மாலை 4 முதல் 8.30 மணி வரையும் பொதுவான தரிசன நேரங்கள் ஆகும்.

ஜகத்குரு

48. அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில் காஞ்சிபுரம்

முகலிங்கம்

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்கு மேற்கேயும், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு தெற்கேயும் ராஜவீதியில் அமைந்துள்ளதாகும். இத்திருக்கோயிலின் ராஜகோபுரம் வடபுறம் நோக்கியும் ரிஷி கோபுரமும் சன்னதியும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையில் இலிங்கத்தின் பின்புறம் சோமாஸ்கந்தர் திருவுருவம் உண்டு.

பஞ்சசந்தி விநாயகர் என்னும் சன்னதி வடக்கு நோக்கியும், துர்க்கை தெற்கு நோக்கியும் கோயில் கொண்டுள்ளனர். சூரியனுக்கு தனி சன்னதியும் உள்ளது. ரிஷி கோபுரத்தின் வழியாக உள்ளே நுழைந்தால் நடராஜர் சன்னதியும், 63 நாயன்மார்களும், இரட்டைப் பிள்ளையாரும், சிவலிங்கம், ஆறுமுகசுவாமி, சரஸ்வதி, சண்டிகேஸ்வரர், நவக்கிரகம், மகாவிஷ்ணு ஆகியோர் இருக்கின்றனர் இத்திருக்கோயிலின் ஸ்தலவிருட்சம் முருக்க மரமாகும். சாபவிமோசனத்திற்காக திருமால் ஆமை உருக்கொண்டு முருக்க மரத்தடியில் சிவலிங்கம் நிறுவி இலக்குமியுடன் வழிபட்டு பேறு பெற்ற இடம் கச்சபேஸ்வரம் ஆகும்.

கோயிலின் உட்புறத்தோற்றம்

கச்சபம் என்பது ஆமை ஆகும். இத்திருக்கோயிலில் காமிக ஆகம முறைப்படி ஆறு கால பூஜை நடைபெறுகிறது. காலை 6 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையும் ஆறு கால பூஜைக்காகவும் தரிசனத்திற்காகவும் திறந்து வைக்கப்படும். பிரதோஷமும், கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் மாவிளக்கு இடுதலும், ஆருத்ரா தரிசனமும், சித்திரை உத்திரம் பெருந் திருவிழாவும் முக்கியமான நாட்களாகும்.

கோயிலின் உள்ளே எதிரே சூர்ய தீர்த்த கரையின் மேற்குப் பகுதியில் இட்டசித்தி தீர்த்தம் உள்ளது. அருகே இஷ்ட சித்தீச்சரம்

எனும் கோயிலும் உண்டு. காஞ்சிபுராணத்தில் இட்டசித்தீசம் வேண்டுவன வழங்குவது மிகச் சிறப்பாக சொல்லப்பட்டுள்ளது. வடபுறம் இத்தீர்த்தம் தரும தீர்த்தம் என்றும் கிழக்கில் சித்த தீர்த்தம் என்றும் தென்புறம் காம தீர்த்தம் என்றும் மேற்கே முக்தி தீர்த்தம் என்றும் நான்கு தீர்த்தங்களாக சொல்லப்படுகிறது. அந்தந்தப் பகுதி அந்தந்த பலன்தருவதாக நம்புகின்றனர். நந்தவனங்கள் மூன்று இங்குண்டு. விஜய நகர பேரரசின் திருப்பணி சில உண்டு.

முருக்க மரத்தடியில் திருமால் ஆமை வடிவில் பூசித்தல்

காஞ்சிபுரம் காஞ்சிக் கடிகை எனும் கல்வி நிறை நகரமாக இருக்கையில் கல்வி கற்க வந்த மயூரசர்மன் எனும் அரசன் பார்வையிழந்த பின் இஷ்ட சித்தி தீர்த்தத்தில் மூழ்கி சூரியன் மீது சூர்ய சதகம் எனும் நூலை இயற்றி வழிபட்டு பார்வை மீளப் பெற்றார். இந்நூல் கல்வெட்டாக இங்கு இருந்தும் நவக்கிரக சன்னதி மீது ஜன்னலில் இத்தலைப்பு பகுதி மட்டுமே மிஞ்சியுள்ளது.

49. அருள்மிகு பணாமுடீஸ்வரர் திருக்கோயில் காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் உத்திரமேரூர் சாலையில் உள்ளது. நாகம் ஈசனை பூசித்ததாக புராண வரலாறு கூறுகிறது. எனவே பணாதரீஸ்வரர் என்பது பணாமுடீஸ்வரர் என மாறி வழங்குவதாகக் கூறுவர். கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ள சன்னதியைத் தவிர பிரகாரத்தில் தட்சிணாமூர்த்தி, விநாயகர், சுப்ரமணியர், காலபைரவர், நவக்கிரகம், பெருமாள், சண்டிகேஸ்வரர், சூரியன், துர்க்கை ஆகிய மூர்த்திகள் உள்ளனர். காமிக ஆகம முறைப்படி ஒரு கால பூஜை நடைபெறும் இத்திருக்கோயிலில் உப கோயில்களாக கற்பக விநாயகர், ஆதிபதீஸ்வரர், விகடசக்கர விநாயகர், விருப்பாச்சீஸ்வரர், ஆலடிப் பிள்ளையார் ஆகிய கோயில்கள் உள்ளன. மாதப் பிரதோஷம் விநாயகர் சதுர்த்தி, கந்த சஷ்டி, திருக்கார்த்திகை, ஆருத்ரா தரிசனம் ஆகியவை விசேட தினங்களாகும். காலை 6 முதல் 10 மணி வரையும் மாலை 4 முதல் 8 மணி வரையும் தரிசிக்கலாம்.

50. அருள்மிகு காயாரோகணீஸ்வரர் திருக்கோயில் காஞ்சிபுரம்



ஸ்ரீ குருபகவான்

காஞ்சிபுரத்தில்பிள்ளையார் பாளையம் பகுதியில் காஞ்சிபுரத்தின் பேருந்து நிலையத் திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் தென்மேற்கு திசையில் அமைந்துள்ளது. காஞ்சிபுர நகர மக்களனைவரால் 'குருக்கோயில்' என வழங்கப்படுகிறது. உடம்பாகிய காயத் தினை ஆரோகணித்துக் கொள்ளுதல் அதாவது 'தன்னுடன் ஏற்றிச் செல்லுதல்' என்னும் தத்துவ அடிப்படையில் பிரம்மா, விஷ்ணு ஆகியோரை ஊழிக்காலத்தில் காப்பாற்றி மீண்டும் அவரவர் பணியை பார்க்க அமர்த்தும் சக்தி வாய்ந்த இறைவன் 'காயாரோகணீஸ்வரர்' என அழைக்கப்படுகிறார். இறைவி 'கமலாம்பிகை' எனப்படுவார். கஜபிருஷ்ட (யானையின்பின்புற வடிவம்) விமானத்தில் கோஷ்டமூர்த்திகளாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர் ஆகியோரும் சோழர் காலத்ததாகக் கருதப்படும் முருகப்பெருமானும், தேவார மூவரும், மாணிக்க வாசகரும், மாவிரத லிங்கங்கள் ஆறும், கற்பக விநாயகரும், மகாலட்சுமியும், சண்டிகேஸ்வரர், பைரவர், சூரியன் நவகிரக சன்னதிகளும் அமைந்துள்ளன. இத்திருக்கோயிலில் ஸ்தல விருட்சம் வில்வமரமாகும். இலக்குமி தோண்டிக் கொடுத்த தீர்த்தம் தாயார் குளம் என்பது ஐங்கோண வடிவில் அமைந்த குளமாகும்.கிட்டதட்ட 12,13ம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டுமான அமைப்புடைய இத்திருக்கோயிலில் காமிக ஆகம முறைப்படி இருகால பூஜை நடைபெறுகிறது. காலை 7 முதல் 11 மணி வரையும் மாலை 5 முதல் 7 மணி வரையும் தரிசன நேரமாகும்.

குரு பகவான் : தேவகுரு, பிரகஸ்பதி, வியாழன் என்று கூறப்படுபவரும் நவக்கிரகங்களில் ஒருவரான குருபகவான் தனி சன்னதியாக இரு கைகளைக் கூப்பி இறைவனை வழிபடும் நிலையில் அமர்ந்த திருக்கோலத்தில் இருக்கிறார். தனி குருபகவான் சன்னதி உள்ள திருக்கோயில் தென்னிந்தியாவில் வேறு எங்கும் இல்லை. குரு பிரதானமாவதால் இத்திருக்கோயில் குருக்கோயில் என்றே வழங்கப்படுகிறது. இத்திருக்கோயிலுடன் தாயார் குளக்கரையில் 'அருள்மிகு தர்மலிங்கேஸ்வரர்' திருக்கோயிலும், 'அருள்மிகு லிங்கேசுவரர்' திருக்கோயிலும் அமைந்துள்ளது. பிரதி குரு வாரமும் மாத பிரதோஷமும் வருடாந்திர குரு பெயர்ச்சியும் முக்கியமான விசேஷ நாட்களாகும்.

51. அருள்மிகு வைகுண்டப்பெருமாள் திருக்கோயில் காஞ்சிபுரம்

பரமேஸ்வர விண்ணகரம் எனும் பழம்பெயர் சிந்தனைக்குரியது. காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து வடகிழக்கில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலும், ரயில் நிலையத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. 108 திவ்விய தேசங்களில் ஒன்றான இத்திருக்கோயில் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டதாகும். பாசுரத்தில் 'பரமேஸ்வர விண்ணகர்' என மங்களா சாசனம் செய்கிறார். மூலவர் வைகுண்டப் பெருமாள் நின்றான், கிடந்தான், இருந்தான், என மூன்று நிலைகளில் முகுந்த விமானத்தின் கீழ் மேற்கு நோக்கிய சன்னதியாக அமைந்துள்ளது.



மார்கண்டேயனுக்கு அருளும் 'கிடந்தான்'

தாயார் திருநாமம் வைகுந்தவல்லி. முகுந்த விமானம் என அழைக்கப்படும் விமானத்தில் மேற்கே வீற்றிருந்த திருக்கோலத்தில் திருமால் தர்பார் ஆசனத்தில் காட்சி தருகிறார். ஆயிரம் தீர்த்தம் எனத் தீர்த்தச் சிறப்பு பற்றி கூறுவர். இத்திருக்கோயில் இறைவன் பல்லவ மன்னனுக்குக் காட்சி தந்த திருக்கோயிலாகும். 2ம் தளத்தில் நின்ற திருக்கோலத்திலும் இறைவன் காட்சி தருகிறான். மூன்றடுக்கில் மூலவர் சன்னதிகள் அமைந்த தனித்துவம் மிக மிக அரியது. மூன்றாம் தளத்தில் பள்ளி கொண்ட கோலத்தில் வலக்கை மார்க்கண்டேயர்க்கு அருளும் வண்ணம் உள்ளது.

கி.பி.6,7ம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் பரமேசுவரவர்ம பல்லவர் காலத்தில் கட்டப்பட்டது. வைகானச ஆகமப்படி இருகால பூஜை நடைபெறும் இத்திருக்கோயில் காலை 9 மணி முதல் 11.30 வரையிலும் மாலை 4.30 மணி முதல் 7.30 மணி வரையிலும் தரிசனத்திற்காக திறந்திருக்கும். ஒவ்வொரு வைகுண்ட ஏகாதசியும், வைகாசி மாதம் நடக்கும் பிரம்மோற்சவமும் முக்கியமான திருநாட்களாகும். இத்திருக்கோயிலின் பிரகார சுவரில் பல்லவ வம்ச வரலாற்றைச் சுட்டிக் காட்டும் 50 சிற்ப உருவங்கள் அடுக்கடுக்காக உள்ளன. தொன்மை காரணமாக உலகளாவிய தொல்பொருள் முக்கியத்துவம் பெற்றது.

52. அருள்மிகு வழக்கறுத்தீசுவரர் திருக்கோயில் காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் காந்தி ரோட்டில் அருள்மிகு வழக்கறுத்தீஸ்வரர் திருக்கோயில் வடக்கு வாயிலுடன் அமைந்து இருந்தாலும், மூலஸ்தானம் கிழக்கு நோக்கியே அமைந்து உள்ளது. காஞ்சி புராணத்தில் வழக்கறுத்தீசுவரர் படலம் என்ற பகுதியில் இத்திருக்கோயில் சிறப்புத் தெரிவிக்கப்படுகிறது. வழக்குகளால் வருத்தமடைந்த பலரும் தங்கள் வழக்குகள் நன்முறையில் நடைபெற பிரார்த்தனை செய்து வழிபடுகின்றனர். வழக்குகளிலிருந்து மீள வேண்டி சிறப்புப் பிரார்த்தனை, அபிஷேக ஆராதனைகள் செய்திட பலநூறுகல் தொலைவிலிருந்தும் கூட இங்கு வந்து வழிபட்ட வழிபட்டு வரும் பக்தர்கள் ஏராளம். இத்தகைய சிறப்புடைய திருக்கோயில் இது ஒன்றே! காமிக ஆகமத்தைப் பின்பற்றி மூன்று கால பூஜையும் சேவாத்திகள் நலனுக்கென காலை 7 மணி முதல் 11 மணி வரையும் மாலை 4.30 மணி முதல் 8.30 மணி வரையும் திருக்கோயில் திறந்திருக்கும்.



கோயிலின் உட்புறம்

கார்த்திகை, சோமவாரம், சிவராத்திரி, பிரதோஷம் ஆகியவை முக்கியமான நாட்கள் ஆகும். தீயதை அழிக்கும் வகையில் சிவன் பராசுரேஸ்வரர் ரூபத்தில் வந்து அழித்த பராசரேஸ்வரர் சன்னதியும் தனி சன்னதியாக உள்ளது. இது பரதாளேஸ்வரர் சன்னதி எனவும் வழங்கப்படுகிறது.

தகவல் பலகை

காஞ்சி புராணப்படி காஞ்சியில் சிவனுக்கு 16,000, விநாயகருக்கு 1,00,000, காளிக்கு 5,000, விஷ்ணுக்கு 12,000, முருகனுக்கு 6,000, திருமகள், கலைமகளுக்கு தலா 1000 கோயில்கள் இருந்ததாகத் தெரிகிறது.

53. அருள்மிகு சாலபோகம் கைலாசநாதர் திருக்கோயில் காஞ்சிபுரம்



கோயில் தோற்றம்

ராஜசிம்மப் பல்லவன் கோவில் கட்டி கும்பாபிஷேகத்திற்கு நாள் குறித்தபோது கனவில் சிவன் தோன்றி அன்று திருநின்றவூரில் பூசலார் நாயனார் கட்டிய திருக்கோயில் கும்பாபிஷேகத்திற்குச் செல்லுவதாகக் கூறிய புராண வரலாறு உடைய இத்திருக்கோயில் ராஜசிம்மேஸ்வரம், மகேந்திரவர்மேஸ்வரம், நாரதேஸ்வரர் ஆலயம், சாலபோகம் கைலாச நாதர் திருக்கோயில் எனப் பல்வேறு பெயர்களால் வழங்கப்படுகிறது. கலைச்சிறப்புக்காக மத்தியத் தொல்பொருள் துறை பராமரிப்பில் உள்ள இத்திருக்கோயிலில் காரண ஆகமத்தைப் பின்பற்றி காலை 9.00 மணிக்கும் மாலை 4 மணிக்கும் பூஜை நடைபெறுகிறது. சேவார்த்திகள் தரிசனத்திற்காக காலை 9 மணி முதல் 1 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும் திருக்கோயில் திறந்திருக்கும். கிழக்கு நோக்கியுள்ள வாயிலும் மூலவர் சன்னதியும் உள்ள இத்திருக்கோயிலுக்குத் தனி அம்மன் சன்னதி கிடையாது. உற்சவர் அம்மனின் பெயர் பர்வத வர்த்தினி என்பது ஆகும். ஒவ்வோர் ஆண்டும் மகாசிவராத்திரி, ஆருத்ரா தரிசனம் ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்றன. இத்துடன் உபகோயிலாக அனேக தங்காவதீஸ்வரர் திருக்கோயில் என்பது உள்ளது. இதனைச் சுந்தரர் பாடியுள்ளார். இதுவும் கலை நயமிக்க கோயிலாகும்.

தகவல் பலகை

காஞ்சியில் வழிபட்டுள்ளவர்கள் : திருமால், பிரம்மா, சரஸ்வதி, இலக்குமி, பார்வதி, ராமர், முருகன், ஐராவதம், மன்மதன், இரணியன், பலராமர், சப்தரிஷிகள், தேவர்கள், தக்கன் முதலியோர் ஆவர்.

54. கோனேரிக்குப்பம் அருள்மிகு கனக துர்க்கை அம்மன் திருக்கோயில் ஏனாத்தூர்.


சிம்ம வாகினி ஸ்ரீ கனக துர்கை அம்மன்

காஞ்சிபுரத்தை அடுத்துள்ள கோனேரிக்குப்பம் சங்கரா பல்கலைக் கழகத்திற்கு அருகில் அமைந்துள்ள திருக்கோயில் இக்கோயில் ஆகும். கனகதாரா ஸ்தோத்திரம் காஞ்சி மாநகரில் பாடப் பட்டதை அறியும் நாம் கனக துர்க்கையை தனிக்கோயிலில் தரிசிக்கிறோம்.

காஞ்சிபுரம் நகரிலிருந்து நகரப் பேருந்துகள் இயங்குகின்றன. கிழக்குப் பார்த்த சன்னதி நுழைவு வாயில் சாலையை ஒட்டி தெற்குப்புறம் அமைந்துள்ளது. திருக்கோயிலில் கனகதுர்க்கை அம்மன் தவிர விநாயகர், நாகமேடை, நவகிரகம் ஆகியவை அமைந்து உள்ளன. காமிக ஆகம பூஜை நடைபெறும் இத்திருக்கோயில் காலை 8 மணி முதல் 10 மணி வரையும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையும் சேவார்த்திகள் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். ஆடிமாத, வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளும் சித்திரா பௌர்ணமி தினமும் சிறப்பானவை ஆகும்.

கனகதாரா எனும் பொன்மழை காஞ்சியில் வருஷித்ததற்கு மூன்று வெவ்வேறு புராணங்கள் உண்டு எனினும் அம்பாள் அருளே அதற்கு பிரதானம் என்பதே இப்புராணங்களின் முடிவு. கனக மழை பொழிவித்த அருள்வடிவம் காமாட்சி. துன்பம் போக்கும் அம்மனின், துர்க்கை வடிவே கனக துர்க்கை என்பது இங்கு ஐதீகம்.

தகவல் பலகை

பூமியில் உயிர்கள் நான்கு வகையில் பிறப்பதாகக் கூறுவர்.

1. முட்டையில் தோன்றுபவை (பறவை) 2. வியர்வையில் தோன்றுபவை (பேன், ஈறு) 3. விதை வேர் மூலம் தோன்றுபவை (தாவரங்கள்) 4. கருப்பையில் தோன்றுபவை (மனிதன், விலங்கு)

55. அருள்மிகு ஆதிபீடாபரமேஸ்வரி காளிகாம்பாள் திருக்கோயில். காஞ்சிபுரம்

காசியில் இருந்து காஞ்சிக்கு சக்தி வந்து இறங்கி அன்னபூரணியாகி அன்னதானம் செய்த 'ஆதிபீடம்' இதுவாகும்.



சக்தி லிங்கம்

அரக்கர்களை அழித்து நல்லவர்களுக்கு நல்லதை நல்கிய இடம் ஆதிபீடா பரமேஸ்வரி 'காளிகாம்பாள் திருக்கோயில்' என வழங்கப்படுகிறது. காஞ்சியில் காமாட்சியம்மன் கோவிலுக்கு வெகு அருகில் 100 அடி தொலைவிலேயே அமைந்துள்ள பழமையான திருக்கோயிலாகும். சன்னதியும், கோபுரமும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. பொதுவாக காளிகோயில் என வழங்கப் பட்டாலும் காமிக ஆகமத்தின் அடிப்படையில் காலை, மாலை இருவேளைகளில் பூஜை நடைபெறுகிறது. காலை 6 மணி முதல் 11 மணி வரையும், மாலை 4 மணி முதல் 8 மணி வரையும் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். இத்திருக்கோயிலில் அமைந்திருக்கும் 'சக்திலிங்கம்' அபூர்வமானதாகும். இறைவனை அடைய வேண்டி தவம் இயற்றிய சக்தி இறைவனை லிங்க ரூபத்திலேயே அடையும் வண்ணம் லிங்கப்பகுதியில் சக்தியின் உருவம் பொறித்து இறையோடு கலக்கும் நிலையை காட்டும் லிங்கத்தை வேறு எங்கும் காண முடியாது.

பிரதோஷ நேரங்களிலும், மாலை வேளைகளிலும் இந்த லிங்கத்தை வழிபடுவோருக்கு வேண்டியது கிடைக்கும். திருமணம் கைகூடும். இழந்த பொருள் மீட்பர், எல்லா நலனும் கிட்டும் என்பது நம்பிக்கை. ஒவ்வொரு சிவராத்திரி, ஆடி, தை வெள்ளிக்கிழமைகள் மிகவும் சிறப்பானவையாகும்.

எல்லாவகையிலும் காமாட்சியம்மனை ஒத்திருப்பதாலும் கருவறையில் 'பிலாகாசம்' எனும் எல்லையறியா துவாரம் அமைந்துள்ளதாலும் இத்தலம் காஞ்சியில் காமாட்சி அம்மன் உறைந்த ஆதிகோயில் ஆதிபீடம் என்ற வழக்கத்தில் ஆதிபீடா பரமேஸ்வரி என்ற பெயர் வழங்கி வருகிறது. அனைவரும் அருள்மிகு

காமாட்சியம்மன் கோவிலின் பின்புறத்தில் எளிதில் சென்றுவரும் தொலைவிலுள்ள இங்கும் வந்து வணங்கி அருள் பெற்று காமகோடியம்மன் காமாட்சியின் ஆதிபீடத்தையும் வணங்கி சக்திலிங்க தரிசனம் பெற்று, சக்திலிங்கத்தையே பின் தியானித்து எல்லா நலனும் பெறலாம்.

56. அருள்மிகு அஷ்டபுஜப் பெருமாள் திருக்கோயில் காஞ்சிபுரம்

சின்னகாஞ்சிபுரம் திருக்கச்சி நம்பிகள் வீதியில் அமைந்துள்ளது. காஞ்சிபுரத்தில் உள்ள மங்களா சாசனமான 18 வைணவ திவ்விய தேசங்களில் இதுவும் ஒன்றாகும். பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதியுள் 99 மற்றும் 100ம் பாடலிலும், திருமங்கையாழ்வார் பெரிய திருமடல் 128ம் பாடலிலும் மற்றும் பெரிய திருமொழி கூடுதல் எட்டுவரை உள்ள பாடல்களிலும் இத்திருத்தலத்தை மங்களா சாசனம் செய்து பாடியுள்ளனர். வேதாந்த தேசிகர் இந்தப் பெருமாளைப் பற்றி 10 ஸ்லோகங்களை இயற்றி உள்ளார். மூலவர் மேற்கு நோக்கி அமைந்துள்ள சன்னதியில் அஷ்டபுஜப் பெருமாள், அட்டபுயங்கரத்தோன், எண்கரத்தான் என்ற பெயர்களோடு விளங்கும் மூலவர் வலது நான்கு கரங்களில் சக்கரம், கட்கம், கமலம், அம்பு ஆகியவற்றையும் இடப்புறக் கரங்களில் சங்கு, வில், கேடயம், கதை ஆகிய ஆயுதங்களையும் ஏந்தியுள்ளார்.

எண் கரத்தான் என்னும்
ஸ்ரீ அஷ்டபுஜ பெருமாள்

பிரும்மா தனியே யாகம் செய்வதைப் பொறுக்காத கலைமகள் அதிபயங்கர ரூபம் கொண்ட சரபம் ஒன்றை ஏவி விட, நாராயணன் எட்டு கரங்களுடன் தோன்றி சரபத்தையும், பின்வந்த காளியையும் அழித்து ஒழித்ததாகவும், அதற்கெனத் தோன்றிய உருவமே 'அஷ்டபுஜப் பெருமாள்' எனப் புராணம் குறிப்பிடும். வடக்கு நோக்கிய இராஜகோபுரம் ஒன்றுடன் மேற்கு நோக்கிய மூலவர் சன்னதி விமானத்துடன் அமைந்துள்ளது. உற்சவருக்கு 'கஜேந்திர

வரதர்' என்னும் பெயரும் 'அஷ்டபுஜ நரசிம்மப் பெருமாள்' என்ற பெயரும் உள்ளது. தீர்த்தம் 'ஸ்ரீ கஜேந்திர புஷ்கரணி' எனவும் தாயார் 'அருள்மிகு புஷ்பவல்லித் தாயார்' எனவும் அழைக்கப்படுகின்றனர்.

வைகானச ஆகம முறைப்படி இருகால பூஜை நடைபெறும் இத்திருக்கோயில் காலை 7 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4.30 மணி முதல் 8 மணி வரையும் தரிசனத்திற்காக திறந்திருக்கும். பவித்ரோற்சவம் நடைபெறும் இத்திருக்கோயிலில் வடக்கு நோக்கிய பரமபத வாசலும், எட்டு கரங்களுடன் கூடிய பெருமாள் திருக்கோயிலுமாக இது அமைந்துள்ளது. கஜேந்திர மோட்சம் இவ்வாலயத்தின் முன்பாக உள்ள திருக்குளத்தில் நடந்ததாக நம்புவர்.



கஜேந்திர புஷ்கரணியும், திருக்கோயிலும்

57. அருள்மிகு உலகளந்த பெருமாள் திருக்கோயில் காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் திருக்கோயிலுக்கு மிக அருகிலுள்ள இத்திருக்கோயில் ஆதிசேஷனுக்காக ஆதிசேஷன் வேண்டியபடி திரிவிக்கிரம அவதாரத்தில் நின்ற கோலத்தில் காட்சி தரும் திருக்கோயிலாகும்.

நான்கு திவ்ய தேசங்களுள்ள ஒரே கோயில் இது என்பதை அறியாத பலர் இன்னுமுண்டு. மகாபலி சக்கரவர்த்தி அறவழிகளை ஒதுக்கி ஆட்சி செய்தமையால் அவனை அடக்க வாமன ரூபத்தில் வந்த திருமால் மூன்றாவது அடிக்கு இடம் கேட்டு மாபலியின் தலையில்

மூன்றாவது அடி வைத்து உலகளந்த பெருமாளாக காட்சி தருகிறார். சுமார் 16 மீட்டர் உயரமும் 13 மீட்டர் அகலமும் கொண்ட பெருமாள் மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் திரிவிக்கிரம அவதார வடிவத்தில் நின்ற திருக் கோலத்.தில், இடக்கரம் நீட்டி இருவிரல் காட்டி, வலக்கரத்தில் ஒரு விரல் காட்டி சேவை செய்கிறார்.


திருக்கோயிலின் உட்புறத் தோற்றம்

ஊரகம் எனும் சன்னதியில் 5 அடி உயரமும் அகலமும் உடைய புடைப்புச்சிற்பமான பாம்பு விசேட பரிகார வழிபாடு உடையது. பேருருக் கொண்ட பேரகத்தான் என்ற பெயரோடு அருகிலுள்ள ஆதிசேஷனுக்கு காட்சி தரும் வகையில் இங்கு வந்ததாக குறிப்பர்.

ஈரடியால் மூவுலகும் அளந்தான்

பேரகம், நீரகம், காரகம், கார்வானம், ஆகிய நான்கு சன்னதிகளும் திருமழிசையாழ்வாராலும், திருமங்கை மன்னனாலும் மங்களா சாசனம் செய்யப்பட்ட நான்கு திவ்விய தேசங்களும் இங்கு உள்ளன. இறைவன் பெயர் 'உலகளந்தப் பெருமாள்'. இராஜ கோபுரமும், மூலவர் விமானமும், அருள்தரும் அமுத வள்ளி தாயாருக்கென தனி விமானமும், சன்னதியும் அமைந்துள்ள திருக் கோயிலாகும். பாஞ்சராத்ர ஆகமத்தைப் பின்பற்றி இருகால பூஜை நடைபெறும் இத் திருக்கோயில் காலை 7 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 4.30 மணி முதல் 8 மணி வரையிலும் தரிசனத்திற்காக திறந்திருக்கும். ஸ்ரீராமநவமி, பவித்ரோற்சவம், திருக்கார்த்திகை, வைகுண்ட ஏகாதசி, பிரும்மோற்சவம் ஆகியவை

ஊரகத்தான்

முக்கியமான திருவிழா நாட்களாகும். ஒவ்வொரு பிரம்மோற்சவத்திலும் ஏழாம் நாளன்று சுமார் மூன்றரை கிலோ மீட்டர் சுற்றுப் பாதையில் திருத்தேர் உற்சவம் நடைபெறும். சன்னதியில் இருந்து கிளம்பி மீண்டும் வந்து அடைய சுமார் இரண்டு மணி நேரம் பிடிக்கும்.

சாலஹாரவிமானம் என விமானம் அழைக்கப்படுகிறது. தீர்த்தம் நாகதீர்த்தம் ஆகும். முதலாம் குலோத்துங்க சோழன் தனது 40 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தின் போது இங்கு தரிசித்ததாக கல்வெட்டு உண்டு.

58. அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் ஐயங்கார்குளம் காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்திலிருந்து செய்யார், கலவை செல்லும் பாதையில் மூலவர் விமானத்துடன் பிரதான வாயில் தென்திசை நோக்கி அமைந்துள்ள திருத்தலமாகும். மூலவர் சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பிரகாரத்தில் அருள்மிகு விநாயகர் சன்னதி, முருகன் சன்னதி ஆகியவை உள்ளன.

இத்துடன் அருள்மிகு சுந்தரவிநாயகர் திருக்கோயில், அருள்மிகு ஆதிவிநாயகர் திருக்கோயில், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகியவை உபகோயில்களாக அமைந்துள்ளன. சிவாகம பூஜை ஒரு காலம் மட்டும் நடைபெறும் இத்திருக்கோயிலில் பிரதோஷம், சூரசம்ஹாரம், ஆடித்திருவிழா ஆகியவை முக்கியமான திருநாட்களாகும். காலை 7 மணி முதல் 10 மணி வரையும் மாலை 5 முதல் 8 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

தகவல் பலகை

பிரதோஷ காலம் என்பது ஒவ்வொரு திரயோதசி அன்று மாலை ஏழரை நாழிகை ஆகும். அதாவது மாலை நாலு மணி முதல் ஆறரை மணி வரை உள்ள காலம் என குறிப்பர்.

59.அருள்மிகு யதோத்காரிப்பெருமாள் திருக்கோயில் காஞ்சிபுரம்

தொண்டை நாட்டு மங்களாசாசனம் பெற்ற திருத்தலங்களில் ஒன்று ஆகும். யதோத்காரி என்றால் சொல்லியவாறு செய்தவன் என்று பொருள். அதனாலேயே 'சொன்னவண்ணம் செய்த பெருமாள்' என்ற பெயர் வழங்கி வருகிறது. பிரும்மா மற்றும் கணிகண்ணன் என்பவருக்குக்காட்சி அருளிய திருமால், திருமழிசையாழ்வார் சொற்படி பைந்நாகப்பாயை சுருட்டியும், மீண்டும் விரித்தும் கொண்டதால் இப்பெயர் பெற்றார். தமிழுக்கும் தூய பக்திக்கும் பரம்பொருள் அடிமை என்பதையும் படாடோபமும் பக்தியும் இணையாது என்பதையும் இப்புராணம் விளக்குகிறது.

இத்திருத்தலம் திருவெஃகா என அழைக்கப்படுகிறது. பொய்கை ஆழ்வார் அவதாரத்தலமான பொய்கைப் புஷ்கரணிக் கரையில் வேதசார விமானத்தில் சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்ற திருநாமத்துடன் காட்சி தருகிறார். தாயார் கோமளவல்லி நாச்சியார் எனவும் அழைக்கப்படுகிறார்.

வேகவதி ஆற்றின் குறுக்கே வெள்ளத்தைத் தடுக்க மூலவர் சயனத்தில் இருப்பதாக குறிப்பிடுவர். வேகவதி அணை வேகணை வெஃகணை, வெஃகா எனவும் அழைக்கப்படுகிறது எனவும் குறிப்பிடுவர். தினமும் காலை 7 மணி முதல் 10 மணி வரையும், மாலை 5 முதல் 8.30 வரையும் தரிசன நேரங்களாக உள்ளன.

60. அருள்மிகு திருமேற்றளீஸ்வரர் திருக்கோயில் காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தில் மேற்கே உள்ள கோயில் என்ற பொருளில் கச்சிமேற்றளி என்ற சிறப்புப் பெயர் பெற்ற இத்திருக்கோயில் காஞ்சிபுரம். பிள்ளையார்பாளையம் பகுதியில் அமைந்துள்ளது. மூலவர் மேற்கு நோக்கி அமைந்துள்ளார். 'திருமேற்றளி நாதர்' 'கச்சிமேற்றளீஸ்வரர்' எனவும் வழங்கப்படுகிறார்.

திருஞானசம்பந்தரும், நாவுக்கரசரும், சுந்தரரும், தலா இரு பாடல்கள் பாடியுள்ளதாக அறிய முடிகிறது. திருஞானசம்பந்தர் பாடல் கிடைக்கவில்லை. பதினோராம் திருமுறையில் கபில தேவர் ஒரு பாடலும், திருவருட்பாவில் ஒரு பாடலும் உள்ளன. கச்சிமேற்றளிப்

படலம் என்னும் காஞ்சிபுராணப் பகுதியில் இத்திருக்கோயில் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. காஞ்சியில் உள்ள மற்ற சிவத்தலங்களைப் போலவே இத்திருக்கோயிலிலும் தனி அம்மன் சன்னதி கிடையாது. சிவாகம முறைப்படி இருகால பூஜை நடைபெறுகிறது. காலை 8.30 க்கு காலசந்தியும், மாலை 5.30 க்கு சாயரட்சையும் நடைபெறுகின்றன. காலை 8.00 மணி முதல் 12 வரையிலும் மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை சன்னதி தரிசனத்திற்காக திறந்து வைக்கப்படுகிறது.

இத்திருக்கோயிலுக்கென இரு பிரகாரங்கள் உள்ளன. அருள்மிகு திருமேற்றளீஸ்வரர் பிரகாரத்தில் கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, பிரும்மன், துர்கை, அண்ணாமலையார் ஆகியோரும் பரிவார மூர்த்திகளாக விநாயகர், சுப்ரமணியர், வள்ளி, தெய்வானை, பராசக்தி அம்மன், சண்டேஸ்வரர், நவகிரக மூர்த்திகள் ஆகியோரும் உள்ளனர். 'ஓத உருகீசர்' என்ற சன்னதியில் கோஷ்டத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரும்மா, துர்கை ஆகியோரும் பரிவார மூர்த்திகளாக விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர், வைரவர், சூரியன் ஆகிய மூர்த்தங்களும் உள்ளன. இத்திருக்கோயிலில் கல்வெட்டுக்கள் உள்ளன.

சம்புவராய கால கல்வெட்டு ஒன்று 'எயிற் கோட்டத்து தேவதானம் நந்தவன சுதர் விளாகம்' என்னும் ஊரில் இரு வேலி நிலத்தை திருமேற்றளிக்கு கொடுத்ததையும், சதாசிவ தேவ மகராஜா காலத்தில் கொண்டம்ம ராசய்யா என்பவர் தறி ஒன்றுக்கு ஐந்தணா பணம் வீதம் வசூல் செய்து நாள் வழிபாட்டிற்கும், விளக்கு எரிக்கவும் பயன்படுத்திக் கொள்ள உத்தரவிட்டதையும், தந்திவர்மன் கல்வெட்டு ஒரு முத்தரையரின் அறச்செயல்களையும், கோயிலைச் சார்ந்த திருமடம் ஒன்று இருந்ததையும் குறிப்பிடுகின்றது.

ஒரு கல்வெட்டு ஏகாம்பரநாதர் கோயிலுக்கு பழுது பார்ப்பதற்காக இரண்டு ஊர்களின் வரிகளை இப்பகுதியில் வசித்த செங்குந்தர் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

தகவல் பலகை

இறைவனை நான்கு வழிகளில் அடையலாம் என குறிப்பிடுவர். 1. அப்பரைப் போல் ஆண்டான் : அடிமை தொண்டு மார்க்கத்திலும் 2. சம்பந்தரைப் போல் தந்தை : மகன் சற்புத்திர மார்க்கத்திலும் 3. சுந்தரரைப் போல் தோழனாக சக மார்க்கத்திலும் 4. மாணிக்கவாசகரைப் போல் குரு : சிஷ்யன் ஞான மார்க்கத்திலும் அடையலாம்.

61.பாண்டவ தூதப் பெருமாள் திருக்கோயில் காஞ்சிபுரம்.

கண்ணன் பஞ்ச பாண்டவர்களுக்குத் தூதுவராக சென்றதால் பாண்டவத் தூதப் பெருமாள் என்று அழைக்கப்படும் இத்திருக்கோயில் கல்வெட்டுகளில் 'தூதஹரி' என குறிக்கப்படுகிறார். ஸ்ரீ வைஷ்ணவ திருப்பதிகள் 108 ல் ஒன்றான காஞ்சிபுரத்து திவ்ய தேசங்களுள் 'பாடகம்' என்று பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகியோர்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திருத்தலமாகும். அருள்மிகு பாண்டவதூதப் பெருமாள் திருக்கோயில் மிகவும் பழமையானதும் பிரசித்தி பெற்றதும் ஆகும். இத்திருக்கோயில் சங்கர மடத்திலிருந்து தென் மேற்கே 1/2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.



கோயிலின் முகப்பு

திருதராட்டிரனுக்கு கண்பார்வை அளித்து தன்னுடைய பெரிய விசுவரூப தரிசனத்தை கண்ணபிரான் வழங்கினார். இந்த தலத்தில் அமைந்துள்ள மத்ஸ்ய தீர்த்தத்தில் தவம் செய்த ஜனமே ஜயனுக்கும் ஹாரித மாமுனிக்கும் இப்பெருமான் தரிசனம் கொடுத்தார். இத்திருக்கோயிலில் ருக்மினி பிராட்டிக்கும், சக்கரத்தாழ்வாருக்கும் தனித்தனியாக சன்னதிகள் உள்ளன. பெருமாள் விமானம் சக்கர விமானம் என்று அழைக்கப்படுகிறது. இத்திருக்கோயிலில் அருளாளப் பெருமாள் எம் பெருமானார் என்கிற ஆசாரியார் எழுந்தருளியிருப்பது மற்றொரு விசேஷமாகும். இவ்வாசாரியார் பூர்வத்தில் யக்ஞமூர்த்தி என்கிற திருநாமம் பூண்டு இராமானுஜரோடு 18 நாள் வாதம் செய்து, அவருடைய உபதேசங்களால் நெஞ்சுருகி, அவருடைய திருவடிகளில் அடைக்கலம் புகுந்த பின் அனேக மகான்களுக்கு ஆச்சாரியராக விளங்கியவர்.

இத்திருக்கோயிலின் விமானத்திற்கு வடப்பக்கத்தில் உள்ள கல்வெட்டுகளால் இக்கோயிலின் பெயர் 'பாடகம்' என்றும், முதலாம் குலோத்துங்க சோழனால் திருக்கோயில் புதுப்பிக்கப்பட்டது என்றும் தெரிய வருகிறது. பெருமாள் மூலவர் சுதையினால் செய்யப்பட்டுள்ளது மற்றொரு சிறப்பாகும்.

முக்கிய திருவிழாக்கள் : கிருஷ்ண ஜெயந்தி, தீபாவளி, முக்கோட்டி ஏகாதசி, பங்குனி உத்திரம் முதலானவை. தரிசனம் நேரம் காலை 7.00 மணிமுதல் 11.00 மணி வரை, மாலை 4.00 மணி முதல் 7.30 மணி வரை

62.அருள்மிகு சஞ்சீவராயர் திருக்கோயில் ஐயங்கார்குளம், காஞ்சிபுரம்

சஞ்சீவிராயர்

அஞ்சனை என்ற கந்தர்வப் பெண்ணிடம் வாயுவின் அனுக்ரகத்தால் உதித்தவர் ஆஞ்சநேயர். இந்திரனின் வஜ்ராயுதத்தால் அடிபட்டு ஒரு தாடை நீண்டு விட கீழே விழுந்து பாறையில் மோதி மறுதாடையும் நீண்டு விட அனுமார் என்ற பெயர் வந்தது. இமயமலையிலிருந்து சஞ்சீவி கொண்டு வரும்போது அனுமன் இங்கு சிறிது நேரம் தங்கியதால், சஞ்சீவிராயர் கோவில் கொண்ட இடம் என்பது சஞ்சீவிராயர் கோவில் என வழங்கப்படுகிறது. கல்வெட்டுகளில் படைவீட்டு ராஜிய காளியூர் கோட்டத்து ஐயன் குளம் என அழைக்கப்படுகிறது. காஞ்சியில் இருந்து கலவை செல்லும் சாலையில் பாலாற்றைத்தாண்டியதும் திருப்பத்தில் உள்ள ஊர் ஐயங்கார்குளம் என அழைக்கப்படுகிறது. சகல விற்பன்னரான இங்குள்ள பெரியகுளம் தாததேசிகன் வெட்டியதால் தாதசமுத்திரம் என பெயர் பெற்றது. அவர் உருவாக்கிய இவ்வூரும் ஐயங்கார்குளம் என பெயர் உண்டாயிற்று. 126 ஏக்கரில் நீர் நிலை வைத்து அதன் பின்புறத்தில் கோவிலை நீராழி மண்டபம் போல் அமைத்து கலைத்தொண்டு செய்யப்பட்டுள்ளது. பரந்த ஏரிக்கு சுற்றிலும் உள்ள படிகள் மற்றும் கோவில் விசய நகர மன்னர்கள் காலத்தின் கட்டிடக் கலைக்கு ஒரு உதாரணமாகும். விசயநகர பாணியில் ஒரே கல்லில் வடித்த தூண்கள் நான்கும் தாங்கும் மண்டபம் வாயிலுக்கு அழகூட்ட நான்கு திசைகளிலும் விம்மி எழுகின்றன. நுழைவாயில் இடைக்கழியாய் திகழ, இருபுறமும் சிற்பத் தூண்களால் ஆக்கப்பட்ட நீண்ட மண்டபம்


தோரணவாயில்



திருக்கோயிலின் முகப்புத் தோற்றம்

முன் கவசமாய் விளங்க, உட்பிரகாரம் ஓவிய விமான மண்டபம்தாண்டி அனுமார் தொழுத கையுடன் காட்சி தருகிறார். கருங்கல்லில் புடைப்புச் சிற்பங்களாக சிற்ப லட்சுமிகள் உள்ளனர். ஏரிக்கரையில் நடபாவிக்குள் நுழையும் தோரணவாயில் அழகுற அமைந்திருக்கிறது.

கோவில் வடக்குச்சுவர் முழுவதும் தாததேசிகனின் புகழ் பாட மேற்கு சுவற்றில் அவர் இயற்றிய ஹனுமத்விம்சதி என்னும் இலக்கியம் சாசனமாய் மிளிர்கிறது. சஞ்சீவி பர்வதத்தை வைத்து அனுமன் தூக்கிச் சென்ற இடம் ஆதலால் அனைத்து நோய்களுக்கும் மருந்தாகும். சஞ்சீவி பர்வதத்தின் மருத்துவ குணங்கள் அனைத்தும் இத்திருக்கோயிலுக்கும் குளத்திற்கும் உண்டு என நம்பப்படுகிறது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் நோய்கள் தீர்க்கும் சக்தி இத்திருக்கோயிலுக்கு உண்டு. நம்பிக்கை அடிப்படையில் நோய் நீங்கி நல்வாழ்வு பெற்று சென்றவர் பலர். தினமும் காலை 7 முதல் 12 வரையும் மாலை 4 முதல் 7 வரையும் தரிசன நேரமாகும்.



தாத சமுத்திரம்

தகவல் பலகை

பிரம்மாவுக்கு ஒரு நாள் என்பது ஒரு கற்பம் என அழைக்கப்படும். ஒரு கற்பம் என்பது பதிநான்கு மன்வந்திரம் எனப்படும். ஒரு மன்வந்திரம் என்பது எழுபத்தி ஒரு சதுர் யுகம் எனப்படும். ஒரு சதுர் யுகம் என்பது பனிரெண்டாயிரம் ஆண்டுகள் ஆகும்.

63. திருப்பவள வண்ணர் திருக்கோயில்
காஞ்சிபுரம்



திருக்கோயிலின் முகப்புத் தோற்றம்

108 வைணவத் திருத்தலங்களில் ஒன்று. பவள வண்ணர் மேற்கே திருமுக மண்டலத்துடன் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். தாயார் பெயர் பவளவல்லி என்பதாகும். பிரதான விமானத்தில் அஸ்வினி முதலிய நட்சத்திரத் தேவதைகட்கும் பார்வதி தேவிக்கும் காட்சி தந்தருளினார். தீர்த்தம் சக்கர தீர்த்தம் என வழங்கப்படுகிறது. காலை 7.30 முதல் 10 மணி வரையும், மாலை 5 முதல் 7 மணி வரையும் தரிசன நேரங்களாக உள்ளன.

64. அருள்மிகு சந்தவெளி அம்மன் திருக்கோவில்
காஞ்சிபுரம்

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தனது உரையில் கரிகாற் சோழன் தனது வடநாட்டின் பயணத்தின்போது காஞ்சிக்கு வந்து காமாட்சி அம்மனை வழிபட்டு திருக்கோயிலில் உள்ள சாஸ்தாவை வணங்கி அவரது கரத்திலிருந்து பூச்செண்டினை பெற்றுச் சென்று இமயத்தில் தன் வெற்றியின் அடையாளமாக புலிக்கொடியைப் பொறித்தான் என்ற வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிடுகிறார். கையில் செண்டாயுதம் தாங்கி மாசாத்தனார் யானை மேலேறி உலவிய இப்பகுதி செண்டு வெளி என அழைக்கப்பட்டது. நாளடைவில் செண்டு வெளியில் அமர்ந்திருந்த செண்டுவெளி அம்மன் சந்தவெளி அம்மன் என அழைக்கப்பட்டார். காலை 8 முதல் 11 வரையும், மாலை 5 முதல் 8 வரையும் தரிசிக்கலாம்.

பெரிய காஞ்சிபுரத்தில் வெள்ளைகுளத்திற்கு செல்லும் வழியில் சாலைத் தெருவில் உள்ள குஜராத்தி சத்திரத்திற்கு செல்லும் தெரு வழியே வந்து வலப்பக்கம் திரும்பினால் இத்திருக்கோயிலை அடையலாம். சந்திரனால் வழிபடப்பெற்ற சிவபெருமான், சந்திரேஸ்வரர் சந்தவெளியம்மனின் வடபால் தனிக்கோயிலில் காட்சித் தருகிறார். இத்திருக்கோயில் பிரார்த்தனை தலமாக விளங்குகிறது. பெங்களூர், பம்பாய், கல்கத்தா போன்ற பல நகரங்களில் இருந்தும் மக்கள் வந்து தங்கள், தங்கள் சுற்றத்தாரின் வெம்மை நோய், அம்மை நோய் தீர வழிபட்டு செல்லுகின்றனர்.

65. கருடேசம் என்னும் அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம்

காஞ்சியில் ஏகாலியர் குலத்தில் தோன்றியவர் திருக்குறிப்புத் தொண்டர். தினமும் ஏதாவது ஒரு சிவனடியாரின் துணிகளைத் துவைத்து கொடுத்த பின்பே மற்றவர் துணிகளைத் துவைப்பார். ஒரு நாள் அழுக்கு ஆடையுடன் முதிய சிவனடியார் ஒருவர் வந்தார். துணியை துவைத்துக் கொடுக்க கேட்க தன்னிடம் இருக்கும் அந்த ஒற்றைத் துணியை மாலைக்குள் திருப்பித்தரவேண்டும் என்ற நிபந்தனையில் கொடுத்தார். துணியை நனைத்த பின் மழை கொட்டியது. துணிகளைக் காய வைக்க முடியவில்லை. சிவனடியார்க்கு சொன்ன சொல்லை காக்க இயலவில்லையே என்ற ஆதங்கத்தில் துணி துவைக்கும் கல்லில் தலையை மோதிய போது அக்கல்லிலிருந்து திருக்கரம் வெளிப்பட்டு அவர் தலையைத் தாங்கிப் பிடித்தது. மழை நின்றது. மலர் பொழிந்தது. இறைவன் அர்த்தநாரியாய் காட்சித் தந்து ஆட்கொண்டார். பெரிய புராணத்தில் கூறப்படும் வரலாறு இது.

இந்த வரலாறு நடந்த இத்திருக்கோயில் முக்தீஸ்வரர் திருக்கோயில் எனப்படுகிறது. சன்னதிக்கு நேரெதிரில் குளத்தின் நுழைவாயிலில் சுதை வடிவில் இந்த வரலாறு காட்டப்படுகிறது. திருக்குளத்திற்கு சிவதீர்த்தம் என்ற பெயர். சனிபகவானும், சூரியனும் இறைவனை வணங்கியவாறு உள்ளனர். கருவறைக்கு இடது புறம் உள்ள ஸ்தபன விநாயகரிலிருந்தே பூசைகள் தொடங்குகின்றன. சிவாகம முறைப்படி இருகால பூசை நடைபெறுகிறது. கிழக்கு நோக்கிய மூலவர் ஸ்வர்ண ரேகையுடன் உள்ளார்.

பிரகாரத்தில் வடக்கு நோக்கியபடி நால்வருடன் திருநீலகண்டரும், கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தியும், சன்னதிக்கு பின்புறம் விநாயகர் சன்னதியும், முருகன் வள்ளி தெய்வானை சன்னதியும் உள்ளது.கருடன் தன்னை வருத்திய கத்துருவின் புதல்வர்களாகிய பாம்புகளைக் கொல்ல இந்த சிவனை வழிபட்டுப் பலன் பெற்றதாக கூறுவர். கருடன் வழிபட்டதால் கருடேசம் என வழங்கப்பட்டது.

இத்திருக்கோயில் காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை காந்தி சாலையின் நடுநாயகமாக உள்ளது. மூன்று நிலை இராஜகோபுரம் உள்ளது. கோபுர வாசலிலிருந்து பார்த்தவுடன் தெரிவது சிவதீர்த்தத்தின் கரையில் உள்ள திருகுறிப்புத் தொண்டர் விக்ரகம் தான். தினமும் 7.30 முதல் 11 வரையும் மாலை 5 முதல் 8.30 வரையும் தரிசனம் செய்யலாம்.

66. அருள்மிகு விஜயராகவப்பெருமாள் திருக்கோயில் திருப்புட்குழி

இராமன் சீதையைப் பிரிந்து இலக்குவனுடன் அலைந்து திரிந்து எங்கும் காணாது வந்து கொண்டிருக்கும் வேளை, சீதையை சிறைப்பிடித்த இராவணன் செல்லும் வழியில் ஜடாயுவைத் தாக்கினான். 'புள்' எனப்படும் பறவைகளின் அரசனான ஜடாயு வீழ்ந்த இடம் 'புள்குழி', 'புட்குழி' என வழங்கப்பட்டது. இராமன் ஜடாயுவை சந்தித்து தகவல் அறிந்தவுடன் ஜடாயு தனக்கு இராமபிரானே ஈமக்கிரியைகள் செய்ய வேண்டும் என வேண்டியபடி தன் அம்பினால் நீர் வரச்செய்து கிரிதரபுஷ்கரணி உண்டாக்கினார்.



திருக்கோயிலின் முகப்புத் தோற்றம்

ஜடாயுவின் வேண்டுகோளுக்கிணங்க வலதுபுறம் வைத்து சிதை மூட்டி கிரியை செய்யும் போது வெப்ப வேகம் தாங்காது ஸ்ரீதேவி இடதுபுறம் வந்து நிற்கவும், வலது புற பூதேவித்தாயார் இடது புறம் நின்று காட்சி தந்ததாகவும் வாமன புராணத்தில் கிரிதர க்ஷேத்திர காண்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. 108 திவ்விய தேசங்களுள் ஒன்றாகவும், திருமங்கையாழ்வாரால் 'புட்குழியம் போரேறே' எனவும் அழைக்கப்பட்ட இப்பெருமாள் வெற்றிகளை தரவல்லவர்.

தாயாரின் பெயர் 'வறுத்த பயிர் முளைக்க வைக்கும் மரகதவல்லித் தாயார்' என்பதாகும். பிள்ளைப் பேறில்லாதவர்கள் வறுத்த பயிரை மடியில் கட்டிக் கொண்டு ஒரு இரவு தூங்கினால் பிள்ளைப் பேறு உண்டாகும் என்பது நம்பிக்கை. அமாவாசையன்று இங்கு தங்கள் மூதாதையர்களுக்கு தர்ப்பணம் செய்வோர் மூதாதையர்களின் ஆசி பெறுவர் என்பதும் நம்பிக்கை. மற்ற கோயில்களைப் போல் இல்லாமல் இங்கே கருவறையில் வலப்புறம் பூமகளான ஆண்டாள் சன்னதியும், இடப்புறம் திருமகளான மரகதவல்லித் தாயார் சன்னதியும் அமைந்துள்ளது. பாஞ்சராத்ர பாத்ம

சம்ஹிதைப்படி இருகாலப் பூஜை நடைபெறும் இத்திருக்கோயில் காலை 7 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 7 மணி வரையிலும் திறந்திருக்கும்.13ம் நூற்றாண்டு சுந்தரபாண்டியர் கால கல்வெட்டுகள் உள்ள இத்திருக்கோயிலில் திருமால் வீற்றிருந்த திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலம் உள்ளவராகக் காட்சி தருகிறார். விமானத்தினை 'விஜய வீரகோடி விமானம்' என அழைக்கின்றனர்.

ஒவ்வொரு அமாவாசையும், ஆவணி பவித்ரோற்சவமும் புரட்டாசி நவராத்திரியும், திருக்கார்த்திகையும், மாசி எட்டாம் நாள் 'ஆடும் குதிரை' வாகனமும் சிறப்பானவையாகும்.

'திருப்புட்குழி' என அழைக்கப்படும் இந்த திவ்விய தேசம் செல்ல காஞ்சிபுரத்தின் தென்மேற்கில் 12 கிலோ மீட்டர் தொலைவில் சென்னை,பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் பாலு செட்டி சத்திரம் பேருந்து நிறுத்தத்தில் இறங்க வேண்டும்.

67. அந்தகேசம், திருப்புட்குழி

திருப்புட்குழியிலிருந்து முசரவாக்கம் சாலையில் சென்றால் அந்தகேசத்தை அடையலாம். ஒரு கால பூசை நடைபெறும் இத்திருக்கோயிலில் இறைவியின் திருநாமம் திரிபுர சுந்தரியாகும். இறைவன் மணிகண்டீஸ்வரர் என வழங்கப்படுகிறார். அந்தகேசம் என்ற பெயர் மாறி 'மணிகண்டீஸ்வரர்' திருக்கோயில் என்றே வழங்கப்படுகிறது.

இரணியனின் மகன் அந்தகாசுரன் கயிலை மீது படையெடுத்தான். தேவர்கள் பயந்து பெண் உருக்கொண்டு இறைவியின் கணங்களுடன் சேர்ந்திருந்தனர். திருமாலால் உருவாக்கப்பட்டிருந்த பெண்களை சிறைப் பிடிக்க சென்ற அந்தகாசுரன் தோற்கடிக்கப்பட்டான். கயிலையை அடைந்த சிவனுக்கு இத்தகவல் தெரிந்து வயிரவரை அனுப்பினார். வயிரவரின் சூலத்தால் குத்தப்பட்டு புத்திவரப் பெற்ற அந்தகன் இறைவனை நோக்கி முக்தி வேண்டினான். வயிரவர் சிவனின் கட்டளைப்படி சூலத்தில் குத்திக் கிடந்த அந்தகாசுரனை சிவகங்கையில் மூழ்கச் செய்து முக்தி அளித்தார். அந்தகாசுரன் வணங்கிய இறைவனுக்கு 'அந்தகேசம்' எனப் பெயர் வழங்கியது.

உட்புற மண்டபத்தில் நால்வர், வலப்புறம் அம்மன் சன்னதி, விஜய விக்னேஸ்வரர், ஆறுமுகர், நவகிரகம் முதலிய சன்னதிகள் உள்ளன. கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தியும் லிங்கோத்பவரும் உள்ளனர். தினமும் 9 முதல் 10 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

68. அருள்மிகு வராகீஸ்வரர் மற்றும் தாமோதரப் பெருமாள் திருக்கோயில்கள் தாமல்

காஞ்சிபுரத்தில் இருந்து வேலூர் செல்லும் சாலையில் எட்டு கி.மீ. தொலைவில் தாமல் கிராமத்தில் இரு கோயில்களும் உள்ளன. வராகீஸ்வரர் சன்னதி மேற்கு நோக்கியும், கௌரி அம்மன் தனிக்கோயிலாகவும் உள்ள திருக்கோயிலாகும். புராண வரலாறுகள் முழுவதுமாகத் தெரியவில்லை. காமிக ஆகமத்தின் அடிப்படையில் இரண்டு கால பூஜைகள் நடைபெறும் இத்திருக்கோயிலில் விநாயகர் சன்னதி தனியாக உள்ளது. பிரதோஷமும், அன்னாபிஷேகமும், ஆருத்ராவும், நவராத்திரியும் சிறப்பான நாட்களாகும்.

தாமோதரப் பெருமாள் திருக்கோயில் கிழக்கு நோக்கிய சன்னதியாகவும், பாஞ்சராத்ர ஆகமப்படி பூஜை நடைபெறும் கோயிலாகவும், தாயார் சன்னதி தனியாகவும், ஆஞ்சநேயர் சன்னதி தனியாகவும் உள்ள திருக்கோயிலாகும். இரண்டு கால பூஜை நடைபெறும் திருக்கோயிலாகும். இரு கோயில்களும் சேவார்த்திகளின் தரிசனத்திற்காக காலை 9 மணி முதல் 10 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலும் திறந்திருக்கும்.

69. நரசிங்கேசம், தாமல்

தாமல் கிராமக்குளத்தின் தென் கரையில் வராகீசம் உள்ளது. வடமேற்குக் கரையில் நரசிங்கேசம் உள்ளது. தினமும் காலை 9 முதல் 10 மணி வரை இத்திருக்கோயிலில் தரிசனம் செய்யலாம்.

திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியனை சம்ஹாரம் செய்து அவன் குருதியின் வெறியால் நரசிம்மாவதாரமாக உலகை ஆட்டுவித்தார். சிவபெருமான் சரபமாக உருவெடுத்து நரசிம்மத்தின் கோபத்தை அடக்கி தன் நிலை உணரவைத்தார். தன் நிலை உணர்ந்த திருமால் காஞ்சிபுரம் வந்து நரசிங்க பெருமாளாக சிவலிங்க ப்ரதிஷ்டை செய்து வழிபட்டு அருள்பெற்றதாக இத்திருக்கோயிலின் புராண வரலாறு கூறுகிறது.

தகவல் பலகை

காஞ்சி கச்சபேசத்தில் சரஸ்வதிக்கு என தனி சன்னதி உள்ளது. திருமேனி தஞ்சை கூத்தனூர் சரஸ்வதி போலவே உள்ளது.

70. அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் மற்றும் கூரத்தாழ்வார் திருக்கோயில் கூரம்.

அருள்மிகு ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம் நகரிலிருந்து 12 கி.மீ. தூரத்தில் உள்ள கூரம் கிராமத்தில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் ஆசாரியர்அவதாரத்தலம் ஆகும். காஞ்சிபுரத்திலிருந்து தனியார் பஸ்கள், மினி பஸ்கள் உள்ளன.



கூரத்தாழ்வார் உற்சவர்

பிரதான கோபுர வாசல் கிழக்கு நோக்கி உள்ளது. இத்திருக்கோயிலில் ஆதிகேசவப்பெருமாள் கிழக்கிலும் கூரத்தாழ்வார் சன்னதி தெற்கு நோக்கியும் உள்ளது. இத்திருக்கோயில் கூரத்தாழ்வார் (ஆசாரியார்) அவதாரத்தலமாகும். இத்திருக்கோயிலை பற்றி திருவரங்கத்தமுதனார் ஒரு பாடலும், இராமானுச நூற்றந்தாதி ஆகிய பாடல்களும் பாடப்பெற்றுள்ளது. இது ஒரு பிரார்த்தனை தலமாகும். இத்திருக்கோயிலுக்கு கண் நோய்கள் குணமாகவும், கல்வி ஞானத்தில் முன்னேறவும், திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் ஆகவும் பக்தர்கள் பிரார்த்தனை செய்ய வருகிறார்கள்.

இத்திருக்கோயில்கள் பூசை நேரம் காலை 7 மணி முதல் காலை 9 மணி வரையும் பிற்பகல் 6 மணி முதல் 8 மணி வரை ஆகும். இத்திருக்கோயிலில் பின்பற்றப்படும் ஆகமம் ஸ்ரீ பாஞ்சாரத்ர ஆகமம் ஆகும். இத்திருக்கோயிலுக்குத் திருத்தேர் உள்ளது. தை மாதம் ஸ்ரீ கூரத்தாழ்வார் திருவிழாவில் 9 ம் நாள் திருத்தேர் நடைபெறும். தேர் திருக்கோயிலை அடைய 5 மணி நேரமாகும். மாதம் ஹஸ்தம் முக்கியமானதாகும்.

தகவல் பலகை

இறைவனுக்கு படைத்தல் முதலாகிய 5 தொழில்களும், எட்டு குணங்களும் உண்டு.

குருக்கோவில் என வழங்கும்

71. அருள்மிகு தட்சிணாமூர்த்தி மற்றும் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் கோவிந்தவாடி



தஷ்ணாமூர்த்தி

காஞ்சிபுரத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலும் அரக்கோணத்திலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவிலும் திருமால்பூர் ரயில் நிலையத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ள கோயிலாகும். பேருந்துகள் விசேஷ நாட்களில் கோயில் வாயில் வரை செல்கின்றன. கோயில் வாயிற்கதவு தெற்கு நோக்கியும் கிழக்கு நோக்கி கைலாச நாதர் சன்னதியும் அமைந்துள்ளன. இதைத் தவிர செல்வ விநாயகர், பாலமுருகன், சுப்ரமணியர், நாகதேவதை, கோவிந்தராசப் பெருமாள், அகிலாண்டேஸ்வரி அம்மாள், நவக்கிரகம் ஆகிய சன்னதிகள் அமைந்துள்ளன. திருமாலாகிய கோவிந்தன் குடிகொண்ட ஊர் ஆதலால் 'கோவிந்தவாடி' எனப்பெயர் பெற்றதாகக் கூறுவர். கட்டிடக்கலையால் 10ம் நூற்றாண்டுக்குப் பிறகு கட்டப்பட்டிருக்க வேண்டும் என கருதப்படும் இத்திருக்கோயிலின் தேவ கோஷ்ட கல்காரப் பகுதியிலிருந்து தொடர்ந்து சன்னதியாகவே அமைந்துள்ள திருக்கோயில் தட்சிணாமூர்த்தி கோயிலாகும். இத்திருக்கோயிலில் அருள்பாலிக்கும் தட்சிணாமூர்த்தி தன் சடாமுடியில் சந்திரனைத் தாங்கிக் கொண்டும், இடது மேல் கரத்தில் அக்னியும், வலது மேல் கரத்தில் பாம்பும், இடது கீழ் கையில் சுவடியும் வலது கீழ் கையில் சின் முத்திரை காட்டி வலது காலை தொங்கவிட்டு, இடது காலை மடித்து வலது தொடை மீது வைத்து, அசுரனை வலப்பாதத்தில் அழுத்தி வீராசனத்தில் யோக தட்சணாமூர்த்தியாகக் காட்சி தருகிறார். காலடியில் பீடத்தில் இரு ரிஷிகளும், பீடத்தை சுமந்திருக்கும் யானை மீது இரு பாகர்களும், துவாரபாலகர் போல் சித்தரிக்கப்பட்டுள்ளனர். பின்புறம் காட்டப்பட வேண்டிய ஆலமரம்

காட்டப்படவில்லை. ஏனென்றால் இத்திருக்கோயிலில் ஸ்தல விருட்சமே கல் ஆலமரமாகும். உலகில் வேறெங்கும் காணமுடியாத மிகப்பெரிய மிக அழகிய வடிவமுடைய தட்சிணாமூர்த்தி சிறந்த அழகுடையவர். காமிக ஆகம அடிப்படையில் இரு கால பூஜை நடைபெறும் இத்திருக்கோயிலில் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 7.30 மணி வரையிலும், சன்னதிகள் திறந்திருக்கும். ஒவ்வொரு வியாழக்கிழமையும் அதிகாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரை சன்னதிகள் திறந்திருக்கும். மாதப் பிரதோஷம், சனி, கிருத்திகை, தமிழ் வருடப்பிறப்பு, நவராத்திரி, கந்த சஷ்டி, திருக்கார்த்திகை, ஆருத்ரா, மகா சிவராத்திரி, குருபெயர்ச்சி ஆகியவை முக்கியமான திருவிழா நாட்களாகும்.

72. திரைலோக்கிய நாதர் திருக்கோயில் திருப்பருத்திக் குன்றம், காஞ்சி

காஞ்சிபுரத்தில் ஜினகாஞ்சி (அ) ஜைன காஞ்சி என்று அழைக்கப்படும் பகுதியில், காஞ்சிக்கு தென்மேற்கில் வேகவதி ஆற்றின் தென்திசையில் திரைலோக்கிய நாதர் திருக்கோயில் அமைந்துள்ளது. இப்பகுதியும் அருகில் உள்ள அருணகிரிமேடு என்னும் பகுதியில் அமைந்துள்ள முனிவர்களின் சமாதிகளும் இத்திருக்கோயிலோடு தொடர்புடையவையாகும்.

தீர்த்தங்கரர்களின் பல்வகை வடிவ விமானங்கள்

திரைலோக்கிய நாதர் திருக்கோயில் என்றழைக்கப்படும் இத்திருக்கோயில் இன்றைக்கு சுமார் 1450 ஆண்டுகட்கு முன் அரசாண்ட சிம்ம விஷ்ணுவின் காலத்தில் வர்த்தமானீஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. பின்னர் 11 ம் நூற்றாண்டில் கற்கோயிலாக மாற்றி அமைக்கப்பட்டதாக செய்தி உண்டு.

இத்திருக்கோயிலின் முன்புறம் அமைந்துள்ள 3 நிலை இராஜ கோபுரத்தை புஷ்பஸேன வாமனாச் சாரியார் என்பவரும் திருமதிலை கோப்பெருங்சிங்கன் என்னும் அரசனும் கட்டியதாகவரலாறு உண்டு.



மேற் கூரை விதான தீர்த்தங்கரரின் துறவு நிலை சுட்டும் ஓவியம்

உள்நுழைந்தவுடன் துவஸ்தம்பமும் அடுத்து தாமரைவடிவான பலிபீடமும் உள்ளது. அடுத்து 24 தூண்கள் கொண்ட மண்டபம் ஒன்று விஜயநகர இரண்டாம் புக்கரின் அமைச்சர் இருகப்பன் என்பவரால் அவரது குருவான புஷ்பசேனரின் கட்டளைப் படி கட்டப்பட்டது. இம்மண்டபத்தில் கருங்கல் கூரையும், உட்புறத்தில் (விதானம்) முதலாம் தீர்த்தங்கரர் என்னும் ஆதிநாதர் வரலாறும், 17 வது தீர்த்தங்கரர் குந்துநாதர் வரலாறும், ஓவியங்களாக தீட்டப்பட்டு உள்ளன. ஒவ்வொரு ஓவியத்திற்கும் கீழும் விளக்கம் 15ம் நூற்றாண்டு எழுத்து அமைதியால் எழுதப்பட்டுள்ளது.

இவைகள் சுமார் 500 முதல் 600 ஆண்டுகள் பழமையான எழுத்து விளக்கங்களுடன் கூடிய படங்களாகும். இன்றைக்கும் சிறு சிறு சேதங்களுடன் வண்ணம் குன்றாமல் பொலிவுடன் இயற்கையும், அழகும், நளினமும், கலைத்திறனும் கொண்டு விளங்குகின்றன.

வலப்புறமாகச் சுற்றிச் செல்லும்போது சிதைந்து கிடக்கும் 6வது தீர்த்தங்கரர் பத்ம பிரபா நாதர் சன்னதியும் அடுத்து 23வது தீர்த்தங்கரர் பார்சுவநாத சுவாமி விமானமும், தொடர்ந்து 12 வது தீர்த்தங்கரர் வாசுபூஜ்யசுவாமி விமானமும் அடுத்து சிறியதாக தர்மதேவி விமானமும் அடுத்து ஆதிநாதர் விமானமும் அமைந்துள்ளன. இந்த விமானங்கள் கஜபிருஷ்டம் மற்றும் நாகர வடிவிலும் அமைந்துள்ளன.

சன்னதியின் மேற்கு பின்புறம் 'தருமகுரா' என்னும் தலமரம்

உள்ளது. இம்மரத்தடியில் மும்முனிவர்கள் தவத்தில் மூழ்கினர் என கல்வெட்டு குறிப்பிடுகிறது.

'தன்னளவிற் குன்றாதுயராது தண் காஞ்சி முன் வளத்து மும்முனிவர் மூழ்கியது, மன்னவன் தன் செங்கோல் நலம் காட்டும் தென் பருத்திக் குன்றமர்ந்த கொங்கார் தருமக்குரா' என கல்வெட்டு குறிப்பிடுகிறது. திருச்சுற்றிலேயே வாணிகன் செங்கதிர்ச் செல்வநாத பல்லவன் மூவேந்த வேளான் செய்வித்தான் என்னும் செய்தியைக் கூறும் கிணறும் உள்ளது.

கருவறை அல்லது சன்னதி 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளன. வலதுபுறம் உள்ளது 'திருகூடபஸ்தி' எனவும், இடதுபுறம் 'திருலோக்யநாத சுவாமி சன்னதி' எனவும் உள்ளது. திருகூடபஸ்தி சன்னதியில் வலது ஓரத்தில் இருந்த 6 வது தீர்த்தங்கரரான பத்மபிரபாநாதர் சன்னதி இடிந்துவிட்டது. அடுத்து இருக்கும் 23 வது தீர்த்தங்கரர் பார்சுவ நாதர் சுவாமி சன்னதியில் கரிய நிறத்தில் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். அந்த சன்னதியின் இடதுபுறத்தில் 12வது தீர்த்தங்கரரான வாசு பூஜ்ய சுவாமி சன்னதி உள்ளது. இந்த சன்னதியில் பவள வண்ணத்தில் அமர்ந்த கோலத்திலும் இருபுறமும் யக்ஷன், யக்ஷியும், சுவற்றின் புறங்களில் அடியார்களின் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன.



மேற் கூரை விதான தீர்த்தங்கரரின் துறவு பெற்ற நிலையை சுட்டியும் அவரை அனைவரும் வணங்கும் நிலையைக் காட்டும் வண்ண ஓவியம் விளக்க எழுத்துக்களுடன்

இரண்டாவது அல்லது இடது பிரிவு திரைலோக்ய நாத சுவாமி சன்னதியாக வழங்கப்படுகிறது. வலது புறத்தில் தர்ம தேவி சன்னதியும் அதனை அடுத்து திரைலோக்யநாதர் சன்னதியும் உள்ளது. திரைலோக்ய நாதர் சன்னதியில் 'மகாவீரர்' சுதா சிற்பமும், முன்புறத்தில் கருங்கல்லாலான பூசைக்காக பயன்படுத்தும்

அபிஷேகபேரரும் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகின்றனர். அவருக்கு அருகிலும் மூலஸ்தானத்திலும் முன்புற கருங்கல் சிற்பத்திலும் யக்ஷன் யக்ஷியும் முக்குடையுடன் கீழ் யோகாசனத்தில் அமர்ந்த நிலையில் காட்டப் பட்டுள்ளார். காலை 10 மணி முதல் சுமாருக்கு பூசை நடைபெறுகிறது. இதர நேரங்களில் உரிய அடையாளச் சான்றுடன் சென்று தரிசனம் செய்து வரலாம். திரைலோக்ய நாதர் சன்னதியை அடுத்து 9 வது தீர்த்தங்கரர் புஷ்பதந்த சுவாமி சன்னதி உள்ளது. புஷ்ப தந்த சுவாமி பத்ர பீடத்தில் வெண்ணிறத்துடன் யோகபீடத்தில் அமர்ந்து காட்சி தருகிறார்.

பூசை நடைபெறும் தீர்த்தங்கரர் திருமேனி

கருவறையிலுள்ள அனைத்து தீர்த்தங்கரர்களும் சுதையால் ஆன உருவங்களாக உள்ளனர். இத்திருக்கோயிலை 15ம் நூற்றாண்டு வரை பல்வேறு முனிவர்கள் இப்பகுதியிலுள்ள மக்களுடன் பழகி ஒன்றாக இருந்து கட்டிக் காத்து வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் 'திகம்பர ஜைன' மதத்தை பரப்புவதைத் தங்களின் முதன்மையான கடமையாகக் கொண்டிருந்தார்கள். 12ம் நூற்றாண்டில் அருணகிரி மேட்டிலுள்ள குரு சந்திர கீர்த்தி சமாதி, இத்திருக்கோயிலில் வாழ்ந்த ஒரு சமண முனிவரின் பெயராகும். இவருக்கு அனந்தவீரிய வாமனர் என்ற ஒரு சீடரும் இருந்திருக்கிறார். இவருக்கு சீடராக மல்லிக்ஷேன வாமன முனிவர் என்பவர் பராமரித்து வந்ததாகவும் அவருடைய சிஷ்யராக புஷ்பக்ஷேனர் என்பவர் பராமரித்து வந்ததாகவும் அறிய முடிகிறது. கோராமரத்தினடியில் 3 முனிபுங்கவர்கள் தவத்தில் மூழ்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளார்கள். மேலே குறிப்பிட்டுள்ள 4 முனிபுங்கவர்களுள் யாரேனும் 3 பேர் தவத்தில் மூழ்கியவர்களாக இருக்கலாம் என்பது திரு. T.N. ராமச்சந்திரன் போன்ற வரலாற்று ஆய்வறிஞர்களின் கருத்தாகும்.

இக்கோயிலின் இடப்புறத்தில் 8 வது தீர்த்தங்கரரான சந்திர பிரபாநாதரின் கோயில் ஒன்று இடிந்த நிலையில் உள்ளது.

73. அருள்மிகு ஆதிபட்டாரகர் திருக்கோயில் ஆற்பாக்கம்

இது ஒரு சமணத் திருக்கோயிலாகும். காஞ்சிபுரத்திலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் சமணம் செழித்து செல்வாக்குடன் விளங்கியது என்பதற்கு திருப்பருத்திக்குன்றத்தினைப் போல் ஆற்பாக்கம் ஆதிபட்டாரகர் திருக்கோயிலும் ஒரு உதாரணமாகும்.



ஆதிபட்டாரகர் என்னும் ரிஷப தேவர்

காஞ்சிபுரத்தில் இருந்து உத்திரமேரூர் செல்லும் பாதையில் ஆற்பாக்கத்தில் இறங்கி 500 மீட்டர் நடந்தால் விருஷப தேவர் என்னும் அருள்மிகு ஆதிபட்டாரகர் திருக்கோயிலை அடையலாம். சுவர்களில் சிம்ம வாகனங்கள் வைத்து அலங்கரிக்கப்பட்ட இத்திருக்கோயிலின் கருவறையில் ஆதிதேவர், ஆதிநாதர், ஆதிபட்டாரகர் என அழைக்கப்படும் முதல் தீர்த்தங்கரர் ரிஷப தேவர் அமர்ந்த கோலத்தில் யோகசனத்தில் இரு கைகளையும் ஒன்றின் மீது ஒன்று இருத்திய நிலையில் அமர்ந்திருக்கிறார். அவருக்கு முன் புறம் கோமுக யக்ஷன் மற்றும் சக்ரேஸ்வரி என்னும் யக்ஷியும் விக்ரகங்களாக உள்ளனர். கருவறைக்கு வெளியே 24 தீர்த்தங்கரர்களின் உருவமும், தர்ம தேவரும், குஷ்மாண்டனி என்னும் தேவதையும் காட்சி தருகின்றனர்.

அருகர் என்பது சமணர்க்கு தமிழ் இலக்கியங்களில் வழங்கப்படும் பெயராகும். அருகர் வசித்த இடம் அருகர் பாக்கம் என்றும் அதனிலிருந்து ஆறுகர்பாக்கம் என்றும் மருவி ஆற்பாக்கம் என சமணர்களின் ஊராக அமைந்து விட்டது. இதைத்தவிர இவ்வூரில் திருமாலுக்கு அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் என்ற பெயரில் ஒரு கோயிலும், ஈஸ்வரனுக்கு திருவாலீஸ்வரர் திருக்கோயில் எனும் கோயிலும், பெரிய புத்தர் சிலையும் உள்ளன. இவற்றையும் மீறி சமணசமயத்தின் செல்வாக்கால் இவ்வூருக்கு சமணத் தொடர்புடைய பெயர் நிலைத்துவிட்டது.

நிறைய பதிப்பிக்கப்படாத பன்மொழி ஓலைச் சுவடிகள் இத்திருக்கோயிலில் வைத்து போற்றி பாதுகாக்கப்படுகின்றன.

இத்திருக்கோயில் பற்றி இவ்வூர் சிவன் கோயில் கல்வெட்டு, பசுவீசுவரர் திருக்கோயில் என அழைக்கிறது. ரிஷபேஸ்வரர் அல்லது ஆதிநாதர் என்பவரின் திரிபுப் பெயர் தான் பசுவீசுவரர் என்பதாகும். காலை 9 மணி முதல் 10 மணி வரை பூசைமுடிந்து தரிசனம் செய்யலாம்.



24 தீர்த்தங்கரர்களின் புடைப்புச் சிற்பம்

74. அருள்மிகு மாகறலீஸ்வரர் திருக்கோயில் மாகறல்

காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர் செல்லும் பாதையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. செய்யாற்றின் கரையில் அமைந்துள்ளது. ஐந்து நிலை ராஜகோபுரம் கிழக்கு நோக்கியுள்ளது. துவஜஸ்தம்பம், பலிபீடம், திருக்குளம் நாற்கால் மண்டபம் படிக்கட்டுகளில் ஏறி விநாயகர், முருகனை வழிபட்டு முன் மண்டபம், சாவகாச அந்தராளம் தாண்டிக் கருவறை சென்று இறைவனை தினமும் காலை 6 முதல் 11 வரையும், மாலை 5 முதல் 8 வரையும் வழிபடலாம்.

இறைவன் உடும்பின் வால் வடிவில் சுயம்பு மூர்த்தியாய் காட்சி தருகிறார். இவர் அடைக்கலங்காத்த நாதர், மகம் வாழ்வித்தவர், உடும்பீசர், பாரத்தழும்பர், புற்றிடங்கொண்டார், நிலையிட்ட நாதர், மங்கலங் காத்தவர், பரிந்து காத்தவர், அகத்தீஸ்வரர் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார். மாகறம் என்றால் உடும்பு : உடும்பு வடிவில் காட்சி தந்ததால் மாகறலீசுவரர் என்றே பொதுவாக அழைக்கப்படுகிறார்.

திரிபுவன நாயகி, புவன நாயகி என வேறு பெயர்கள் அம்மனுக்கு வழங்கப்படுகிறது. திருஞான சம்பந்தரின் பாடல் பெற்ற இத்தலப் பதிகம் 'வினை நீக்கும் பதிகம்' என அழைக்கப்படுகிறது.

இவ்வூர் இந்திரன் வழிபட்ட தலம். அக்கினி தீர்த்தத்தையும்,



திருக்கோயிலின் முகப்புத் தோற்றம்

எலுமிச்சையைத் தல மரமாகவும், கொண்டுள்ள இவ்வூரில் மாகறன், மலையன் என்னும் அசுரர்கள் வழிபட்டு முக்தி அடைந்ததாக வரலாறு.

இத்திருத்தலத்தின் பலாமரத்தில் காய்க்கும் பலாப்பழம் ஒவ்வொரு நாளும் தில்லைச் சிற்றம்பல நாதருக்கு நிவேதனம் முடிந்து அது மன்னருக்கு வழங்கப்படும். உள்ளூரில் இருந்தவர்கள் இம்மரத்தைத் தீயிட்டு அழித்ததனால் மன்னனுக்கு நிவேதனம் செய்யப்பட்ட பலாக்கனி கிடைக்கவில்லை. மன்னன் தகவலறிந்து அவர்களை ஊரைவிட்டு அப்புறப் படுத்தினான்.

பலாமரம் இருந்த இடத்தை பார்வையிட வந்த மன்னன் அங்கு ஒரு பொன் உடும்பு ஓடக் கண்டான். துரத்திச் சென்றபோது அது ஓடிச் சென்று புற்றினுள் புகுந்து கொண்டு தனது உடும்பு வாலை சிவலிங்க ரூபமாகக் காட்டி காட்சி அளித்தபின்பு கருவறையும் இதர கட்டுமானப் பணிகளும் செய்விக்கப்பட்டன.

கருவறை அர்த்த மண்டபம், சாவகாச அந்தராளம், முன் மண்டபம் ஆகியவை சோழர்கள் கால கலைப் பாணியுடையவை.

ஆண்டுதோறும் மாசி மாதம் 10 நாட்கள் பெருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு சோமவாரமும், வழிபடத்தக்க சிறப்பான நாட்களாகும்.

தகவல் பலகை

சிதம்பரத்தில் உள்ள பொற்கூரையில் 21,600 ஓடுகள் உள்ளன. இவை மனிதன் ஒரு நாளைக்கு உள்வாங்கி வெளிவிடும் மூச்சுக் காற்று எண்ணிக்கையோடு ஒக்கும் என்பர். சிதம்பரத்தில் வேயப்பட்டுள்ள ஓடுகளைப் பொருத்தியுள்ள ஆணிகள் 72,000 என்பர். இவை மனித உடலின் நாடிகளோடு ஒக்கும் என்பர்.

75. அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில் பெருநகர்

காஞ்சிபுரத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் வந்தவாசி மற்றும் வந்தவாசி வழியாகச் செல்லும் பேருந்துகள் மூலம் பெருநகர் வந்தடையலாம். பஸ் நிறுத்தத்தினின்று சுமார் அரை கிலோமீட்டர் தூரத்திலுள்ள இத்திருக்கோயிலில் இருகோபுர வாயில்கள் உள்ளன. பிரதான கோபுர வாயில் தென்திசை நோக்கி உள்ளது. இத்திருக்கோயிலில் சக்கர விநாயகர், நவக்கிரக சன்னதி, பட்டுவதனாம்பிகை சன்னதி, வல்லப விநாயகர் சன்னதி, ஆறுமுகர் சன்னதி ஆகிய சன்னதிகள் உள்ளன. கிழக்கு நோக்கி இருக்கும் பிரம்மபுரீஸ்வரர் சன்னதி புராதன சன்னதியாகும். தினமும் காலை 8 முதல் 11 வரையும், மாலை 5 முதல் 8 வரையும் தரிசனம் செய்யலாம். கச்சியப்ப முனிவர் பாடிய பிரமீசர் பதிற்றுப்பத்து அந்தாதி என்ற நூல் உள்ளது.

கல்வெட்டுகளில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து (வந்தவாசி) பெருநகர் நாட்டுப் பெருநகர் என்று குறிக்கப் பெறுவதால் இவ்வூர் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் பல ஊர்களுக்குத் தலைமையகமாக விளங்கியதால் பெரிய நகரம் என்ற பொருளில் 'பெருநகர்' என ஆயிற்று. ஊரின் வடகிழக்கே இத்திருக்கோயில் அமைந்துள்ளது. பெருமதில் சூழ ஐந்து நிலையாகக் கொண்ட ராஜகோபுரம் தெற்கே அமைந்துள்ளது. முதல் திருச்சுற்றில் சிம்மத்தூண் மண்டபத்தில் சக்கர விநாயகர். தொந்தி விநாயகர், நந்தி அழகேசுவரர், திருக்குளம், தலத்தருவான 'வன்னிமரம்' கொடி மரம், பலிபீடம், நந்தி மண்டபம், அலங்கார மண்டபம் ஆகியன அமையப் பெற்றுள்ளன. திருக்கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. மூன்று நிலை கோபுர வாயில் வழியே நுழைந்தால் அடுத்த சுற்றினை (பிரகாரம்) அடையலாம், மகா மண்டபம், நவக்கிரக சன்னதி அடுத்து சிங்க மண்டபமும், பலிபீடமும் உள்ளன. தனிக்கோயிலில் அம்பாள் (பட்டுவதனாம்பிகை) நின்ற திருக்கோலத்தில் அருள் வழங்குகிறாள். மகாமண்டப தூண்களில் பன்னிரண்டு விநாயகர்கள் காட்சி அளிக்கின்றனர்.

மூன்றாவது திருச்சுற்றில் (பிரகாரம்) அஷ்ட நாகங்களான அனந்தன். வாசுகி, தட்சகன், கார்க்கோடகன், கங்கண், பதீமன், மகாபத்மன், குளிகன் ஆகியோரையும் நான்முகன், நந்திதேவர், கொற்றவை, வல்லப விநாயகர், ஏழு கன்னியர், 63 நாயன்மார்கள்,

மகாகணபதி, ஆறுமுகன் ஆகியோரை வழிபடலாம். இத்திருக்கோயிலில் அமைந்துள்ள ஜேஷ்டா தேவியின் சிலை பல்லவர் காலத்தைச் சார்ந்தது என அறியப்பட்டுள்ளது. எனவே, இத்திருக்கோயிலும் ஊரும் 1500 ஆண்டுகள் பழமையானது என அறியலாம். பச்சைக் கல்லால் ஆன தூங்கானை மாடக் கோயிலான இத்திருக்கோயில் விமானம், மூன்று கலசங்களுடன் அமைந்துள்ளது அழகு. இத்திருக்கோயிலில் முப்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் இரண்டாம் இராசராசனுடைய கல்வெட்டு தொன்மையானது. கல்வெட்டுகளில் சில சோழ நாட்டு உய்யக்கொண்டான். வளநாட்டில் உள்ள பனங்குடி, உரைந்தையூர் போன்ற ஊர்களில் வாழ்ந்த பெருமக்கள் இக்கோயிலில் விளக்கு வைத்து பூஜைகள் செய்ய நிலக்கொடைகள் அளித்ததையும், அந்நாளில் செய்யப்பட்ட பல ஒப்பந்தங்களையும் விவரிக்கின்றன.

இந்நாளில் இக்கோயிலில் தைப்பூசம் தீர்த்தவாரியுடன் பத்துநாள் பெருந்திருவிழா நடைபெறுகிறது. பல ஊர்களில் இருந்தும் ரிஷப வாகனங்களில் சுவாமிகளை செய்யாற்றின் நடுவில் எழுந்தருளச் செய்து அபிஷேகம் செய்வித்து, ஆற்றுத் திருவிழாவினை நடத்துகின்றனர். செய்யாற்றின் நடுவில் பதினெட்டு ஊர்களைச் சேர்ந்த சுவாமிகள் எழுந்தருள பக்தர்கள் இவ்விழாவினை கண்ணுற்று மகிழ்கின்றனர். பெருங்கூட்டமாக பக்தர்கள் வருகை தராவிடினும் பழம் பெருநகர் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கலாச்சாரச் சின்னமாகும்.

76. அருள்மிகு இரட்டைத் தாளீஸ்வரர் திருக்கோயில் உத்திரமேரூர்

உத்திரமேரூர் ஊரின் பிரதான சாலையில் பிரதான கோபுர வாயில் வடக்கு நோக்கி உள்ளது. உள்ளே நுழைந்ததும் அய்யப்பன் சன்னதி, விநாயகர் சன்னதி, வள்ளி தெய்வானை சமேத சுப்ரமணியர் சன்னதி உள்ளது. அம்மை மனோன்மணி அம்பாள் சன்னதியும், உள்ளே இரட்டைத் தாளீஸ்வரரும் காட்சி தருகிறார்.

இங்கு சிவாகம முறைப்படி இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. காலை 7 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் 8.30 மணி வரையிலும் தரிசன நேரமாகும்.

இத்திருக்கோயிலில் பிரதோஷம், கிருத்திகை, பவுர்ணமி, ஆடிக்கிருத்திகை, கந்தசஷ்டி, தைக் கிருத்திகை, சிவராத்திரி விழாக்கள் சிறப்புடன் நடைபெறுகின்றன.

77. அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில் உத்திரமேரூர்.

உத்திரமேரூர் பஸ் நிலையத்தில் இறங்கி எதிரில் குன்றில் கிழக்கு பார்த்த ராஜ கோபுரம் வழியாக உள்ளே சென்றால் கிழக்கு நோக்கி நான்கு திருக் கரங்களுடன் பாலசுப்ரமணிய சுவாமி நின்றகோலத்தில் காட்சி தருமாறு குன்றின் மீது செதுக்கி வடிக்கப்பட்டுள்ளார். இக்கோயிலிலும் திருத்தணி போன்று யானையே வாகனமாக இருப்பது தனிச்சிறப்பாகும். இக்கோயில் ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாகும். இக்கோயில் இறைவனை அருணகிரிநாதர் நான்கு பாடல்களில் பாடியுள்ளார்.

இக்கோயிலில் காமிகாகம முறைப்படி மூன்று கால பூஜை நடைபெறுகிறது. காலை 8 மணி முதல் 12 மணி வரை, மாலை 5.30 மணி முதல் 8 மணி வரையிலும் தரிசன நேரமாகும்.

இக்கோயிலில் கிருத்திகைதோறும் உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

குளம், கோயில் என்று தலயாத்திரை அனுபவிக்க வேண்டி வருவோர்க்கு அருள்கூறுங் குமரக்கோட்டம் இது.

78. ஸ்ரீ சுந்தர வரதராஜப் பெருமாள் மற்றும் ஸ்ரீ வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயில் உத்திரமேரூர்

காஞ்சிபுரத்திலிருந்து ஒரு மணி நேர பிரயாண தூரத்தில் உள்ளது உத்திரமேரூர். செங்கற்பட்டு வழி சென்னையிலிருந்தும் வந்தவாசி செல்லும் பேருந்தில் ஏறி உத்திரமேரூர் இறங்கி சிறிது தூரம் நடந்தால் இக்கோயிலை அடையலாம். இதன் பிரதான வாயில் கிழக்கு நோக்கி உள்ளது. பிரகாரத்தில் தாயார், ஆண்டாள், ஆழ்வார்கள், பெரிய திருவடி, சிறிய திருவடி சன்னதிகள் உள்ளன. உள்ளே ஸ்ரீ சுந்தர வரதராஜ பெருமாள் சேவை புரிகின்றார். அம்மை ஸ்ரீ ஆனந்த வள்ளி தாயார் இக்கோயில் வைகானச ஆகமப்படி பூஜைகள் மூன்று காலம் நடைபெறுகிறது. காலை 7 மணி முதல் 12 மணி வரை, 4 மணி முதல் 8 மணி வரையில் தரிசனம் செய்யலாம். சித்திரை மாதத்தில் சித்ராபௌர்ணமி, பிரம்ம உற்சவம், திருத்தேர் உற்சவம் நடைபெறும். தேர் சுற்றிவர 5 மணி நேரமாகும்.

நந்திவர்ம பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கோயிலாகும். குடவோலை முறைப் பற்றி வரலாற்றுச் செய்தி உள்ளன. இக்கோயில் இந்தியாவிலேயே ஒன்றின் மீது ஒன்றாக மூன்று தளங்களில் மூன்று கருவறைகளையும் கொண்ட ஒரு அருமையான கோயிலாகும். கோயிலுக்கு எதிரில் திருக்குளம் ஒன்று உள்ளது. குளத்தின் வடக்கில் ஆஞ்சநேயர் சன்னதி உள்ளது. கோயில் உள்சுற்றில் கருடன், அஞ்சலி



ஆனந்த வல்லித் தாயார் அஷ்டாங்க விமானம்
சுந்தரவரதராஜப் பெருமாள்

செய்த வண்ணம் நின்றுள்ளார். இக்கோயில் அஷ்டாங்க விமான அமைப்பில் உள்ளது. மாடிச்சன்னதி முறையிலான கட்டிட அமைப்பினைக் கொண்ட இத்திருக்கோயிலில் பின்பற்றியே தற்போதைய சென்னை அஷ்டலட்சுமி திருக்கோயில் கட்டப்பட்டதாகும். புராணம், தொன்மை, வரலாறு என்ற மூன்றாலும் உத்திரமேரூர் பெற்ற புகழை இத்திருக்கோயில் குறிப்புகளால் அறிவதாகப் பலநூல்கள் குறிப்பிடுகின்றன.

79. அருள்மிகு அம்பலவாணேஸ்வரர் திருக்கோயில் அங்கம் பாக்கம்

செங்கற்பட்டு காஞ்சி செல்லும் சாலையில் வாலாஜாபாத்தில் இறங்கி பாலாற்றைக் கடந்தால் அங்கம்பாக்கம் அடையலாம். கிழக்கு நோக்கி உள்ள மொட்டை கோபுரமும் இரண்டு பெரிய பிரகாரங்களும் இரு நுழைவு வாயில்களும் உள்ள திருக்கோயில் ஆகும். கிழக்கு நோக்கி உள்ள மூலவர் சன்னதியோடு மேற்கு உட்பிரகாரத்தில் சிவகாம சுந்தரி சன்னதி உள்ளது. காலை 7 முதல் 11 வரையும், மாலை 4 முதல் 7 வரையும் தரிசன நேரமாகும்.

தில்லை வாழ் அந்தணர் ஒருவர் சிவகதி அடைந்த தன் தந்தையின் அஸ்தியைக் கரைக்க காசி நோக்கிச் சென்றார். பயண இரவில் இங்கு தங்கும் பொழுது புதுப்பானையில் இட்ட அஸ்தி யாவும் பூக்களாக மாறி நறுமணம் பரப்பின. புஷ்பம் குலுங்கிய பானை 'அம்பல வாணேஸ்வரரின் அங்கம் பாக்கம் எல்லையைத் தாண்டியதும் பூக்களும் மணத்துடன் மறைந்தன. அங்கம் பூக்களாக பூத்ததினால் அது நடைபெற்ற பாக்கம்/ஊர் அங்கம்பாக்கம் எனப்பட்டது.

இத்திருக்கோயில் விளக்கெரிக்க முதலாம் ராசராசன் காலத்தில் ஆடுகள் தானம் செய்யப்பட்டதைக் குறிக்கும் தூண்கல்வெட்டுகள் உள்ளன. குலோத்துங்கன் காலத்தே செப்பனிடப்பட்ட இத்திருக்கோயில் திருமஞ்சனத்திற்காக இரண்டு குடம் நீர் கொண்டு வருவதற்கு 96 குழி நிலம் மானியமாக விடப்பட்டது.

சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலம் வரையிலுள்ள கல்வெட்டுகள் இங்கு கிடைக்கின்றன.

காமிக ஆகம முறைப்படி மூன்று கால பூசைகள் நடைபெறுகிறது.

ஆனித் திருமஞ்சனம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கந்த சஷ்டி, கார்த்திகை சோமவாரம், தீபம், தனுர் மாதம், மாணிக்கவாசகர் உற்சவம், ஆருத்ரா, தமிழ் வருடப் பிறப்பு ஆகியவை முக்கியமான நாட்களாகும்.

80. அருள்மிகு அப்பன் வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில், திருமுக்கூடல்

காஞ்சி மாநகருக்கு கிழக்கே பாலாறு, சேயாறு, வேகவதி ஆகிய ஆறுகள் சங்கமிக்கும் இடம் திருமுக்கூடல் எனப்படுகிறது. இவ்வூரில் பிரம்மா, சிவன், விஷ்ணுவாக மும்மூர்த்தி ஸ்வரூபனாக காட்சி தருகிறார். அவர் முகத்திற்கு எதிர் முகமாக மூன்று ஆறுகளும் ஒன்றாக சங்கமிப்பதால் திருமுக்கூடல் எனப் பெயர் பெற்றது. காஞ்சிபுரத்திலிருந்து செங்கல்பட்டு செல்லும் வழியில் பழைய சீவரத்தில் இறங்கி பாலாற்றைக் கடந்தால் திருமுக்கூடலை அடையலாம். தினமும் காலை 8 முதல் 11 வரையும், மாலை 4 முதல் 6 வரையும் தரிசன நேரங்களாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன.

தொண்டைமான் சக்கரவர்த்தி திருப்பதி வெங்கடேசப் பெருமாள் கோவிலுக்கு திருப்பணிச் செய்ய சென்றிருந்தார். அப்பொழுது பகை

நாட்டரசன் தன் நாட்டின் மீது படையெடுத்த செய்தியறிந்த தொண்டைமான் திருப்பதி வெங்கடேசப் பெருமாளிடம் மனமுருகி முறையிட்டு தன் திருப்பணியைத் தொடர்ந்தார். திருப்பதி வெங்கடேசப் பெருமாள் தன் சங்கு சக்கரத்தை அனுப்பி பகையரசனை அழித்து நாட்டைக் காப்பாற்றினார். திருப்பணி முடிந்து திருமுக்கூடல் திரும்பிய தொண்டைமான் அங்கிருந்த சங்கு சக்கரத்தைப் பார்த்து 'அப்பனே' என்று கூறி வணங்கியதிலிருந்து இப்பெயர் நிலைத்துவிட்டது. தேவார மூலவர்களில் ஒருவரான அப்பர் என்னும் திருநாவுக்கரசர் இப்பெருமானை புகழ்ந்து பாடியதால் அப்பர் வெங்கடேசப் பெருமாள் என்றும் அழைக்கப்படுவதாகக் கூறுவர். இத்திருக்கோயில் அப்பர் கோவில் என்றே உள்ளூர் மக்களால் அழைக்கப்படுகிறது.


திருக்கோயிலின் உட்புறத் தோற்றம்

இத்திருக்கோயிலின் கர்ப்பகிரக சுவரில் வீர ராஜேந்திரசோழனின் மெய்கீர்த்திகல்வெட்டு காணப்படுகிறது. வீர ராஜேந்திர சோழன் (1063,1070) ஆவணி மாதத்தில் ஆயில்ய நாளில் பிறந்தான் என்பதை குறிப்பிடுகிறது. இச்செய்தி வேறு கல்வெட்டுகளில் இல்லை.வீர ராஜேந்திர சோழனால் இக்கோயிலில் பல்கலைக்கழகமொன்று நிறுவப்பட்டு இருந்தது. பயிலும் மாணவர்களுக்கு உணவு, உறைவிடம், விளக்கிற்கும், தலை முழுகவும் எண்ணெய் வழங்கப்பட்டது. கேள்வியறிவு விளங்க பல நூல்கள் 'வ்யாக்ஞான' மண்டபத்தில் படித்து விளக்கப்பட்டது. மாணவர்களுக்கும் ஊரிலுள்ளோருக்கும் நோய் கண்டபொழுது மருத்துவம் செய்ய ஆதுலர் சாலையும் (மருத்துவ மனையும்) ஒரு மருத்துவனும், உதவியாளும், மருத்துவ பணி செய்யும் மகளிரும் இருந்தனர் என அறியப்படுகிறது.

திருக்கோயிலின் மூலவர் மும்மூர்த்திகளின் சொரூபமாக வடக்கு நோக்கி அமைந்துள்ளார். மேலும் கரிய மாணிக்கப் பெருமாள், தாயார், ஆண்டாள், வீர ஆஞ்சநேயர் ஆகியோருக்கும் தனி சன்னதிகள் உள்ளன. வைகுண்ட ஏகாதசி, கிருஷ்ண ஜெயந்தி, விஜயதசமி, கார்த்திகை தீபம், பாரிவேட்டை, ரதசப்தமி, மாசி மகம், யுகாதி, பங்குனி உத்திரம் ஆகியவை முக்கியமான நாட்களாகும்.

81. அருள்மிகு வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில் திருப்புலிவனம்



புலி லிங்கத்தைப் பூசித்தல்

காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர் செல்லும் பேருந்துகள் இவ்வூரின் வழியாகச் செல்லும், பேருந்து நிறுத்தத்தில் இருந்து 300 மீட்டர் தொலைவில் உள்ள கோவில் கிழக்கு நோக்கி கோபுரம் உள்ளது. உள்புறம் அமிர்தகுஜாம்பாள், விநாயகர், ஆறுமுகர், சுப்ரமணியர், நவக்கிரகம், தட்சிணாமூர்த்தி, சண்டீஸ்வரர் சன்னதிகள் உள்ளன. மூலவர் வியாக்ரபுரீஸ்வரர் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார். இறைவனை புலி பூஜித்ததால் வியாக்ரபுரீஸ்வரர் எனப் பெயர் வழங்குகிறது. அம்மை அமிர்தகுஜாம்பாள் இங்கு உத்திரகாமிக ஆகமப்படி இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. காலை 7 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 8 மணி வரையிலும் தரிசன நேரமாகும்.



குரு தட்சிணாமூர்த்தி அபூர்வ தோற்றம்

இக்கோயிலில் கி.பி. 12ம் நூற்றாண்டில் சிற்றரசர். இரண்டாம் ராசாதி ராசனால் கட்டப்பட்டதாக தெரிகிறது.

இக்கோயில் சித்ரா பௌர்ணமி, ஆனித்திருமஞ்சனம், ஆடிக்கிருத்திகை, விநாயகசதுர்த்தி, அன்னாபிஷேகம், கார்த்திகை தீபம் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி தீபம், லட்ச தீபம் ஆகியவை சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. மிகவும் சிதிலமடைந்துள்ள திருக்கோயிலின் தட்சிணாமூர்த்தி வெகு அபூர்வமான சிற்பமாகும். தனி சன்னதியாக கோஷ்டத்தில்

பலநூற்றாண்டாகவே இருப்பதால் குருபரிகார தலமாக விளங்குகிறது. இத்தலமும், கோவிந்த வாடியும் காஞ்சிபுரத்தின் இருபுறமும் சமதூரத்தில் இருப்பதும் அவற்றுள் தென்திசைக்கடவுள் தெற்கே உள்ள சிறப்பால் இத்தலத்துக்கும் தனி சக்தி உண்டென்பது மூத்தோர் சொல்.

82. அருள்மிகு கடம்பநாத சுவாமி திருக்கோயில் கடம்பர் கோயில்

காஞ்சிபுரத்திலிருந்து பேருந்து மூலமாக வெங்கஞ்சேரி கிராமத்தில் இறங்கி ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தூரம் நடந்தால் கடம்பநாதசுவாமி திருக்கோயிலை அடையலாம். மேற்கு திசையிலும், கிழக்கு திசையிலும் இரண்டு இராஜ கோபுரங்கள் உள்ள இத்திருக்கோயிலில் கிழக்கு நோக்கி உள்ள மூலவர் சன்னதி 'கடம்ப நாதர்' எனவும் 'கடம்பேசன்' எனவும் 'கடம்பை இளங்கோயில்' எனவும் வழங்கப்படுகிறது. இத்திருக்கோயிலின் மூலவர் பெயராலேயே இவ்வூர் பெயர் அமைந்துள்ளது. காஞ்சி புராணத்தில் 'திருக்கடம்பர் கோயில்' எனக் குறிப்பிடப்படும் இத்திருக்கோயில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோரால் பாடப்பெற்ற திருத்தலமாகும்.

தெற்கு நோக்கிய அம்பாள் சன்னதி 'ஆவுடைநாயகி அம்பாள்' என்ற பெயரோடு அழைக்கப்படுகிறாள். திருச்சுற்றில் சைவ சமய ஆச்சாரியர்கள், விநாயகர், ஆறுமுகர், சண்டேசர் ஆகிய சன்னதிகளும் கோஷ்டத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரும்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். மகாமண்டபம் அர்த்த மண்டபம் கருவறை என அமைந்துள்ள இத்திருக்கோயிலில் மூலவர் 'சுயம்புலிங்கம்' என அழைக்கப்படுகிறது. காசிப முனிவரால் வணங்கப்பட்ட தலம். மலையன், மாகரன் என்னும் அசுரர்களை அழித்த கடம்பனாகிய முருகன் வழிபட்டதால் 'கடம்பர் கோயில்' என அழைக்கப்படுகின்றது. சுமார் 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக கருதப்படும் இத்திருக்கோயிலின் தீர்த்தம் 'சேய்நதி' என வழங்கப்படுகிறது. இவ்வூர் காரணப் பெயர்களான தவநகரம், முக்திபுரம், போகபுரம், ஞானபுரம், வெற்றிபுரம், கல்யாணபுரம், கந்தாச்சிரமம், சக்திபீடம் ஆகிய பெயர்களை உடையது.

சிவாகம முறைப்படி நான்கு கால பூஜை நடைபெறும் இத்திருக்கோயிலில் காலை 5 மணி முதல் 1 மணி வரையிலும் மாலை 3 மணி முதல் 8 மணி வரையிலும் தரிசனம் செய்யலாம்.

மாதபிரதோஷம், பௌர்ணமி ஆகியவையும், தமிழ் வருடப்பிறப்பு, விநாயகர் சதுர்த்தி, ஆயுதபுஜை, தீபாவளி, பொங்கல், திருக்கார்த்திகை, தனுர் மாதம், பிரம்மோற்சவம், தைப்பூசம் ஆகியவையும் முக்கிய திருநாட்களாகும். பிரம்மோற்சவம் பங்குனி மாதத்தில் கொடியேற்றி 10 நாட்கள் நடைபெறும்.

83. அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், இளையனார் வேலூர்

உலக நலத்திற்காக காசிப முனிவர் வேள்வி தொடங்க, மலையன், மாகறன் எனும் இரண்டு அசுரர்கள் வேள்வியை அழிக்கத் தொடங்கினர்.

மாகறன் என்னும் அசுரனை அவனது படையை அழித்து முருகன் தனியன் ஆக்கினார். நெருப்பாகவும், இருளாகவும், கடலாகவும், காற்றாகவும், பேயாகவும், ரதமாகவும் பல வடிவங்கள் எடுத்தான். காசிபமுனிவரின் யாகசாலையைக் காக்கும் பொருட்டு தனது வேலை கீழ்த்திசையில் நிறுத்தினார்.

இளைய மகனான சுப்பிரமணியர் தனது வேலை ஊன்றிய இடமே 'வேலூர்' 'இளையனார் வேலூர்' என பெயர் பெற்றது. பின்னர் மாகறன், மலையன் என்னும் இரு அசுரர்களையும் அழித்த பின்பு கடம்பர் கோயில் சென்று வழிபட்டார். பங்குனி மாதம் சுக்கில பட்சம் மக நட்சத்திரத்தோடு கூடிய பிரதோஷ நாளில் வழிபட்டதால் ஒவ்வொரு ஆண்டும் இளையனார் வேலூர் முருகன், கடம்பர் கோயில் வந்து வணங்கிவிட்டு செல்லுகிறார். தினமும் காலை 6 முதல் 11 வரையிலும், மாலை 5 முதல் 7.30 வரையும் தரிசன நேரமாக உள்ளது இத்திருக்கோயில். ஒவ்வொரு கிருத்திகை சஷ்டி ஆகிய நாளில் மக்கள் திரளாக வந்திருந்து தரிசனம் செய்கின்ற திருத்தலம் இது.

அனுமந்த வாகனம்

84. அருள்மிகு குணந்தந்த நாதீஸ்வரர் திருக்கோயில் ஒரக்காட்டுப்பேட்டை

செங்கல்பட்டிலிருந்து பினாயூர் மற்றும் அரும்புலியூர் கிராமங்களுக்கு செல்லும் பேருந்து சாலையில் ஒரக்காட்டுப்பேட்டை அமைந்துள்ளது. செங்கல்பட்டிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் பேருந்து சாலையில் பழத்தோட்டம் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி பாலாற்றைக் கடந்தால் திருக்கோயிலை அடையலாம். காலை 8 முதல் 11 வரையும், மாலை 6 முதல் 7 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

பாலாற்றின் வடகரையில் அமைந்த வனம் பிரானேஷ்வனம் என அழைக்கப்பட்டது. இந்தக் காட்டின் வழியாக பல வணிகர்கள் வியாபாரத்திற்கு செல்வர். கள்வர்கள் அவ்வியாபாரிகளை கொள்ளையடிப்பர். இவ்வனத்தில் சிவபெருமான் அம்மனுடன் ஒரு வில்வமரமாய் குடிகொண்டிருந்தார். கொள்ளையில் தன் செல்வம் இழந்த ஒரு வணிகன் வில்வமரத்தடி ஈசனிடம் ‘இக்கள்வர்களுக்கு நற்குணத்தை கொடுத்து நான் இழந்த செல்வங்களை மீட்டுக் கொண்டு அவர்களே தரும் வரையில் உன் திருவடிகளாகிய இவ்விடத்தைவிட்டு அகலமாட்டேன், என்று உறுதி பூண்டார்.

கள்வர்களை திருத்த ஈசன் வேடன் உருவெடுத்து அவர்களைத் தாக்கினார். அக்கள்வர்கள் காளிதேவியை வழிபட்டு தங்களைக் காக்க வேண்டினர். மாகாளியும் ஆக்ரோஷமான உருவெடுத்து வேடனைத் தேடி வரும் வேளையில் வில்வ மரத்தனடியில் வேடன் நடனமிடுவதைக் கண்டு மாகாளியும் எதிர்த்து நடனமாடி தோற்க, இறைவன் தன் உருக்காட்ட அது கண்டு காளிதேவி அக்கள்வர்களை மன்னித்துக் காக்கும்படி வேண்டினாள். கள்வர்கள் மனம் திருந்தி பொருட்களை திரும்பக் கொடுத்து வில்வ மரத்தை ஜோதிர்லிங்கமாய் வழிபட குணந்தந்த நாதீஸ்வரர் உருப்பெற்றார்.

பிற்கால சோழர்களால் இக்கோயில் அமைக்கப்பெற்றது. திரிபுரசுந்தரியுடன் குணந்தந்த நாதீஸ்வரர் காட்டுப் பகுதியில் உறைந்ததால் உறைக்காட்டுப்பேட்டை, ஒரக்காட்டுப்பேட்டை என்று மருவியது.எம்பெருமானும் மாகாளியும் நடனமாடுவது போன்ற உருவத்தை எம்பெருமான் சன்னதியில் காணலாம். ஊர் எல்லையில் மாகாளியம்மன் சன்னதி உள்ளது. மாகாளியையும் குணந்தந்நாதஸ்வரையும் பவுர்ணமி நாளிலும் ராகுகாலத்திலும் வணங்குவது மரபாக உள்ளது.

இரட்டைப் புலவர்களாலும், கல்கத்தாவின் விலக்ஷணாநந்தராலும் இத்திருக்கோயிலைப் பற்றி பாடல்கள் பாடப் பெற்றுள்ளன.

இத்திருத்தலத்தில் விநாயகர், வள்ளி தெய்வானை சுப்ரமணியர் ஆகியோர் தனி சன்னதியில் உள்ளனர். ஐப்பசி சஷ்டியில் சூரன் அழிந்த திருநாளும், தைத்திங்களில் பரணி, கார்த்திகை தினங்களில் தெப்ப உற்சவமும் நடைபெறுகிறது.

85. அருள்மிகு காலீஸ்வரர் திருக்கோயில் சீட்டனஞ்சேரி

காஞ்சிபுரம் நகருக்கு கிழக்கே 15 கி.மீ. தொலைவில் பாலி நதியின் தென்புறம் உள்ள மகிழ வனத்தில் மணிபுங்கவ மரத்தின் அடியில் சுயம்புலிங்க மூர்த்தியாய், காலீஸ்வரர் எழுந்தருளினார். பரத்வாஜ முனிவரால் பூசிக்கப்பெற்று கைலாய மோட்சமடைய அருளியவர். பாண்டவர்கள் வியாச முனிவரின் உபதேசம் பெற்று, மகிழ வனத்தை அடைந்து இந்த இறைவனை வணங்கி முன்வினைப் பாவங்கள் நீங்கப் பெற்றனர் என்பர்.

சிவபெருமானின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து முருகப்பெருமான் குமாரதீர்த்தம் என்னும் குளத்தை உருவாக்கி அத்தீர்த்தின் மூலம் சுயம்புலிங்க மூர்த்தியை அபிஷேகம் செய்து சூரனை வதைத்த பாவம் நீங்கப் பெற்றார். ஸ்ரீகிருஷ்ணர், துவாரகையில் அரசாட்சி செய்யும் போது சிவபெருமானை வழிபட வேண்டி, இம் மகிழவனத்தை அடைந்து சுயம்பு மூர்த்தியை வழிபட்டு சிவ அருளைப் பெற்றார். அதனால் இத்தலம் கிருஷ்ணபுரம் என்று அழைக்கப்படுகிறது.

புதர்களாலும், முட்செடிகளாலும் மூடப்பட்டு மறைந்து போயிருந்த சிவலிங்கத்தை ஒரு கறவைப் பசு கண்டறிந்து தன் மடியிலிருந்த பாலைப் பொழிந்தது. இந்த செயலை அறிந்த ஊர் மக்கள் அவ்விடத்தில் ஒரு கோவில் கட்டி கும்பிட்டனர். பசுக்களால் பூசிக்கப்பட்டபடியால் இறைவன் ஸ்ரீ காலீஸ்வரர் எனவும் அழைக்கப்படுகிறார். இறைவி சிவகாம சுந்தரி. இத்திருக்கோயிலில் இறைவனுக்குத் தனியாகவும் இறைவிக்குத் தனியாகவும் தனித்தனி கொடிமரங்கள் உள்ளன. காலீஸ்வரருக்கு பங்குனியில் பிரம்மோற்சவமும், சிவகாம சுந்தரிக்கு ஆடி மாதத்திலும் உற்சவங்கள் நடைபெறுகின்றன. தரிசன நேரம் காலை 7 முதல் 12 வரை, மாலை 4 முதல் 8 வரை ஆகும்.

86. அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், பழைய சீவரம்

செங்கற்பட்டு காஞ்சிபுரம் சாலையில், காஞ்சிபுரம் நகரிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பழைய சீவரம் என்னும் பேருந்து நிறுத்தமே உள்ளது. அதில் இறங்கி சிறிய மலை ஒன்று மீது ஆண்டாள் , விஷ்வக் சேனர், திருமங்கை ஆழ்வார், உடையவர் நிகமாந்த தேசிகர் சன்னதிகள் உள்ளன. அதன் உள்புறம் சென்றால் மேற்கு நோக்கி லட்சுமி நரசிம்ம சுவாமி சேவை புரிகின்றார். பிரகலாதன் வேண்டி தன் கோபத்தைத் தணித்துக் கொண்டதால் பிரகலாதவரதன் என்ற சிறப்புப் பெயரும் உள்ளது. தாயார் ஸ்ரீ அஹோபில வல்லித்தாயார். இங்கு வைகானச ஆகமப்படி இருகால பூஜை நடைபெறுகின்றது. காலை 8 மணி முதல் 11 மணி வரையும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையும் தரிசன நேரமாகும்.

இங்கு தமிழ்ப்புத்தாண்டு, நரசிம்ம ஜெயந்தி, பிரம்ம உற்சவம், ஸ்ரீ ஜெயந்தி பவித்ர உற்சவம், விஜயதசமி, தீபாவளி, கார்த்திகை தீபம், பொங்கல், மாட்டுப் பொங்கல், பாரிவேட்டை உற்சவம் சிறப்புடன் நடைபெறுகின்றது.

அகலமான ஆறும், ஆற்றங்கரைச் சாலையும் சாலையோரக் குன்றும் குன்றின் மீது கோபுரமும் குன்றின் உச்சிக்குத் தனியே இட்டுச் செல்லும் படிக்கட்டுகளும் புகைப்படப் பிரியர்களுக்கும் தனிமை விரும்பிகளுக்கும் இவ்விடம் அபிமானமாய் இருப்பதில் ஆச்சரியமில்லை. சிறிய பெரிய திரைகளில் இடம்பெற்று வரும் 'கலைக் கோவிலாக' இத்தலம் இருப்பதை நேரில் சென்றமர்ந்து காணவும்.

<u>தகவல் பலகை</u>

பஞ்ச சபை என்பவை நடராஜர் நடனம் புரிந்ததாகக் கூறப்படும் ஐந்து சபைகள் ஆகும்.

1. மதுரை................................வெள்ளியம்பலம் (வெள்ளி)
2. சிதம்பரம்..........................ஸ்வர்ணம்பலம் (பொன்)
3. நெல்லை...........................தாமிர சபை
4. திருவாலங்காடு....................ரத்தின சபை
5. குற்றாலம்..........................சித்திர சபை

87. அருள்மிகு சக்திவிநாயகர் திருக்கோயில், செங்கற்பட்டு

சென்னையிலிருந்து திருச்சி செல்லும் தெற்கு தேசிய நெடுஞ்சாலையில் செங்கற்பட்டு நகரத்தில் அரசு மருத்துவமனை பேருந்து நிறுத்தத்திலிருந்து தெற்கு நோக்கி சுமார் ஒரு கிலோ மீட்டரில் நீதிமன்றங்கள் கோட்டாட்சியர் அலுவலகங்கள் அமைந்த பகுதியில் சாலையோரம் தென் முகத்தே அமர்ந்திருக்கும் அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயிலை அடையலாம். காலை, மாலை ஆகிய இரு வேளை பூசை நடைபெறுகிறது. இத்திருக்கோயிலில் விநாயகர் சதுர்த்தி, சித்திரா பௌர்ணமி ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இத்திருக்கோயிலின் சிறிய பிரகாரத்தில் அருள்மிகு சுப்பிரமணியர் சன்னிதியும், நவக்கிரகமும், உற்சவருக்கென தனி சன்னிதியும் உள்ளது. இத்திருக்கோயிலில் காமிகாகம முறைப்படி பூசைகள் நடைபெறுகின்றன. தினமும் காலை 6 முதல் 12 வரையும் மாலை 4 முதல் 8.30 வரையும் தரிசனம் செய்யலாம்.

நெடுஞ்சாலை வாகன ஓட்டிகளுக்கு விபத்தை தவிர்க்கும் விக்கின விநாயகராகவும், மருத்துவமனை, நீதிமன்றம், வட்டாட்சியர் அலுவலகம் வருவோரின் கோரிக்கையை நிறைவேற்றி தரும் விநாயகராகவும் பல்லாண்டுகளாகப் புகழ்பெற்ற திருக்கோயில் இது.



திருக்கோயிலின் முகப்புத்தோற்றம்

தகவல் பலகை

கோபுர தரிசனம் இறைவனின் பாத தரிசனம் ஆகும். எனவே தான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றனர்.

88. அருள்மிகு மருந்தீஸ்வரர் மற்றும் தியாகராஜ சுவாமி திருக்கோயில் திருக்கச்சூர்



தியாகராஜ சுவாமி திருக்கோயில் உட்புற தோற்றம்

சென்னை செங்கல்பட்டு நெடுஞ்சாலையில் சிங்கப்பெருமாள் கோயிலிலிருந்து திருப்பெரும்புதூர் செல்லும் பாதையில் 1/2 கிலோ மீட்டர் தொலைவில் வடக்கு நோக்கி செல்லும் பாதையில் திருக்கச்சூர் அமைந்துள்ளது. ஊருக்குள் சென்றதும் வலதுபுறம் திரும்பி சென்றால் கச்சபேஸ்வரர் கோயிலையும், இடதுபுறம் மலைமேல் மருந்தீஸ்வரர் கோயிலையும் காணலாம்.

சிவனைத் திருமால் ஆமை வடிவில் பூசித்தல்

கிழக்கு திசை நோக்கி கோபுரவாசல் அமைந்துள்ளது. உள்புறம் கிழக்கு நோக்கி 'கச்சபேஸ்வரர்' கோயில் உள்ளது. அஞ்சலாட்சி அம்பாள் உள்ளார். இங்கு காமிக ஆகம முறைப்படி இரண்டு கால பூஜை நடைபெறுகிறது. காலை 8 மணி முதல் 10 மணி வரை, மாலை 6 மணி முதல் 8 மணி வரை தரிசன நேரமாகும். இங்கு சித்திரையில் பிரம்ம உற்சவம், கார்த்திகை மாதத்தில் சோமவார தினங்களில் மலைக்கோயில் சிறப்பு அபிஷேகம், 108 பால் குட அபிஷேகம் மாத உற்சவம் பிரதோஷ பூஜை நடை பெறுகின்றன. „முதுவாயோரி" எனப் பதிகம் பாடப் பெற்ற திருக்கோவிலாகும். திருமால் ஆமை வடிவில் வந்து வழிபட்ட திருத்தலமாகும். சுந்தரருக்கு தியாகராஜர் அந்தண வடிவில் வந்து பிச்சையெடுத்து அன்னமிட்ட திருக்கோவிலாகும். மருந்தீஸ்வரர் திருக்கோயிலின் அம்மன் இருள் நீக்கித் தாயார் என்பதாகும். ஆலம் வேர்ப்பலாவும் தலவிருட்சங்களாகும்.

சுந்தரருக்கு பிச்சை எடுத்து அன்னமிடல்

89. அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில், செங்கற்பட்டு

சென்னை, திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் செங்கற்பட்டு நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில். இக்கோயில் செங்கற்பட்டு கோட்டையின் உள்ளிருந்து கி.பி.1885 ஆம் ஆண்டு இப்போதுள்ள இடத்திற்கு முழுமையாக இடப்பெயர்ச்சி செய்யப்பட்டதாகும், இத்திருக்கோயில் வளாகத்தின் உள்ளே அதற்கு முன்னதாகவே 11 ஆம் நூற்றாண்டு முதல் வரதராஜப் பெருமாள் சன்னிதி இருந்து வருகிறது என்பர். 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயத்திற்கு காணிக்கையாக அளிக்கப்பட்ட பொற்காசு மாலை குறித்த பட்டயம் இன்னும் உள்ளது. கோதண்டராமர் ஆலயத்தில் வீர ஆஞ்சநேயர் திருக்கோயில் என்பது சிறப்பான பிரார்த்தனை தலமாக உள்ளது. வில்வம், புன்னை ஆகியவை தலவிருட்சங்கள் ஆகும். வைகானச ஆகம வழிபாடு நடைபெறும். இத்திருக்கோயிலில் நாள்தோறும் இருவேளை பூசை நடைபெறுகிறது. காலை 7.30 முதல் 10.30 வரையும் மாலை 5 முதல் 8 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

இத்திருக்கோயிலில் சிறப்பு மாத உற்சவங்களும், கிருஷ்ண ஜெயந்தி, உறியடி உற்சவம் முதலான வைணவத் திருநாட்களும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன. வாரந்தோறும் அனுமன் சன்னிதியில் வியாழக்கிழமை நூற்றெட்டு தீப வழிபாடும், இரண்டாம் வெள்ளியில் திருமஞ்சள் நீராட்டும், கூட்டு வழிபாடும், சனிக்கிழமைகளில் காலை முதல் நண்பகல் வரை வழிபாடும் இத்தலத்திற்குரிய சிறப்புகளாகும். சனியை மிதிக்கும் ஆஞ்சநேயருக்கு பிரார்த்தனை செய்ய சனி தோஷம் நீங்கும் என்பது விசேடம். கணையாழி ஆஞ்சநேயர் திருக்கோயில் இதன் உபகோயில் ஆகும்.

கோயிலின் முன்புறத் தோற்றம்

90. அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்
செங்கற்பட்டு

சென்னையிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள செங்கற்பட்டு நகரத்தின் இதயப் பகுதியில் பேருந்து நிலையத்தின் வெகு அருகிலும், புகை வண்டி நிலையத்திலிருந்து சுமார் முக்கால் கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இறைவன் சன்னதியை ஒட்டி தனி சன்னதியில் அன்னை காமாட்சி அம்மை நின்ற கோலத்தில் அருள்புரிகிறார். இரண்டு பிரகாரங்களுள்ள இந்தத் திருக்கோயிலின் நிர்வாகத்தின்கீழ் செங்கற்பட்டு, பெரியார் தெரு அருள்மிகு சக்தி விநாயகரும், செங்கற்பட்டு பிள்ளையார் குளம் அருள்மிகு வரசக்தி விநாயகர் கோயிலும் உள்ளன.காலை 7 மணி முதல் 11 மணி வரையும் மாலை 5 முதல் 8.30 வரையும் தரிசிக்கலாம். இத்திருக்கோயிலில் விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, அன்னாபிசேகம், கார்த்திகை தீபம், சூரசம்ஹாரம், தனுர்மாதம், ஆருத்ரா, சிவராத்திரி ஆகிய உற்சவங்கள் கொண்டாடப்படுகின்றன.

கோயிலின் முகப்பு

காஞ்சிக்கு சென்று ஏகாம்பரேசுவரரையும், காமாட்சி அம்மையையும் தரிசிக்க அவகாசம் இல்லாத பக்தர்கள் இவ்வழிச் செல்கையில் இங்கு நின்று தரிசித்து செல்வதுண்டு.

தகவல் பலகை

- சிவனின் அடி முடி தேடிய போது பிரம்மன் சிவனின் திருமுடியைக் கண்டதாகப் பொய் கூறியதால் பிரம்மனுக்கு என எங்கும் தனிக்கோயில் கிடையாது.
- பிரம்மனுக்கு சாதகமாக சிவனின் தலையில் இருந்து உதிர்ந்த தாழம்பூ தன்னை பிரம்மா சிவனின் தலையில் இருந்து எடுத்து வந்ததாக பொய் கூறியதால் தாழம்பூவும் அர்ச்சனைக்கு உகந்ததாக ஏற்றுக் கொள்ளப்படாமல் சிவனுக்கு சாற்றப்படுவதில்லை.

91. அருள்மிகு நந்தீசுவரர் திருக்கோயில்
நந்திவரம், (கூடுவாஞ்சேரி)

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், கூடுவாஞ்சேரி நந்திவரம் கிராமத்தில் அருள்புரியும் அருள்மிகு நந்தீசுவரப் பெருமாள் திருக்கோயில் உள்ளது. சென்னையிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் தாம்பரத்தை அடுத்த கூடுவாஞ்சேரியிலிருந்து 1 கிலோமீட்டர் தொலைவுக்குள்ளே அமைந்துள்ளது. அப்பரால் பாடல் பெற்ற இத்திருத்தலத்தில் நந்தீசுவரரோடு அருள்மிகு அழகொளிர் நாயகி என்னும் சௌந்தர்ய நாயகி அம்பாள் அருள் புரிகிறார்.



நந்தி

இத்திருக்கோயிலின் கோபுரவாயில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. மூலவர் கிழக்கு நோக்கி இருக்கிறார். இத்திருக்கோயிலில் காமிக ஆகம முறைப்படி இரண்டு கால பூசைகள் நடைபெறுகின்றன. சுயம்பு மூர்த்தியான இங்குள்ள மூலவர் நந்தீஸ்வரர் என அழைக்கப்படுகிறார். இத்திருக்கோயிலில் விநாயகர் சன்னதி, சுப்பிரமணியர் சன்னதி, அம்பாள் சன்னதி நடராசர் சன்னதி, நவக்கிரக சன்னதி ஆகிய சன்னதிகள் உள்ளன. இத்திருக்கோயிலில் மாதந்தோறும் பிரதோஷம், கிருத்திகை, பௌர்ணமி ஆகிய நாட்களில் சிறப்பு அபிசேக பூசைகளும், சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், ஆடிப்பூரம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, கார்த்திகை சோமவாரம், திருக்கார்த்திகை தீபம், ஆருத்ரா தரிசனம், மகாசிவராத்திரி, பங்குனி உத்திரம் ஆகிய உற்சவங்களும் கொண்டாடப்படுகின்றன. காலை 8 முதல் 10 வரையும் மாலை 5 முதல் 8 மணி வரையும் தரிசிக்கலாம்.

<u>தகவல் பலகை</u>

பதினொரு பிரதோஷங்கள் தரிசனம் செய்தால் ஒரு முழு கும்பாபிஷேகத்தை தரிசனம் செய்த பலன் கிடைக்கும்.

92. அருள்மிகு அகோர வீரபத்திரசுவாமி திருக்கோயில் அனுமந்தபுரம்

பழம்பெரும் செங்கற்பட்டு கோட்டையின் சுவரை ஒட்டி அமைந்துள்ளதால் அரண் அமைந்தபுரம் என அழைக்கப்பட்டு, அனுமந்தபுரமாக மருவியழைக்கப்படும் ஊரில் காளி அம்மனுடன் உறைந்து அருள்புரியும் அருள்மிகு அகோர வீரபத்திர சுவாமி திருக்கோயிலானது செங்கற்பட்டு நகரத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. செங்கற்பட்டிலிருந்து நகரப் பேருந்து வந்து செல்கிறது. சென்னையிலிருந்தும் நேரடி பேருந்து வசதியுண்டு, கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் வில்லும் கத்தியும் ஏந்தி சடை முடியோடு மூன்று கண்களைக் கொண்டு அகோர ரூபத்தில் காணப்படும் இப்பெருமானுக்கு சைவ ஆகம முறைப்படி மூன்று கால பூசைகள் நடத்தப்படுகின்றன. இத்தலத்தின் தல விருட்சமாகக் கொன்றை மரம் பூசிக்கப்படுகிறது. திருக்குளம் சக்தி தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வோராண்டும் இத்திருக்கோயிலில் மகாசிவராத்திரி விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் சித்திரை வருடப்பிறப்பு, ஆடிக் கிருத்திகை போன்ற உற்சவங்களும் கொண்டாடப்படுகின்றன. காலை 7.30 முதல் 12 வரையும் மாலை 4.30 முதல் 8 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

மனோவியாதி உள்ளவர்கள் இத்தலத்தில் பல நாள் தங்கி குணம்பெற்றுச் செல்வது வழக்கம். தெற்கே குணசீலம் போன்ற இடங்களைப் போல் இத்தலத்திலும் நடத்தப்படுகிறது. அருள்மிகு காளியம்மன் கோயிலும் இவ்வூரில் தரிசிக்த தக்கது. அருகில் உள்ள திருவடி சூலம் திருக்கோயிலையும் தரிசனம் செய்யலாம்.

93. அருள்மிகு பாடலாத்திரி நரசிம்ம பெருமாள் திருக்கோயில் சிங்கப்பெருமாள் கோயில்

திருமங்கை மன்னனால் சிங்கவேள் குன்றம் எனப் பாடப்பெற்ற செந்நிறமான குன்று என்று பொருள்படும் பாடலாத்திரி எனப்படும் அருள்மிகு பாடலாத்திரி நரசிம்மப் பெருமாள் கோயிலானது சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இக்கோயில் பெயராலே ஊரும் அழைக்கப்படுகிறது. இத்திருக்கோயிலானது பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்ட

குடைவரைக் கோயிலாகும். எனவே, குன்றோடு இணைந்துள்ள 1200 ஆண்டு பழமைவாய்ந்த இவ்வாலயத்தின் மூலவரை வலம் வர வேண்டுமெனில் குன்று முழுவதையும் வலம் வரவேண்டும். எனவே இதனைக் 'கிரி பிரதட்சணம்' என்றும் கூறுவர். கிழக்கு நோக்கி அமைந்துள்ள இத்திருக்கோயிலின் விமானம் பிரணவ கோடி விமானம் என வழங்கப்படுகிறது. மூலவர் கிழக்கு நோக்கியுள்ளார். உற்சவரது பெயர் பிரகலாத வரதன் என்பதாகும். அன்னையின் பெயர் அருள்மிகு அகோபில வல்லித் தாயார். திருக்கோயில் வளாகத்தில் ஆண்டாளுக்கும், லட்சுமி நரசிம்மருக்கும், பன்னிரு ஆழ்வார்களுக்கும், ஆச்சார்ய புருஷர்களுக்கும் சன்னதிகள் உள்ளன. திருக்கோயிலின் பாரிஜாத மரம் ஸ்தல விருட்சமாக பூசிக்கப்படுகிறது. தீர்த்தம் சுத்த புஷ்கரணி என்றழைக்கப்படுகிறது. தெருமுனையில் அனுமார் சன்னதியும் உள்ளது. காலை 7.30 முதல் 11.30 வரையும் மாலை 4 முதல் 8.30 வரையும் தரிசிக்கலாம்.

நரசிம்ம பெருமாள் கருவறை

இத்திருக்கோயிலானது சிறப்புபெற்ற பிரார்த்தனைத் தலமாகும். ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் முடியிறக்கிக் காணிக்கை செலுத்தி வருகின்றனர். இத்திருக்கோயில் வைகானச ஆகம வழிபாட்டு முறையில் இருகால பூசைகள் நடைபெறுகின்றன. இத்திருக்கோயிலில் சித்திரை வருடப்பிறப்பு, சித்ரா பௌர்ணமி, நரசிம்மஜெயந்தி, இராமானுஜர் ஜெயந்தி, ஆண்டுப் பெருந்திருவிழா, வைகுண்டஏகாதசி, நவராத்திரி ஆகிய உற்சவங்களும் இதர வைணவத் திருநாட்களும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன.

கோயிலின் உட்புறத் தோற்றம்

மூலவர் நரசிம்மமூர்த்தி தொன்மையானவர். விலை மதிப்புள்ளகற்களால் வடிக்கப்பெற்றவர் தற்போது வஸ்திரம் கவசம் சார்த்திய நிலையில் அருளுகிறார். சிவபிரானைப் போல் முக்கண்களை உடையவர். தரிசனம் பெற்றுத் துன்பங்கள் அகலப் பெறலாம்.



தந்தப் பல்லக்கு – திருவிடந்தை

இறைவனை எழுந்தருளச் செய்ய தங்கத்தால் ஆன பல்லக்கு பல கோயில்களில் இருக்கும். ஆனை இறந்தாலும் ஆயிரம் பொன் என்று சொல்லுவது அதனது தந்தத்தைக் கருத்தில் கொண்டு தான். தந்தம் மிகவும் விலை மதிப்புள்ளது. தற்போதைய நிலையில் தந்தத்தால் செய்யப்பட்ட சிறு பொருட்கள் கூட ஆயிரக் கணக்கில் விற்கப்படுகின்றன. ஆனால் சுமார் 700 ஆண்டுகட்கு முன் திருவிடந்தை என்னும் கடற்கரை கிராமத்தில் யானைகளே இல்லாத பகுதியில் குடைந்து குடைந்து பல்லக்கு செய்யும் அளவிற்கு தந்தம் கிடைக்குமா என்பது சந்தேகம். அப்படிப்பட்ட இடத்தில் பெருமாளின் தசாவதாரங்கள் மற்றும் பூவேலைப்பாடுகளுடன் கூடிய பல்லக்கு ஒன்று பெருமாள் திருவீதி உலாவுக்காகச் செய்யப்பட்டு சுமீப காலம் வரை அதில் புறப்பாடும் நடந்துள்ளது. தற்போது அதன் தொன்மையும் அருமையும் கருதி புராதன கலைச் சின்னமாக பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இதே போல் தந்தத்தால் அமைந்த பல்லக்கு தமிழகத்தில் வேறு எங்கும் இல்லை.

94. அருள்மிகு நித்தியகல்யாணப் பெருமாள் திருக்கோயில் திருவிடந்தை

திருவாகிய இலக்குமியை தனது இடப்பக்கத்திலே எந்தையாகிய திருமால் கொண்டு விளங்குவதால், இறைவன் பெயரால் இவ்வூருக்கு 'திருவிட வெந்தை' என்ற பெயர் ஏற்பட்டு பிறகு மருவி 'திருவிடந்தை' என மாறியது. சென்னையிலிருந்து கோவளம் வழியாக மகாபலிபுரம் செல்லும் கிழக்கு கடற்கரைச் சாலையில் முட்டுக்காடுக்கு அருகிலுள்ள திருவிடந்தை தொல்பொருள் துறையாலும் மேற்பார்க்கப்படும் இத்திருக்கோயில் 108 திவ்ய தேசங்களுள் ஒன்று. மூலவர் பெயர் 'ஆதி வராகப் பெருமாள்' என்பதாகும். 'இடவெந்தை எந்தைபிரான்' என்பது பாடலில் குறிக்கப்பெறும்பெயராகும். திருமங்கையாழ்வார் 10 பாடல்களில் இவ்வூர் இறைவனைப் பாடியுள்ளார். உற்சவர் பெயர் 'நித்திய கல்யாண பெருமாள்' என்பதாகும்.

மூலவர் ஆதிவராகர், அகிலவல்லித்தாயார்

காலவ மகரிஷியின் 360 பெண்களையும் தினம் ஒருவராக மணம் செய்து கொண்டதால் 'நித்திய கல்யாணப் பெருமாள்' என்ற பெயர் வழங்கப்பட்டது. திருக்குளம் 'கல்யாண புஷ்கரணி' எனவும் தனிக்கோயில் தாயார் 'கோமள வல்லித்தாயார்' எனவும் 'பெருமாளுடன் உள்ளவள். அகில வல்லித் தாயார்' எனவும் அழைக்கப்படுகிறார். வைகானச ஆகமப்படி நான்கு கால பூஜை நடைபெறும் இத்திருக்கோயில் காலை 6 மணி முதல் 12 மணி வரையும் பிற்பகல் 3 மணி முதல் 8 மணி வரையும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். 7ம் நூற்றாண்டைச் சார்ந்த இத்திருக்கோயிலுக்கு கி.பி.1052ல் திருவிடந்தை

கோயில் பறவைப் பார்வையில்

முழுவதையும் இந்த பெருமாளுக்கு இறையிலி தானமாக ராஜேந்திர சோழன் அளித்ததைக் கல்வெட்டு குறிக்கின்றது. இத்திருக்கோயிலில் ஒவ்வொரு மாதமும் உத்திரட்டாதி, ரேவதி ஆகிய தினங்களில் மாதத் திருவிழாவும் சித்திரை மாதம் பத்துநாள் பிரம்மோற்சவமும் நடைபெறுகிறது. பிரம்மோற்சவத்தின் 7ம்நாள் சுமார் 2 கிலோமீட்டர் சுற்றளவு உடைய தேர்ப்பாதையில் ஒரு மணி நேரம் தேர் ஓடும். வைகாசி மாதம் மூன்று நாள் வசந்த உற்சவமும், ஆனி கருட சேவையும், ஆடி கஜேந்திர மோட்சமும், ஆவணி ஸ்ரீஜெயந்தியும், புரட்டாசி நவராத்திரி விஜய தசமியும் கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, மாசி மகம், பங்குனி உத்திரம், தாயார் திருக்கல்யாணம் ஆகியவையும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இத்திருக்கோயில், திருமணங்கள் நடைபெற வேண்டிக் கொள்ளும் பிரார்த்தனைத் தலமாக இருக்கிறது. திருக்கோயில் திருமண மண்டபம் ஒன்றும் உள்ளது. நித்ய கல்யாணப் பெருமாள் உற்சவர் திருமுகத்தில் ஆதிமுதல் இயற்கையாகவே இருந்து வரும் திருஷ்டிப் பொட்டு கண்டு வியக்கத்தக்கது. மகாபலிபுரம் செல்லும்போது தவறாது தரிசிக்க வேண்டிய அருள்மிகும் அழகிய அமைதித்தலம் இது. இங்குள்ள தந்தப் பல்லக்கு எங்குமில்லாத அதிசய கலைப்பொருள் ஆகும்.

95. அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில் திருப்போரூர்

முருகன், வன்மை, பொய்மைகளை உண்மையென்று எண்ணிய அசுரர்களை அழிக்க, விண்ணிலே போர்புரிந்த இடம் திருப்போரூர்.ஏறக்குறைய பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏழாவது முறையாக ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகளால் சீரமைக்கப்பட்டது.பனங்காடாகக் கிடந்த இப்பகுதியில் சுவாமிகளின் குருவான குமாரதேவர் வடிவில் முருகப்பெருமான் எழுந்தருளி (தற்போது இக்கோயில் மூலஸ்தானத்தில் காணும் மூர்த்தங்கள்) ஒரு பெண்பனைமரத்தடியின் கீழ் சுயம்பு மூர்த்தியாகக் கந்தப்பெருமான் காட்சியளிப்பதைக் காட்டி மறைந்தார்.

சிவபெருமான் மடியில் அமர்ந்து அவருக்கு பிரணவப் பொருளை உபதேசிக்கும் செப்புத் திருமேனியும், சக்கரஸ்தாபனமும் கோயில் முன் அமைந்துள்ள வட்ட மண்டபமும் எந்தக் கோயிலிலும் இல்லாத சிறப்பை அளிக்கிறது. இத்திருமடத்தில் சுவாமிகள் சமாதியின் மேல் பாணலிங்கம் அமைக்கப்பெற்று அருள்ஒளி விடுகிறது. இங்கு

ஏறு மயில் ஏறும்....

முத்துக் குமார சுவாமி – திருப்போரூர்

திருப்போரூர் போர் நடந்த இடம். அசுரர்களை எதிர்த்து போர் செய்த முருகன் போருக்குப் புறப்படுகிறார். அவரது வாகனமான மயில் வந்து நிற்கிறது. இடக்காலை பலமாக ஊன்றி வலக்காலைத் தூக்கி மயிலின் மீது வைத்து இடதுமுன் கரத்தில் வில்லும் வலதுமுன் கரத்தில் அம்பும் வைத்திருக்கும் பாவனையில் போருக்கும் புறப்படுகிறார். அவரது வாகனம் மயில். அவர் அமர்ந்து பயணம் செய்வதற்கு ஏற்றவாறு உடலை விரித்து, ஆணைக்காக கழுத்தை வளைத்துப் பார்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வளவு கலாரசனை உடைய விக்கிரகம் எங்கும் இல்லை. திருப்போரூர் சென்று திருப்பாத தரிசனம் செய்ய வருவீர்!

ஈசருடன் ஞானமொழி பேசும்....

உபதேச மூர்த்தி

பிரணவ மந்திரத்திற்குப் பொருளை சிவபெருமானுக்கு முருகன் உபதேசித்தத் தலம் சுவாமி மலை. சுவாமி மலையின் சுவாமி நாத சுவாமியின் திருவுருவம் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலில் அமைந்துள்ளது. சிவன் வீராசனத்தில் பத்ம பீடத்தில் வாய்பொத்தி அமர்ந்திருக்க, முருகன் பத்மபீடத்தின் மேல் மற்றொரு பத்மபீடத்தில் உபதேசம் செய்யும் வகையில் குருவாகி நிமிர்ந்த நிலையில் பிரணவ மந்திரத்தை உபதேசிக்கும் வகையில் அமர்ந்து இருக்கின்றார். இதைப்போல் விக்கிரகம் தமிழகத்தில் எங்கும் இல்லை. திருப்போரூர் சென்று உபதேசமூர்த்தியின் திருவடி வணங்கி வருவீர்!

பௌர்ணமி விழா பேரன்பர்களால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. பிரணவமே முருகப்பெருமானை பூஜித்த மலைவடிவில் அமைந்துள்ளது. இப்பிரணவ மலையின்மேல் அருள்மிகு பாலாம்பிகை சமேத கைலாசநாதர் அருளாட்சி புரிகின்றார்.



கருவறைக் காட்சி

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் காலை 6.00 மணி முதல் பகல் 12.30 வரை, மாலை 3.30 மணி முதல் இரவு 9.00 வரை. விநாயகர் பூஜை, காலைசந்தி அபிஷேகம், உச்சிகாலம் அபிஷேகம், சாயரட்சை அபிஷேகம், அர்த்தசாம அபிஷேகம் ஆகிய ஐந்து கால பூஜை நடைபெறும்.

எல்லா மாதங்களிலும் பரணி, கிருத்திகை விழாக்கள், சித்திரையில் வசந்த உற்சவம், ஆனியில் ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு அபிஷேகம், ஆடிக் கிருத்திகை, ஆவணியில் விநாயகர் சதுர்த்தி, புரட்டாசியில் நவராத்திரி விழா, ஐப்பசியில் மகா கந்த சஷ்டி, கார்த்திகை சோமவார வாரங்கள், கார்த்திகை தீபத் திருவிழா, மார்கழி திருவாதிரை, தைப்பொங்கல், தைப்பூசத் தெப்பத் திருவிழா, மாசி ஆண்டுப் பெருவிழா (பிரம்மோற்சவம்) தெப்பத் திருவிழா, பங்குனி உத்திர விழா, மாதக்கடைசி நாளில் படிஉற்சவம் ஆகியவை சிறப்பான உற்சவ நாட்கள் ஆகும். இங்கிருக்கும் உற்சவத் திருமேனிகள் கலைநயம் பொருந்தியவை ஆகும்.

தீர்த்தம் சரவணப்பொய்கை (வள்ளையார் ஓடை) ஆகும். தல விருட்சமாக வன்னி மரம் உள்ளது. சைவாகமம், காரண ஆகமப் பூஜைகள் நடைபெறுகின்றன. இத்தலத்தைப் பாடிப்புகழ்ந்தவர்கள் ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள், ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள், ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் மற்றும் பல அருளாளர்கள் ஆவர்.

தகவல் பலகை

நடராஜர் உருவம் 5 தொழில்களைக் குறிக்கும். உடுக்கை படைத்தலையும், அபயக்கரம் காத்தலையும், தீ அழித்தலையும், இடது பாதம் அருளலையும், வலது பாதம் மறைத்தலையும் சுட்டும்.

96. அருள்மிகு ஸ்தலசயனப் பெருமாள் திருக்கோயில்
மாமல்லபுரம்

மகாபலிபுரம் பேருந்து நிலையத்தின் அருகில் அமைந்திருப்பது அருள்மிகு 'ஸ்தலசயனப் பெருமாள்' திருக்கோயிலாகும். புண்டரீக மகரிஷி பெருமாளுக்குச் சார்த்த மலர் பறித்து வந்த போது திருக்குளத்தில் மலர்ந்திருந்த தாமரை மலரை இறைவனுக்குச் சூட்ட எண்ணினார். குளத்திலிருக்கும் கடல் நீரைத் தன் கைகளினால் இறைத்து மலரைப் பறித்துச் சூட்ட எண்ணினார். இறைவன் முதியவர் கோலத்தில் வந்து தான் நீரை இறைத்துக் கொண்டிருப்பதாகவும், ஊருக்குள் சென்று உணவு வாங்கி வருமாறும் வேண்டினார். முனிவர் ஊருக்குள் சென்றார். கடல்நீர் உள் வாங்கியது. வந்த முனிவர் முதியவரைக் காணாது தவித்த போது முனிவரை அழைக்கும் குரல் கேட்டது. குரல் வந்த திசைக்குச் சென்று பார்த்த போது திருமால் தரையில் படுத்திருந்தார். அவர் காலடியில் கரையில் வைத்து விட்டுச் சென்ற மலர்கள் இருந்தன. இறைவன் தலமாகிய தரையில் படுத்துக் காட்சித் தந்ததினால் 'ஸ்தல சயனம்' எனப் பெயர் வழங்கலாயிற்று. நாராயணன் தன் கரங்களால் கடல் நீரைத் தொட்டு இறைத்ததனால் இத்தலம் 'அர்த்தசேது' என்னும் புண்ணிய தீர்த்தத் தலமாகியது. பூதத்தாழ்வார் இக்கோயிலுக்கு எதிரில் உள்ள பூந்தோட்டத்தில் குருக்கத்தி மலரில் அவதாரம் செய்து அருளினார். திருமங்கையாழ்வார் 20 பாடல்களில் மங்களாசாசனம் செய்துள்ளார்.

பூதத்தாழ்வார்

திருக்கோயிலின் முன்புறம் கிழக்கு நோக்கிய இராஜகோபுரம் உள்ளது. மூலவர் கிழக்கு நோக்கியும் காட்சி தருகின்றார். 'கடல்மல்லை ஸ்தல சயனம்' என வழங்கப்படும். திருமால் உற்சவ விக்கிரகங்கள் எறும்பு புற்றுக்குள்ளிருந்து எடுக்கப் பெற்றவையாகும். அவருக்கு 'உலகுய்ய நின்றான்' என்ற சிறப்புப் பெயரும் உள்ளது. திருக்குளத்தின் பெயர் 'புண்டரீக புஷ்கரணி' ஆகும். தாயார் „நிலமங்கைத் தாயார்" என்ற சிறப்புப் பெயரோடு மங்களா சாசனம் செய்யப்பட்டுள்ளார்.

நான்கு காலங்கள் வைகானச ஆகம பூஜை நடைபெறும் இத்திருக்கோயிலில் காலை 9 முதல் 12 வரையும், மாலை 5 மணி முதல் 9 மணி வரையும் தரிசன நேரங்களாகும். சித்திரை மற்றும் ஐப்பசி மாதத்தில் அவதாரம் மற்றும் பிரம்மோற்சவத்தில் சுமார் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுடைய மாடவீதியில் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது. திருத்தேர் கிளம்பி நிலையை வந்தடைய சுமார் இரண்டு மணி நேரம் ஆகும்.

தாயார் சன்னதி தவிர ஆண்டாள், லட்சுமி நரசிம்மர், ராமர், சீதை, லட்சுமணர், பூதத்தாழ்வார், ஆழ்வார்கள், ஆச்சார்யர்கள் சன்னதி, கருடன், ஆஞ்சநேயர் சன்னதிகள் உள்ளன.

ஒவ்வொரு மாதமும் விசாகம், பெருமாள் திருநட்சத்திரமும், அவிட்டம் பூதத்தாழ்வார் திருநட்சத்திரமும் நடைபெறுகின்றது. சித்திரையில் பிரும்மோற்சவமும், ஆவணியில் கிருஷ்ண ஜெயந்தி மற்றும் உறியடி உற்சவமும், புரட்டாசியில் நவராத்திரி உற்சவமும், ஐப்பசியில் பூதத்தாழ்வார் அவதார உற்சவமும், திருக்கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, சங்கராந்தி, மாசி தெப்பம், பங்குனி உத்திரம் பத்து நாள் ஆகியவற்றுடன் மற்ற ஆழ்வார்கள், ஆச்சார்யர்கள் திருநட்சத்திரங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.



கடற்கரைக் கோயில்

மகாபலிபுரம் கடற்கரைக் கோயிலுக்கு மாற்றாக இதைக் கட்டியதாக ஒரு கருத்து உண்டு. அர்ச்சுனன் தபஸ் எனும் அரிய சிற்பத்தருகே மிக விரிந்த கோயிலாகக் கட்டுவதற்காக பின்புற மலை மீதே வாயிலமைத்தும் நின்று போன வேலையாக எண்ணுவது போல் இக்கோயில் அமைப்பு உள்ளது.

அன்ன வாகனம்

தங்க கருடன்

97. நெம்மேலி அருளாளர் ஆளவந்தார் நாயக்கர் அறக்கட்டளை மாமல்லபுரம்

ஆளவந்தார் நாயக்கர் என்பவர் பெருமாளின் பேரில் ஈடுபாடும், ஆழங்கால் பட்ட பக்தியும், பாகவத குணமும் நிறைந்தவர். தன் வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சரிய விரதம் கடைப்பிடித்து 1200 ஏக்கர் சொத்தினை ஈட்டி அதில் வரும் வருமானத்தை கொண்டு திருமலை திருப்பதி பிரும்மோற்சவ ததியாராதனையும், திருவிடந்தை அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் உற்சவமும், ததியாராதனையும், மாமல்லபுரம் அருள்மிகு தலஸயனப் பெருமாள் கோயிலில் உற்சவங்கள், கட்டளைகள் ஆகியவற்றை செய்து வர அறக்கட்டளை உருவாக்கி உயில் பதிவு செய்துள்ளார். அவரது திருவரசு மண்டபம் நெம்மேலி கிராமப் பேருந்து நிறுத்தத்தின் அருகில் உள்ளது. தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது. மாதாந்திர திருநட்சத்திரம் மற்றும் குரு பூஜை விழா நடைபெறுகிறது.

ஆயிரங்காணி தர்மம் செய்த ஆளவந்தார் நாயக்கர்

இக்கட்டளையால் நிர்வகிக்கப்படும் திருமண மண்டபத்திற்கும் தங்கும் அறைகளுக்கும் கட்டணம் குறைவு என்ற தகவல், பயணியர் அறிய வேண்டியது.

98. அருள்மிகு திருவரேஸ்வரர் திருக்கோயில் சதுரங்கப்பட்டினம்

செங்கற்பட்டிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சதுரங்கப்பட்டினம் வாயில் என்ற இடத்தில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் இறங்கினால் திருவரேஸ்வரர் திருக்கோயிலை அடையலாம். 'திரு அரசேஸ்வரர்' என்று வேறு பெயரும் இத்திருக்கோயிலுக்கு உள்ளது. திருச்சுற்றில் விநாயகர், சுப்பிரமணியர், நடராஜர், அம்மன் சன்னதிகள் உள்ளன. திருஅரசேஸ்வரர் சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அம்மன் 'திருவாட்டீஸ்வரி' என்ற பெயருடன் அழைக்கப்படுகிறார். தீர்த்தம் 'காரதீர்த்தம்' என அழைக்கப்படுகிறது.

காமிக ஆகம முறைப்படி மூன்று கால பூஜை நடைபெறும் இத்திருக்கோயில் காலை 6 மணி முதல் 11 மணி வரையும் மாலை 4 மணி முதல் 8 மணி வரையும் தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். ஆருத்ரா, சிவராத்திரியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திருக்கோயிலில் தனியாக திருமண மண்டபம் உள்ளது. திருக்கோயில் உட்பிரகாரத்தில் இடது புறம் ஆஞ்சநேயருடன், நவகிரகங்கள் அமைந்துள்ளது. வெளிப்பிரகாரத்தில் தட்சிணாமூர்த்திக்குத் தனி சன்னதியும், கால பைரவர் சன்னதியும் அமைந்திருப்பதும் சிறப்பு.

99. அருள்மிகு மலைமண்டலப் பெருமாள் திருக்கோயில் சதுரங்கப்பட்டினம்

செங்கல்பட்டிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சதுரங்கப்பட்டினத்தில் உள்ள 'அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்' இதன் உப கோயிலாகும். மலைமண்டலப் பெருமாளுக்கு, வரதராஜர், கிரிவரதர் என்னும் பெயர்களும் வழங்கப்படுகிறது. மலைமண்டலப் பெருமாள் கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறார். இத்திருக்கோயில் தாயாரின் பெயர் 'அருள்மிகு பெருந்தேவித் தாயார்' என்பதாகும். வைகானச ஆகம முறைப்படி மூன்று கால பூஜை நடக்கும் இத்திருக்கோயில் காலை 6 மணி முதல் 11 மணி வரையும் மாலை 4 மணி முதல் 8 மணி வரையும் பெருமாள், தாயார் சன்னதியுடன், ஆண்டாள், ஆழ்வார்கள், ஸ்ரீரங்கநாதர், கருடன், ஆஞ்சநேயர் ஆகியோரை தரிசனம் செய்யலாம்.

அருள்மிகு லஷ்மி நாராயணப் பெருமாள் பிரதானமாக இருந்து, மலை மண்டலப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவியுடன் கிடைக்கப் பெற்று, பிரதிஷ்டை செய்யப்பட்டதாகச் செவி வழிச் செய்திகள் கூறுகின்றன. அருள்மிகு லஷ்மி நாராயணப் பெருமாள் சுமார் 6 அடி உயரத்தில் நின்ற கோலத்தில் அருள் செய்கிறார். கருடாழ்வார் உடலை நாகம் சுற்றியிருக்கும் வகையில் அமைந்திருப்பதால் கருடனை வணங்கினால் நாகதோஷம் நீங்கும் என்பது ஐதீகம்.மலைமண்டலப் பெருமாள் திருக்கோயிலில் வைகுண்ட ஏகாதசி சிறப்பான நாளாகும்.

இங்குள்ள ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் சதுரங்கப்பட்டினம் கோட்டைக்குள் அமைந்துள்ளது. காஞ்சி ஏகாம்பரநாதர் திருக்கோயில் சென்று தரிசனம் செய்ய இயலாதவர்கள் இங்கு தரிசனம் செய்தால் முழுப் பலன் கிடைக்கும் என்பது இப்பகுதி மக்களின் நம்பிக்கை.

100. அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில் திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம் எனும் புனிதத்தலம் தமிழ்நாட்டில், செங்கல்பட்டிற்கு தென்கிழக்கே செங்கல்பட்டு கல்பாக்கம் மற்றும் செங்கல்பட்டு மாமல்லபுரம் நெடுஞ்சாலையில் 14வது கிலோமீட்டர் தொலைவில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. திருக்கழுக்குன்றத்திற்கு உருத்திரகோடி என்றும், நந்திபுரி என்றும், இந்திரபுரி என்றும், நாராயணபுரி என்றும், பிரமபுரி என்றும், தினகரபுரி என்றும், முனிகணபுரி என்றும், பட்சி தீர்த்தம் என்றும் பல பெயர்கள் உண்டு. தீர்த்தமாக சங்கு தீர்த்தமும், தல விருட்சமாகக் கதலி வாழைமரமும் உள்ள இத்திருக்கோயில் காமிக ஆகம பூஜை முறை கொண்டது. இங்குள்ள சங்கு தீர்த்தத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கு இயற்கையாக பிறக்கிறது. சங்குகள் கோயிலில் காட்சி பொருளாக உள்ளன.



வேதகிரி மலையும் கழுகுகளும்

சமயக் குரவர்கள் நால்வராலும் பாடல் பெற்ற தலம். பட்டினத்தார், அருணகிரிநாதர், திருப்போரூர் சிதம்பரம் சுவாமிகள், அந்தகக் கவி வீரராகவ முதலியார், இராமலிங்க அடிகளார், இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை, காஞ்சிபுரம் மகாவித்வான் சபாபதி முதலியார் ஆகியோராலும் பாடல் பெற்ற தலம். கடந்த ஓராயிரம் ஆண்டுக்கும் மேல் தினமும் இரு புனித கழுகுகள் திருமலைக்கு மேல் வந்து உணவருந்திச்செல்வது வழக்கம். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை, மார்க்கண்டேய முனிவர் தவம் செய்த சங்கு தீர்த்த திருக்குளத்தில், அவருக்காக தோன்றிய சங்கு தவறாது பிறந்து வருகிறது. திருமலைமேல் அருள்மிகு வேதகிரீஸ்வரரை இந்திரன் இடி அபிஷேகம் மூலம் பூசித்து வருகின்றார். சுர குரு மன்னன் இறைவனை வழிபட்டு சாமீப்பியபதம் பெற்றான். இத்தலம் திருமால், பிரம்மா வழிபட்ட தலமாகும். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை குரு கன்னியா இராசியில் பிரவேசிக்கும் திருநாளன்று இலட்சதீபப் பெருவிழா (புஷ்கர மேளா) நடைபெறுகின்றது. அருள்மிகு



திருக்கழுக்குன்ற சங்குதீர்த்தச் சங்குகள்

உவர் நீரிலே அதிக அளவில் உற்பவிப்பை சங்குகள். ஆனால் திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சங்கு தீர்த்தத்தில் தொடர்ந்து 12 ஆண்டுகட்கு ஒரு முறை நன்னீரில் தோன்றி இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் பொருளாகச் சங்கு பிறக்கிறது. 12 ஆண்டுகட்கு ஒருமுறை சங்கு தீர்த்தத்தில் நிறம் மாறும் சிறிய மாறுபாட்டைக் கண்டே மக்கள் குளிப்பது, துணி துவைப்பது போன்றவற்றை நிறுத்துவர். முதல் நாள் குளத்தின் அடியில் இருந்து தொடர்ந்து பல்லாயிரம் குமிழ்களாக வந்து கொண்டு இருக்கும். தொடர்ந்து குளத்தின் ஏதாவது ஒரு கரையில் சங்கு தோன்றி மலர்ந்து மிதக்கும். திருக்கோயிலில் இருந்துமேள தாளத்துடன் சென்று சங்கை எடுத்து வந்து திருக்கோயிலுக்குப் பயன்படுத்துவர். இவ்வாறு வந்த பல சங்குகள் பூஜைக்கும், பூஜைப் பொருளாகவும் திருக்கோயிலில் உள்ளன.

திரிபுரசுந்தரி அம்பாளுக்கு ஆண்டு முழுவதும் பாத அபிஷேகம் மட்டுமே. வருடத்தில் ஆடி மாதத்தில் உத்திரத்திலும், புரட்டாசியில் நவமியிலும், பங்குனியில் உத்திரத்திலும் ஆக மூன்று முறை மட்டுமே முழு மகாபிஷேகம் நடைபெறுகிறது. திருமலையில் சஞ்சீவிக் காற்று வீசுவதால், இம்மலையைத் தொடர்ந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) வலம் வந்தால் தீராத நோய்கள் யாவும் தீரும். மகப்பேறுகள் இல்லாதவர்க்கு மகப்பேறு உண்டாகும். இத்திருக்கோயில் ஏழாம் நூற்றாண்டில் அதாவது கி.பி.610 640ல் பல்லவ மன்னர்களில் புகழ்பெற்ற மகேந்திரவர்மப் பல்லவனால் கட்டப்பெற்றதாகும். கொடிய நோய் உள்ளவர்களும், மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்களும், திருமலையைச் சுற்றி ஒரு மண்டலத்திற்கு வலம் வந்தால், நோய்கள் தீர்ந்துவிடுவது இன்றளவும் நடந்து வருகின்றது. அதே போன்று மகப்பேறு இல்லாதவர்களும், ஒரு மண்டலம் திருமலையை சுற்றி வலம் வந்தால், மகப்பேறு உண்டாகும். அவ்வாறு பிறந்தவர்தான் சுவாமியின் பெயரான 'வேதாசலம்' என பெயர் வைத்து பின் 'மறைமலையடிகளார்' என மாற்றிக் கொண்ட அடிகளார் ஆவர்.



அருள்மிகு பக்தவத்சலேஸ்வரர் ஆலயத்தின்
பறவை கண் பார்வை

திருமலையின் அடிவாரத்தில், தாழக்கோயில் என வழங்கப்பெறும் தலத்தில் எழுந்தருளியுள்ள பக்தவச்சலேசுவரருடன் 'அருள்மிகு திரிபுரசுந்தரி' தன்னை நாடி வேண்டுபவர்க்கு வேண்டிய வரங்கள் வழங்கி அருள்பாலித்து வருகின்றார்.

101. அருள்மிகு ஞானபுரீஸ்வரர் திருக்கோயில் திருவடிசூலம்

திருக்கழுக்குன்றத் திருக்கோயிலின் உபகோயிலாக திருவடி சூலம் அருள்மிகு ஞானபுரீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள லிங்கம் மரகதலிங்கமாகும். இந்த லிங்கத்தைத் தேன் கொண்டு அபிஷேகம் செய்யும் போது பச்சை வண்ணம் வெளித் தெரியும். இது பாடல் பெற்ற திருக்கோயில்களில் ஒன்றாகும்.

ஒவ்வொரு வருடமும் சிவராத்திரி அபிஷேகம் கார்த்திகை தீபம், கார்த்திகை சோம வார அபிஷேகம் ஆகியவை கண்டு பலன் பெறத்தக்க திருவிழா நாட்களாகும். செங்கல்பட்டிலிருந்து திருப்போரூர் செல்லும் பாதையில் திருவடி சூலம் என்னும் பேருந்து நிறுத்தத்தில் இருந்து இடப்புறம் 500 அடி தொலைவில் திருக்கோயில் அமைந்துள்ளது. கோயிலின் இடப்புறம் திருக்குளம் அமைந்துள்ளது. தீர்த்தம் மதுர தீர்த்தம் எனப்படுகிறது. காலை 8 மணி முதல் 11 வரையும் மாலை 4 மணி முதல் 7 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

கௌதம ரிஷியும், சனத் குமாரரும் வழிபட்ட தலம். அம்பாள் பசுவாக வந்து பால் சொரிந்து வழிபட்ட இடம். பிரம்மாண்டீஸ்வரர், பிரம்மாண்டீஸ்வரி சன்னதி கொடிமரம் பலிபீடம் நந்தி, நால்வர் விநாயகர் சன்னதி, வள்ளி தெய்வானை, சுப்பிரமணியர் சன்னதி, பைரவர் சன்னதி உள்ளது. தல விருட்சம் பாதிரியாகும். அம்பாள் தெற்குநோக்கி நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். சுவாமி கிழக்கு நோக்கி தரிசனம் தருகிறார். இறைவன் ஞானபுரீஸ்வரர் என்கிற இடைச்சுரநாதர் எனவும், இறைவி கோபரத்னாம்பிகை என்னும் இமயமடக்கொடி எனவும் அழைக்கப்படுகின்றனர். மலைகளின் இடையில் கற்சுரத்தில் அமைந்திருப்பதால் திருயிடைச்சுரம் எனப்படுகிறது. ஞானசம்பந்தர் தான் பாடிய இத்தலத்துப் பதிகம் முழுவதிலும் சுவாமியின் வண்ணமாகிய அழகை புகழ்ந்து பாடியுள்ளார். திருவிடைச்சுரம் என்ற ஊர்ப் பெயர், மக்கள் வழக்கில் திருவடி சூலம் என மருவி விட்டதாக கூறுவர்.

பொன்விளைந்த களத்தூர்
102. அருள்மிகு கோதண்டராம சுவாமி திருக்கோயில்

செங்கற்பட்டிலிருந்து தெற்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிற்றூர். அருள்மிகு கோதாண்டராம சுவாமி திருக்கோயில் மூலவர் பட்டாபிராமர் பட்டாபிஷேகக் கோலத்தில் சீதாப்பிராட்டியை இடது மடியில் வைத்துக் கொண்டு அமர்ந்த திருக்கோலத்திலும் வலதுபுறம் இலக்குவனுடனும் சேவை சாதிக்கிறார். மற்றொரு மூலவர் ஸ்ரீனிவாசர் சுமார் 6 அடி உயரம் உடையவராக காட்சி தருகிறார். தர்ப்பசயன சேதுராமர் சன்னதி தரிசிக்க தகுந்தது. இருகால பூசை நடைபெறும். ராமரை அமர்ந்த மற்றும் கிடந்த கோலங்களில் இத்திருக்கோயிலில் மட்டுமே காணலாம். மாதபுனர்வசு, திருவோணத்தில் திருமஞ்சனம் நடைபெறுகிறது. தமிழ் வருடபிறப்பு தட்சிணாயன, உத்தராயன, புண்ணிய காலங்கள் தீபாவளி, திருக்கார்த்திகை, வைகுண்ட ஏகாதசி ஆகியவை முக்கிய நாட்களாகும்.

103. அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில்

பொன்விளைந்த களத்தூரில் ராமர் கோயில் அடுத்து அமைந்துள்ளது இக்கோயிலாகும்.

செல்வத்திற்கு அதிபதி இலக்குமி, காக்கும் கடவுளாகிய திருமாலுடன் இணைந்து காட்சி தந்ததால் செழிப்பு மிகுந்து வயலெல்லாம் நெல் விளைவதற்கு பதிலாக பொன்னாக விளைந்ததாகவும், பொன்னை தாளடித்த பொழுது பொன் துகள்கள் பதராக விழுந்த ஊர் பொன்பதர்கூடம் எனவும், அந்த பொன்னை கொண்டு சென்று மாற்றிய ஊர் பொன்மாறி, பொன்மார் என வந்ததாகவும் கூறுவர். காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலும் தரிசனம் செய்யலாம்.

சோழ அரசர்களால் கட்டப்பட்ட இத்திருக்கோயிலில் தவனஉற்சவம், பரிவேட்டை உற்சவம், பிரம்மோற்சவம் போன்றவை மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

104. அருள்மிகு முன்குடுமீஸ்வரர் திருக்கோயில்

பொன்விளைந்த களத்தூரில் அமைந்துள்ளது இக்கோயிலாகும்.

அருள்மிகு மீனாட்சியம்மன் உடனுறை அருள்மிகு முன்குடுமீஸ்வரர் திருக்கோயில் பொன்விளைந்த களத்தூரில் திருக்கழுக்குன்றம் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. கஜபிருஷ்ட அமைப்பு விமானம் உடைய இத்திருக்கோயில் ராஜராஜசோழன் காலத்தில் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

சோழ அரசர் காலத்தில் பூசை செய்து அந்த பிரசாதத்தை மன்னரிடம் கொடுப்பது அர்ச்சகர் வழக்கம். அவ்வாறு பிரசாதம் கொடுத்த ஒரு நாள் சாற்றிய மாலையில் நீள் முடி இருந்தது. இறைவனுக்கு சாற்றிய மாலையில் தலைமுடி வந்த காரணத்தை மன்னர் கேட்டார். பதற்றத்தில் அர்ச்சகர் சுவாமிக்கு குடுமி உள்ளது என்றார். அரசன் மறுநாள் காலை குடுமி உள்ள இறைவனை தரிசிக்க வருவதாகக் கூறவே மன்னனிடம் பொய் சொல்லிய காரணத்தால் பயந்து இறைவனை வேண்டினார். மறுநாள் காலை இறை தரிசனத்திற்கு மன்னர் வந்த பொழுது இறைவன் முன்குடுமியுடன் காட்சி தந்தார். அது முதல் இத்திருக்கோயில் இறைவனுக்கு முன் குடுமீஸ்வரர் என்கிற அபிமுக சிகாநாதர் என்ற பெயர் வழங்கப்படுகிறது. காலை 8 மணி முதல் 10 மணி வரையும் மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் தரிசனம் செய்யலாம்.

63 நாயன்மார்களில் கூற்றுவ நாயனார் என்னும் நாயனார் அவதரித்த தலமாதலால் அவருக்கென தனி உற்சவ விக்ரகம் உண்டு.

இத்திருக்கோயில் இந்திய தொல்பொருள் ஆய்வு துறையால் பழம்பெரும் கலைச் சின்னமாக பராமரிக்கப்பட்டு வந்தாலும் தமிழக அரசின் 'ஒரு கால பூசை' திட்டத்தின் கீழ் ஒரு கால பூசை நடைபெறுகிறது.

இத்திருக்கோயிலில் பிரதோஷம், பௌர்ணமி, பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆடிப்பூரம், கந்தசஷ்டி, கார்த்திகை சோமவாரம், கார்த்திகை தீபம், மஹாசிவராத்திரி, தைப் பூசம், பங்குனி உத்ரம், சித்ரா பௌர்ணமி ஆகிய விசேஷ நாட்களில் சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றது.

கல்வெட்டுக்கள், கோயிலின் தூண்கள், மண்டபங்கள், சிற்பங்கள் ஆகியவற்றால் அழகுக்கும் தொன்மைக்கும் சிறப்புப் பெற்று விளங்கும் திருக்கோயிலாகும்.

கூற்றுவ நாயனார், நளவெண்பா பாடிய புகழேந்தி புலவர், அந்தகக்கவி வீரராகவ முதலியார், படிக்காசுத் தம்பிரான், ஆகியோர் பிறந்த ஊராகும்.

105. அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் திருமலை வையாவூர்.

செங்கல்பட்டு மதுராந்தகம் சாலையில் மதுராந்தகத்துக்கு முன்பாகவே அருகிலுள்ள திருமலை வையாவூர் தலத்தில் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் மலை மீது நின்று வருவோருக்கு வரமளிக்கிறார்.



மலைக்கோயில் தோற்றம்

தாம்பரத்திலிருந்து வேடந்தாங்கல் செல்லும் பேருந்தின் மூலம் இத்திருக்கோயிலுக்குச் செல்லலாம். அன்னை அலமேலு மங்கைத் தாயாரும் தனி சன்னதியிலிருந்து அருள்பாலிக்கிறார். பிரார்த்தனைத் தலமாக விளங்கும் இத்தலத்தில் முடியிறக்குதல், அங்கப்பிரதட்சிணம் செய்தல் ஆகிய பிரார்த்தனைகள் பெருமளவில் நிறைவேற்றப்படுகின்றன. இத்திருக்கோயிலில் வைகானச ஆகம வழிபாடு பின்பற்றப்படுகிறது. காலை, உச்சிக் காலம், சாயரட்சை

ராஜா தோடர்மால் – திருமலைவையாவூர்

அனைத்து வகையான அதிகாரங்களும் தன் வசம் வைத்திருந்தாலும், அகில உலகையும் காக்கும் மன்னனும் ஆண்டவன் அருளுக்கு முன்னால் தலைகுனிந்தே ஆகவேண்டும். விஜய நகர சாம்ராஜ்யத்தின் ராஜாதோடர்மால் திருமலைவையாவூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாளின் மீது ஆறாத பக்தி பூண்டவன். அவன் இத்திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளதாகக் அறியமுடிகிறது. தான் இருந்தாலும் இல்லாவிடினும் தன் நினைவாகத் தன் உருவம் இறைவனை வணங்கும் வகையில் தனது உருவத்தை விக்கிரகமாக பிரதிஷ்டை செய்து இருக்கிறான். தோடர்மால் திருவுருவம் விக்கிரகமாக இங்கு தவிர வேறு எங்கும் இருப்பதாக தகவல் இல்லை.

ஆகிய மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. காலை 8 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் 7 வரையும் தரிசிக்கலாம். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான சமுதாயக்கூடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உள்ளது. மலை மீது அமைந்திருக்கும் இவ்வாலயத்தின் சுற்றுக்கோயில்களாக மலை அடிவாரத்தில் அருள்மிகு வீர ஆஞ்சனேயர் சன்னதியும், உச்சிஷ்ட மகாகணபதி சன்னதியும், படிக்கட்டின் துவக்கத்தில் ஆஞ்சனேயர் சன்னதியும், மலைமேல் பிரகாரத்தில் அருள்மிகு வராகர் சன்னதி, கண்ணன் சன்னதி, இராமர் சன்னதி, பன்னிரு ஆழ்வார் சன்னதி ஆகியவையும் அமைந்துள்ளன. இத்திருக்கோயிலில் மாத சிரவணதீபம், அமாவாசை, பௌர்ணமி, மூல நட்சத்திரம் ஆகிய நாட்களில் சிறப்புப் பூசைகளும், ஆண்டுதோறும் சித்திரை மாதப் புத்தாண்டு தினத்தன்று இலட்ச தீப விழாவும், பிரம்மோற்சவமும் விமரிசையாக நடைபெறுகின்றன. புரட்டாசி மாதம் நவராத்திரி பெருவிழாவானது பிரம்மோற்சவமாகக் கொண்டாடப்பட்டு ஏழாம் நாள் மலையின் பிரகாரத்தில் தேரோட்டம் நடத்தப்படுகிறது. ஸ்ரீஜெயந்தி, புரட்டாசி மாத சனிக்கிழமைகள், திருக்கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, ஆங்கிலப் புத்தாண்டு, பொங்கல் பரிவேட்டை உற்சவம், குலசேகர ஆழ்வார் சாற்று முறை, இரத சப்தமி உற்சவம், தைப்பூசத்தன்று நடைபெறும் தெப்பத் திருவிழா, பங்குனி உத்திரம் ஆகியவை இத்திருக்கோயிலில் நடைபெறும் முக்கிய உற்சவங்களாகும்.

ஒவ்வொரு ஆண்டும் சென்னையிலிருந்து பக்தர்கள் பல்லாயிரம் பேர் பாத யாத்திரையாக வந்து திருப்பதி போன்று திருக்குடைகள் சமர்ப்பிக்கும் வழக்கம் உண்டு. ஆதிவராக மூர்த்தி சன்னதி மிகப் பழைய ஒன்று என்பதும், இதன் முன்பே பலிபீடம் கொடிமரம் இருப்பதால் ஆயிரமாண்டுக்கு முன்பே இத்திருக்கோயில் பெருமைமிக்க கோயிலாகத் திகழ்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மலைப்பாதை நுழைவுவாயில்

106. ஏரிகாத்த ராமர் என்னும் அருள்மிகு கோதண்ட ராமர் திருக்கோயில் மதுராந்தகம்

சென்னையிலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் மதுராந்தகம் நகரில் தெற்கு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மூலவர் கோதண்டராமர் எனும் திருநாமம் பெற்றவர். ஸ்ரீதேவியும் ராமனும் திருக்கைக் கோர்த்து நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கி நின்று சேவை சாதிக்கின்றார்.



திருக்கோயிலின் முகப்புத் தோற்றம் திருக்குளத்துடன்

உற்சவர் பெயர் ஸ்ரீ கருணாகரப் பெருமாள் என்பதாகும், தாயாரின்பெயர் ஸ்ரீஜனகவல்லித்தாயார். புஷ்பகவிமானத்தில் கிளியாற்றங்கரையில் மகிழ மரத் தலவிருட்சமும், ஸ்ரீராம பாத தீர்த்தம் என்னும், தீர்த்தமும் உள்ளது. பாஞ்சராத்திர ஆகம பூஜை நடைபெறுகிறது. கிழக்கு நோக்கிய ராஜகோபுரம் உள்ளது, இத்திருக்கோயிலில் திருமழிசை ஆழ்வார் சித்தி பெற்றார். ராமானுஜருக்கு பஞ்ச சமஸ்காரங்கள் நடந்த இடம். பெரிய நம்பி பூஜை செய்த இடம். ஆங்கிலேய கலெக்டர் வியோனல் பிளேசுதுரை என்பவர் காலத்தில் ஏரி உடையாமல் காக்கப்பட்டதால் அவரால் தாயார் சன்னதி கட்டிக் கொடுக்கப்பட்டது, இதற்குக் கல்வெட்டு ஆதாரம் உள்ளது. வடுகநம்பி, திருவரங்கப் பெருமாள் அரையர், தேசிகர் மற்றும் மணவாள மாமுனிகள் ஆகியோர் வழிபட்ட திருத்தலம்.

ஆறுகால பூஜைகள் நடைபெறும் இத்திருக்கோயிலில் காலை 7.30 மணி முதல் 11.30 மணி வரையிலும், 4.30 மணி முதல் 8.30 மணி வரையிலும் தரிசனம் செய்யலாம். இத்திருக்கோயிலில் மூலவர் கருணாகரப் பெருமாள் சன்னதி தவிர சக்கரத்தாழ்வார், தேசிகர், தாயார், ஆண்டாள், உடையவர், லஷ்மி நரசிம்மர், குளக்கரை ஆஞ்சநேயர் ஆகிய சன்னதிகள் உள்ளன.

ஒவ்வொரு வாரமும், வெள்ளிக் கிழமை, மாதப்பிறப்பு, அமாவாசை, ஏகாதசி, திருவோணம், பௌர்ணமி, ஆகிய நாட்களில் பஞ்சபர்வ திருமஞ்சனப் புறப்பாடும், ஸ்ரீ ராம நவமியும். ஆவணியில் 10 நாள் பிரம்ம உற்சவமும் சிறப்பாக நடைபெறும் உற்சவங்களாகும்.

பல கல்வெட்டுகள் உள்ள இத்திருக்கோயிலில் ஸ்ரீ ராம நவமி அன்று பிரம்ம உற்சவத்தில் ஏழாம் நாள் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது. ஆங்கிலேயருக்கு கலியுகத்தில் ஏரி உடையாது காத்து ராமலட்சுமணர் காட்சியளித்த முக்கியத்துவம் வியத்தகு ஒன்று! மதுராந்தக ஏரிக்கரையின் கீழ் உள்ள இக்கோயிலுக்குச் செல்லாமல் ஏரிக்கரையின் புறவழிச் சாலையில் போக்குவரத்து செல்வதால் கோயிலுக்குச் செல்லுவோர் ஆர்வம் குறைந்து விடுவதில்லை. ஆலயத்தின் எதிரே அகோபில மடமும் வேதபாடசாலையும் அமைந்து வைணவ புகழ் பரப்பி வருகின்றன.

107. அருள்மிகு வெண்காட்டீஸ்வரர் திருக்கோயில் கடப்பேரி, மதுராந்தகம்

மதுராந்தகம் ஊரின் உட்புறம் கிழக்கே அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சி அம்மை உடனுறை அருள்மிகு வெண்காட்டீஸ்வரர் திருக்கோயில் கிழக்கு நோக்கிய கோபுர வாயிலுடன், கிழக்கு நோக்கிய சன்னதியில் இருந்து வெண்காட்டீஸ்வரர் அருளுகிறார், இது புராணத் தலம், பிரார்த்தனைத் தலமாகவும் இருக்கிறது. சரும நோய்க்காரர்கள் திருக்குளத்தில் மூழ்கி எழுந்து நோய் தீர்ந்ததாக வரலாறு தெரிவிக்கிறது. தீர்த்தத்தின் பெயர் விடாக தீர்த்தம் என்பதாகும்.



திருக்கோயிலின் முகப்புத் தோற்றம்

காரண ஆகமப்படி நான்கு கால பூஜைகள் நடைபெறுகிறது. திருக்கோயில் காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரையும், மாலை 6 மணி முதல் 8 மணி வரையும் சேவார்த்திகள் தரிசனத்திற்காகத் திறந்திருக்கின்றது. மீனாட்சி அம்மை சன்னதி தவிர நவக்கிரக சன்னதியும் அமைந்துள்ளது.

சுமார் 900 ஆண்டுகட்கு முன்னர் கட்டப்பட்டதாக கூறப்படும் இத்திருக்கோயிலில் பிரதோஷம், சுக்ரவாரம் ஆகியவற்றுடன் மாத கிருத்திகை, அமாவாசை, சதுர்த்தி ஆகியவையும் தமிழ் வருடப்பிறப்பு, ஆனித் திருமஞ்சனம், புரட்டாசி நவராத்திரி, ஐப்பசி அன்னாபிஷேகம், கார்த்திகை 'தீபம், தனுர் மாதம் சங்கராந்தி, பங்குனி உத்திரம் ஆகியவையும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

108. அருள்மிகு ஆட்சீஸ்வரர் திருக்கோயில் அச்சிறுபாக்கம்

காஞ்சிபுர மாவட்டத்தில் திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் மதுராந்தகம் திண்டிவனத்திற்கு நடுவே அமைந்துள்ளது அச்சிறுபாக்கம். இங்குள்ள அருள்மிகு ஆட்சீஸ்வரர் திருக்கோயில் இரு சுற்றுப் பிரகாரங்களைக் கொண்டது. சிவன் திருமணக் கோலத்தில் அகத்திய முனிவருக்கு காட்சி தந்த 17 தலங்களில் இதுவும் ஒன்று. திருஞானசம்பந்தர் மாணிக்கவாசகர், ராமலிங்க சுவாமிகள் பாடியுள்ளனர். அக்காலத்தில் தாரகன், கமலாட்சகன், வித்யுன்மாலி ஆகியோர், முனிவர்களுக்கும், தேவர்கட்கும் கொடுமை இழைக்க, அவர்களைக் காப்பாற்ற சிவபெருமான் தேரில் ஏறினார். சிவபெருமான் விநாயகரை அழைக்காததால் சீற்றம் அடைந்த அவர் சிவனின் தேர் அச்சை உடைத்தார். அச்சு இற்றதால் அச்சை இற்ற பாக்கம் அதுவே அச்சிறுபாக்கம் எனலாயிற்று.



மூலவர் சுயம்பு லிங்கம்

ஆலய தல விருட்சம் கொன்றை, அதன்கீழ் சிவன் பார்வதி ஆகியோர் வழிபடும் நிலையில் திரி நேத்திரதாரி. முனிவர் நந்தி தேவரோடு காட்சி தருகின்றனர். இங்கு மூலவர் உடையாட்சீஸ்வரர், மற்றும் எமையாட்சீஸ்வரர் எனத் தனித்தனியே இரு கருவறை உள்ளது முக்கியத்துவமாகும். இளங்கிளியம்மை மற்றும் மெல்லியலாள் என்பவை அம்மனின் பெயர்களாகும். இக்கோயிலின் உள்ளே விநாயகர், சிவலிங்கம், ஆஞ்சநேயர், நால்வர், அறுபத்து மூவர், தொகையடியார்கள், சேக்கிழார், சரஸ்வதி, லட்சுமி, பழனியாண்டவர், ஆறுமுக சுவாமி ஆகியோர் சன்னதிகள்

தனித்தனியே உள்ளது. அய்யப்பன், மகா விஷ்ணு, பிரம்மா, துர்கா, சண்டிகேஸ்வரர் ஆகியோர் உள்ளனர். இக்கோயிலின் ராஜகோபுரம் ஐந்து நிலை கொண்டது. இத்திருக்கோயிலில் சிவாகம முறைப்படி நான்கு கால பூஜைகள் நடைபெற்று வருகிறது. திருவிழாக்கள் சித்திரையில் 10 நாள் பிரம்ம உற்சவம் மற்றும் பஞ்சபர்வாதி உற்சவங்கள் நடைபெற்று வருகிறது.

தகவல் பலகை

சமண தீர்த்தங்கரர்களின் பெயர்கள்

1. ஆதிநாதர் என்னும் விருஷப தேவர்
2. அஜித நாதர்
3. சம்பவ நாதர்
4. அபிநந்தனர்
5. சுமதி நாதர்
6. பத்ம பிரபா நாதர்
7. சுபார்சவ நாதர்
8. சந்திரப் பிரபா நாதர்
9. புஷ்ப தந்தர்
10. சீதள நாதர்
11. ஸ்ரேயம்ஸ நாதர்
12. வாசு பூஜ்யர்
13. விமல நாதர்
14. அனந்த நாதர்
15. தரும நாதர்
16. சாந்தி நாதர்
17. குந்து நாதர்
18. அர நாதர்
19. மல்லி நாதர்
20. முனிசு விரதநாதர்
21. நமி நாதர்
22. நேமிநாதர்
23. பார்சுவ நாதர்
24. வர்த்தமான மகாவீரர்

இப்பிரிவில் உள்ள மங்களாசாசனம் பெற்ற தலங்கள்

1. திருப்பாடகம்
2. திருஊரகம்
3. திருக்காரகம்
4. திருநீரகம்
5. திருக்கார்வானம்
6. திருக்கள்வனூர்
7. திருப்பரமேச்சுர விண்ணகரம்
8. திருநிலாத் திங்கள் துண்டம்
9. திருப்பவளவண்ணம்
10. திருக்கச்சி (அத்திகிரி)
11. திருஅட்டபுயங்கரம்
12. திருத்தண்கா
13. திருவேளுக்கை
14. திருவெஃகா
15. திருப்புட்குழி
16. திருநின்றவூர்
17. திருக்கடல்மல்லை
18. திருவிடவெந்தை

இப்பிரிவில் உள்ள பாடல் பெற்ற தலங்கள்

1. திருக்கச்சி ஏகம்பம்
2. திருக்கச்சி மேற்றளி
3. ஓணகாந்தன் தளி
4. கச்சி அனேக தங்காவதம்
5. கச்சி நெறிக் காரைக்காடு
6. மாகறல்
7. திருவாலங்காடு
8. திருப்பாசூர்
9. திருக்கள்ளில்
10. திருவேற்காடு
11. திருக்கச்சூர்
12. திருக்கழுக்குன்றம்
13. அச்சிறுப்பாக்கம்
14. திருஇடைச்சுரம்

தகவல் பலகை

தட்சிணாமூர்த்தியின் சின் முத்திரையில் பெருவிரல் இறைவனையும், சுட்டு விரல் ஆன்மாவையும், மற்ற மூன்று விரல்களும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் சுட்டும்.

இப்பிரிவில்
அவதரித்த ஆழ்வார்கள், ஆசாரியார்கள், நாயன்மார்கள்

திருவெஃகா	–	பொய்கையாழ்வார்
கடல்மல்லை	–	பூதத்தாழ்வார்
திருப்பெரும்புதூர்	–	ஸ்ரீராமானுஜர்
காஞ்சிதூப்புல்	–	வேதாந்த தேசிகர்
பூவிருந்தவல்லி	–	திருக்கச்சிநம்பிகள்
மதுரமங்கலம்	–	எம்பார்
பேட்டை	–	முதலியாண்டான்
கூரம்	–	கூரத்தாழ்வார்
திருமழிசை	–	திருமழிசையாழ்வார்
காஞ்சிபுரம்	–	திருக்குறிப்பு தொண்டர்
காஞ்சிபுரம்	–	சாக்கிய நாயனார்
காஞ்சிபுரம்	–	ஐயடிகள் காடவர்கோன்
திருநின்றவூர்	–	பூசலார் நாயனார்
குன்றத்தூர்	–	சேக்கிழார்
பொன்விளைந்த களத்தூர்	–	கூற்றுவ நாயனார்
திருவேற்காடு	–	மூர்க்கநாயனார்

தகவல் பலகை

மனித உடம்பில் பாதம் கோபுரத்தையும், முழங்கால் ஆஸ்தான மண்டபத்தையும், துடை நிருத்த மண்டபத்தையும், தொப்புள் பலிபீடத்தையும், மார்பு மகாமண்டபத்தையும், கழுத்து அர்த்தமண்டபத்தையும், சிரம் கருவறையையும், வலது செவி தட்சிணாமூர்த்தியையும், இடது செவி சண்டிகேஸ்வரரையும், மார்பு நடராசரையும், கழுத்து நந்தியையும், வாய் ஸ்தபன மண்டப வாயிலையும், மூக்கு ஸ்நபன மண்டபத்தையும் புருவமத்தி லிங்கத்தையும், தலை விமானத்தையும் ஒக்கும் என்பர்.

இப்பிரிவில் உள்ள சில திருமடங்கள்

காஞ்சி காமகோடி பீடம்	–	காஞ்சி
தொண்டை மண்டல ஆதீனம்	–	காஞ்சி
இராம கிருஷ்ணர் மடம்	–	காஞ்சி
சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீசாரதா பீடம்	–	காஞ்சி
திருவாவடுதுறை ஆதினக்கிளை மடம்	–	காஞ்சி
உபநிஷத் மடம்	–	காஞ்சி
இராமானுஜ மடம்	–	காஞ்சி ஸ்ரீபெரும்புதூர்
மலையாள மாமுனிவர் மடம்	–	ஸ்ரீபெரும்புதூர்
வாதிகேசரி அழகியமணவாள ஜீயர் மடம்	–	காஞ்சி
முதலியாண்டான் திருமாளிகை	–	காஞ்சி
பிரதிவாதி பயங்கரம் அண்ணா மடம்	–	காஞ்சி
நம்பிள்ளை மடம்	–	காஞ்சி
திருமலை திருப்பதி பெரிய ஜீயர் மடம்	–	திருநின்றவூர்
அப்பர் சுவாமி மடம்	–	பிள்ளையார் பாளையம், காஞ்சி
வானமாமலை ஜீயர் மடம்	–	சின்ன காஞ்சிபுரம்
பைராகி மடம்	–	சின்ன காஞ்சிபுரம்
அஹோபில ஜீயர் மடம்	–	சின்ன காஞ்சிபுரம்
பரகால மடம்	–	சின்ன காஞ்சிபுரம்
நம்பிள்ளை மடம்	–	சின்ன காஞ்சிபுரம்
ஜைனர் மடம்	–	சின்ன காஞ்சிபுரம்
உதாசீன் பாவாஜி மடம்	–	காஞ்சிபுரம்
சிதம்பர சுவாமிகள் மடம்	–	திருப்போரூர்

காஞ்சிபுராணத்தில் இடம் பெற்றுள்ள திருத்தலங்கள்

ஏகாம்பர நாதர் திருக்கோவிலில் அமைந்துள்ளவை

1. அகத்தியேஸ்வரம்
2. ரிஷபேசம்
3. வாலீசம்
4. விண்டுவீசம்
5. லிங்கபேசம்
6. கச்சிமயானம்
7. மத்தளமாதேசம்
8. மார்கண்டேசம்
9. கள்ளக்கம்பர்
10. வெள்ளைக்கம்பர்
11. நல்லக்கம்பர்
12. விகடசக்கர விநாயகர்

சர்வ தீர்த்தக் கரையருகில் உள்ளவை

13. இரண்யேசம்
14. விசுவநாதேசம்
15. லவகுளீசம்
16. கங்காவரேஸ்வரம்
17. காமேஸ்வரம்
18. தீர்த்தேஸ்வரம்
19. மல்லிகார்ஜுனர் [ராமேசம், லட்சுமீசம்]
20. அனந்தபத்மநாபேசம் – லிங்கப்பையர் தெரு
21. ராமநாதேசம் – சாலைத்தெரு முனையில்
22. அமரேஸ்வரம் – மேற்கு ராஜவீதி
23. மாசாத்தன் தளி – மேற்கு ராஜவீதி

குமரக் கோட்டத்தினுள் அமைந்தவை

24. உருகுமுள்ளப் பெருமாள்
25. தேவசேனாபதீசம்
26. ஐராவதேசம் – கச்சபேசத்திற்கு எதிரில்
27. இஷ்டசித்தீசம் – கச்சபேசத்திற்குள்
28. கண்ணேசம் – செங்கழுநீரோடை வீதி
29. கௌசிகீசம் – காமாட்சி திருமணமண்டபம் அருகில்
30. மாகாளேசம் – ஆதிபீடாபரமேஸ்வரி திருக்கோயில் அருகில்
31. கடகேஸ்வரர் – கம்மாளத் தெரு
32. கங்கணேசம் [பாதாளீஸ்வரர்] – கடகேஸ்வரர் கோயில் எதிர் சந்தில்

33. பிறவாத்தானம் — கம்மாளத்தெரு சாலைக்குக் கிழக்கில்
34. இறவாத்தானம் — கம்மாளத்தெரு சாலைக்குக் மேற்கில்
35. முத்தீசம் — பிறவாத் தானத்திற்கு முன்புறம்
36. மங்களேசம் — சங்கர மடம் எதிர் குளக்கரை
37. மச்சேசம் — கிழக்கு ராஜ வீதி
38. மகாலிங்கேசம் — பெரிய காஞ்சிபுரம் அப்பாராவ் தெரு
39. வீரட்டகாசம் — ”
40. அரிசாபயந்தீர்த்த ஈஸ்வரர் — நெல்லுக்காரத் தெரு
41. அபிராமேஸ்வரர் — சங்குபாணி விநாயகர் கோயில் அருகில்
42. பூத நிக்ரகப்பெருமாள் — காமாட்சி அம்மன் கோவிலுள்
43. சௌனகேசம் — புத்தேரித் தெருவின் தானப்பன் தெரு
44. வீரராகவேசம் — புத்தேரித் தெருவின்தெற்குவாடை பின்புறம் கழனிக்கு அருகில்
45. லட்சுமனேசம் — புத்தேரித்தெருவின் தெற்குவாடை பின்புறம் கழனிக்கு அருகில்
46. மண்டலேஸ்வரர் — ஆழ்வார் பங்களா எதிரில்
47. மாண்டகன்னீசம் — ஒக்கப்பிறந்தான் குளம் அருகில்
48. வன்னிசம் — ஒக்கப்பிறந்தான் குளம் அருகில்
49. கற்கீசம் — பிள்ளையார் பாளையம் கிருஷ்ணன்தெரு வயல்வெளியில்
50. லட்சுமீசம் — பிள்ளையார் பாளையம் கிருஷ்ணன் தெரு வயல் வெளியில்
51. வன்மீகநாதர் — சாலாபோகம் பகுதியின் கடைசியில் உள்ள வயல் வெளியில்
52. திருஞானசம்பந்தர் கோயில் — திருமேற்றளி கோயிலுக்கு நேரெதிரில்
53. பலபத்திர ராமேசம் — திருமேற்றளி கோயிலுக்கு அருகில்
54. தக்கேசம் — மேல்பிள்ளையார் பாளையம் கச்சியப்பன் தெருவில்

55. வளரேசம்[எ] சோளீஸ்வரர் – தக்கேசம் கோயிலின் அடுத்த தெருவில்
56. விஷ்வத்சேனம் – சோளீஸ்வரர் கோயிலினுள் தனி சன்னதி
57. எமதருமலிங்கேஸ்வரர் – காயாரோகணம் தாயார் குளக்கரையில்
58. ஆதிபிதேசம் – ஆலடிப் பிள்ளையார் கோயில் தெரு
59. கௌதமேசம் – உத்திரமேரூர் பாதையில் வேகவதிப் பாலம் தாண்டி இடப்புறம்
60. பார்க்கவேசம் – சீனிவாசா திரையரங்கு அடுத்த சாலையில்
61. சித்தீசம் – KPK ரத்னாபாய் திருமணமண்டபம் அருகில்
62. மதங்கீஸ்வரர் – ஆஸ்பத்திரி சாலையில்
63. ரோமேசரேசம் – மாமல்லன் நகரில்
64. பாண்டவேசம் – ரயில்வே சாலை கோட்டத் கொல்லை சுப்பராயன் தெருவில்
65. சாந்தாலீஸ்வரர் – சின்னக்காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி அருகில்
66. வசிட்டேசம் – ”
67. அத்திரீசம் – ”
68. குச்சேசம் – ”
69. காஸ்யபேசம் – ”
70. அங்கீரசம் – ”
71. மணிகண்டீசம் – சின்னக்காஞ்சிபுரம் அர்பன் பாங்க் எதிரில்
72. பணாபணீசம் – சின்னக்காஞ்சிபுரம் ஐயங்கார் பாளையத் தெருவில்
73. புண்ணிய கோடீசம் – சின்னக்காஞ்சிபுரம் செட்டித்தெரு கோடியில்
74. சிவாஸ்தானம் – தேனம்பாக்கம் கிராமத்தில்
75. வலம்புரி விநாயகர் – வரதராஜ பெருமாள் கோயில் உட்பிரகாரத்தில்
76. செவ்வந்தீசம் – பஞ்சுப்பேட்டை விதைப்பண்ணை வளாகத்தில்
77. வானேசம் – காஞ்சி அரக்கோணம் சாலையில்
78. பரிதீசர் – வானேசம் கோயில் அருகில்
79. சந்திரேசம் – சர்வதீர்த்தத்திற்கு தெற்கே வெள்ளைக்குளம் பகுதியில்

காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள இதர திருக்கோயில்களில் சில :

80. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
– புத்தேரித் தெரு
81. அருள்மிகு விநாயகர் திருக்கோயில்
– காமராசர் தெரு
82. அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில்
– மடம் தெரு பிள்ளையார்பாளையம்
83. அருள்மிகு பொய்த்தேர் மண்டப விநாயகர் கோயில்
– மண்டபத்தெரு
84. அருள்மிகு பொய்யாமொழி விநாயகர் கோயில்
– திருமால் ராஜாத்தெரு பிள்ளையார் பாளையம்
85. ஏலேலசிங்க விநாயகர் திருக்கோயில்
– காமாட்சி அம்மன் சன்னதித் தெரு
86. சுந்தரவிநாயகர் கோயில் – கோட்ராம்பாளையத் தெரு
87. ஆலடிப் பிள்ளையார் கோவில்
– ஆலடிப் பிள்ளையார் தெரு
88. திருக்கச்சி நம்பி விநாயகர் கோயில்
– திருக்கச்சி நம்பித்தெரு
89. வரசித்திவிநாயகர் கோயில்
– கண்ணப்பன் தெரு, சின்னகாஞ்சிபுரம்
90. சுந்தர விநாயகர் கோயில்
– ஏகாம்பரபுரம் தெரு பஞ்சுப்பேட்டை
91. வரசித்தி விநாயகர் கோயில்
– மூங்கில் மண்டபம்
92. இஷ்டசித்தி விநாயகர் கோயில்
– வள்ளல் பச்சையப்பன் தெரு
93. கரிக்கினில் அமர்ந்தவள் கோயில்
– கஜானா ராமராயர் தெரு
94. குளக்கரை மாரியம்மன் கோயில்
– சாலைத்தெரு
95. பரஞ்சோதியம்மன் கோயில்
– ரயில்வே ரோடு
96. ஆஞ்சனேயர் கோயில் – தேரடி காந்திரோடு
97. ஆஞ்சனேயர் கோயில் – கங்கை கொண்டான் மண்டபம்

98. வீரமாகாளியம்மன் கோயில்
— பிள்ளையார் பாளையம்

99. தேவி கருமாரியம்மன் கோயில்
— பல்லவன் நகர்

100. கற்பகப் பிள்ளையார் கோயில்
— ஏகாம்பரநாதர் சன்னதித் தெரு

101. அருள்மிகு சந்தவெளியம்மன் கோயில் — ஏகாம்பரநாதர் சன்னதி தெரு

102. தபசு விநாயகர் கோயில் — புத்தேரித் தெரு

103. பச்சையம்மன் கோயில் — கீழம்பி சாலை

104. கன்னியம்மன், பொன்னியம்மன், பவானியம்மன் கோயில்கள் — பொன்னேரிக் கரை

105. காடுவெட்டியம்மன் கோயில்
— பிள்ளையார் பாளையம்

106. கருக்கினில் அமர்ந்தவள் கோயில்
— பிள்ளையார் பாளையம்

107. தாந்தோணியம்மன் கோயில்
— ஆற்காடு சாலை

108. தும்பவனத்தம்மன், வேலாத்தம்மன், கோயிலாத்தம்மன் திருக்கோயில்கள் — சின்னக்காஞ்சிபுரம்.

தகவல் பலகை

8 என்ற எண் நலன் பயக்கும் எண்ணே ஆகும். பகவான் கிருஷ்ணன் 8 வது மகனாக பிறந்தார். அஷ்டமி திதியில் பிறந்தார். 8 வது அவதாரம் கிருஷ்ணர் அவதாரம். மனிதனின் உயரம் அவரது கையால் 8 சாண் ஆகும். சூரிய கதிர் பூமியை அடைய 8 நிமிடம் ஆகிறது. ஜாதகத்தில் எட்டாம் இடம் ஆயுள் தானமாகும். சிவனின் குணங்கள் 8. எட்டு வீரச்செயல்கள் நடந்தன. 8 வீரட்டத்தலங்கள் ஆகும். முனிவர்கள் அடையும் சித்தி 8. ஐஸ்வரியம் 8. திசை 8. விக்ரகங்கட்கு சார்த்துவது அஷ்டபந்தனம் என்னும் 8 வகை மூலிகைகளால் ஆன மருந்து ஆகும். ஈஸ்வரன் என பின்பெயர் பட்டம் பெற்ற சனியின் ஆதிக்க எண் 8.

முக்கிய அலுவலக, திருக்கோயில் தொலைபேசி எண்கள் :

❖ இணை ஆணையர் அலுவலகம், வேலூர்	0416	225758
❖ உதவி ஆணையர் அலுவலகம், காஞ்சிபுரம்	04112	237848
❖ அ/மி பக்தவத்சலப் பெருமாள் திருக்கோயில், திருநின்றவூர், பூவிருந்தவல்லி வட்டம்.	044	6390434
❖ அ/மி ஜெகந்நாதப் பெருமாள் திருக்கோயில், திருமழிசை, பூவிருந்தவல்லி வட்டம்	044	6272642
❖ அ/மி திருக்கச்சி நம்பிகள் மற்றும் அ/மி வரதராஜப் பெருமாள் திருக்கோயில் பூவிருந்தவல்லி	044	6272066
❖ அ/மி தேவி கருமாரியம்மன் திருக்கோயில் திருவேற்காடு, பூவிருந்தவல்லி வட்டம்	044	6800430 6800487
❖ அ/மி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் திருத்தணி	04118	685243 685387
❖ அ/மி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் கோவூர் ஸ்ரீபெரும்புதூர் வட்டம்	044	4780124
❖ அ/மி காமாட்சி அம்மன் திருக்கோயில் மாங்காடு ஸ்ரீபெரும்புதூர் வட்டம்	044	6272053
❖ அ/மி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் குன்றத்தூர் ஸ்ரீபெரும்புதூர் வட்டம்	044	4780436
❖ அ/மி ஆதிகேசவ பெருமாள் பாஷ்யகாரர் திருக்கோயில் ஸ்ரீபெரும்புதூர்	04111	362236
❖ அ/மி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் வல்லக்கோட்டை ஸ்ரீபெரும்புதூர் வட்டம்	04111	372225
❖ அ/மி வரதராஜ பெருமாள் திருக்கோயில் காஞ்சிபுரம்	04112	222773
❖ அ/மி குமரக்கோட்டம் சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் காஞ்சிபுரம்	04112	222049

❖ அ/மி ஏகாம்பரநாதர் திருக்கோயில் காஞ்சிபுரம்	04112	222084
❖ அ/மி சக்தி விநாயகர் திருக்கோயில் செங்கல்பட்டு நகர்	04114	431291
❖ அ/மி பாடலாத்திரி நரசிம்ம பெருமாள் திருக்கோயில் சிங்கப்பெருமாள் கோயில் செங்கல்பட்டு வட்டம்	04114	464325
❖ அ/மி நித்யகல்யாண பெருமாள் திருக்கோயில் திருவிடந்தை திருக்கழுக்குன்றம் வட்டம்	04114	474235
❖ அ/மி நெம்மேலி ஆளவந்தார் நாயக்கர் அறக்கட்டளை மாமல்லபுரம் திருக்கழுக்குன்றம் வட்டம்	04114	442229
❖ அ/மி கந்தசாமி திருக்கோயில் திருப்போரூர் திருக்கழுக்குன்றம் வட்டம்	04114	446226
❖ அ/மி வேதகிரீஸ்வரர் திருக்கோயில் திருக்கழுக்குன்றம்	04114	447139
❖ அ/மி கோதண்டராமர் திருக்கோயில் மதுராந்தகம்	04115	553887

தகவல் பலகை

திருக்கோயில் நிர்மாணம் நான்கு வகைப்படும்.

1. புதிதாகக் கட்டுதல் (ஆவர்த்தம்).
2. இயற்கை அழிவினால் இழந்ததைத் திரும்பக் கட்டுதல் (அநாவர்த்தம்).
3. காலப்போக்கில் ஏதேனும் சிதைவுற்றால், சிதைவுற்றதை எடுத்து திரும்பக் கட்டுதல் (புனராவர்த்தம்).
4. திருட்டு போன்ற அசுத்தத்தை நீக்குதல் (அந்தரிதம்).

நூல் தொகுப்புக்கு உதவிய கருவி நூல்களின் பட்டியல்

1. Elements of Hindu Iconograpy - T.A. Gopinatha Rao
2. பல்லவர் வரலாறு – மா. இராசமாணிக்கனார்
3. 108 திவ்விய தேச ஸ்தல வரலாறு – ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், காரைக்குடி
4. திருமுறைத் தலங்கள் –பு.மா. ஜய செந்தில்நாதன்
5. அகில இந்திய இந்துத் திருத்தலங்கள் – வானமாமலை ராமநுஜ தாசன்
6. 108 வைஷ்ணவ திவ்விய தேச வைபவமும் புராண அபிமான ஸ்தலங்களும் – லிப்கோ பதிப்பகம்
7. தென்னிந்திய கோயில்கள் (தமிழாக்கம்)
   – கே.ஆர். சீனிவாசன்
8. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் – ஓர் ஆய்வு
   –முனைவர் சி. இரத்தினம்.
9. திருப்பருத்திக் குன்றத்தில் துறவிகளும் சமய வரலாறும்
   –டி.என். இராமசந்திரன்
10. சிவாலயங்கள் இந்தியாவிலும் அப்பாலும் (முதற்பாகம்)
    –ராவ் பஹதுார் ப. சம்பந்த முதலியார் பி.ஏ.,பி.எல்
11. செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு
    –பதிப்பாசிரியர் டாக்டர் இரா. நாகசாமி
    வரலாற்றுப் பேரவை வெளியீடு
12. Jaina Art and Architecture under the pallavas
    -Dr. R. Nagasamy

இணைப்பு - I

மையம் சென்னையிலிருந்து	தொலைவு கி.மீ.	பயண வாகனங்கள்	உத்தேச பயண நேரம்	உணவு விடுதி உள்ளதா	தங்கும் விடுதிகள் உள்ளதா	
					தனியார்	திருக்கோயில்
கும்மிடிப்பூண்டி	40	பேருந்து	1 மணி	உள்ளது	உள்ளது	இல்லை
		இரயில்	1/2 மணி			
திருத்தணி	86	பேருந்து	3 மணி	உள்ளது	உள்ளது	உள்ளது
		இரயில்	2.15 மணி			
திருவள்ளூர்	40	பேருந்து	1.30 மணி	உள்ளது	உள்ளது	இல்லை
		இரயில்	1.30 மணி			
பூவிருந்தவல்லி	22	பேருந்து	45 நிமிடம்	உள்ளது	உள்ளது	இல்லை
ஸ்ரீபெரும்புதூர்	40	பேருந்து	1.30 மணி	உள்ளது	உள்ளது	இல்லை
காஞ்சிபுரம்	76	பேருந்து	2 மணி	உள்ளது	உள்ளது	இல்லை
உத்திரமேரூர்	12	பேருந்து	3 மணி	உள்ளது	உள்ளது	இல்லை
செங்கல்பட்டு	65	பேருந்து	2 மணி	உள்ளது	உள்ளது	இல்லை
		இரயில்	2 மணி	உள்ளது	உள்ளது	இல்லை
திருக்கழுக்குன்றம்	80	பேருந்து	2.30 மணி	உள்ளது	உள்ளது	உள்ளது
மகாபலிபுரம்	65	பேருந்து	3 மணி	உள்ளது	உள்ளது	உள்ளது
மதுராந்தகம்	84	பேருந்து	3 மணி	உள்ளது	உள்ளது	இல்லை
		இரயில்	3 மணி			
அச்சிறுபாக்கம்	12	பேருந்து	3.30 மணி	உள்ளது	உள்ளது	இல்லை
		இரயில்	3.30 மணி			

திருக்கோயில்கள் அமைந்துள்ள ஊர்களின் தொலைவு, வாகன வசதி, பயணநேரம், உணவு விடுதி, தங்கும் விடுதி குறித்த விபரங்கள்

மையம்	எந்தத்தலம்	தொலைவு கி.மீ.	பயண வாகனம்	உத்தேச பயண நேரம்	உணவு விடுதி உள்ளதா	தங்கும் விடுதிகள் உள்ளதா		குறிப்புரை
						தனியார்	திருக்கோயில்	
கும்மிடிப்பூண்டி	திருக்கள்ளில் (திருக்கண்டலம்)	10	பேருந்து	1/2 மணி	இல்லை	இல்லை	இல்லை	
திருத்தணி	மத்தூர்	14	பேருந்து	1/2 மணி	இல்லை	இல்லை	இல்லை	
	திருவாலங்காடு	46	பேருந்து	1 1/4 மணி	இல்லை	இல்லை	இல்லை	
திருவள்ளூர்	திருப்பாச்சூர்	5	பேருந்து	10 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	பூண்டி	10	பேருந்து	20 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
பூவிருந்தவல்லி	திருமழிசை	5	பேருந்து	10 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	திருநின்றவூர்	14	பேருந்து	45 நிமிடம்	உள்ளது	இல்லை	இல்லை	
	மலையம்பாக்கம்	6	பேருந்து	20 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	திருமணம்	8	பேருந்து	45 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	பாரிவாக்கம்	3	பேருந்து	15 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	மாங்காடு	6	பேருந்து	20 நிமிடம்	உள்ளது	இல்லை	இல்லை	

மையம்	எந்தத்தலம்	தொலைவு கி.மீ.	பயண வாகனம்	உத்தேச பயண நேரம்	உணவு விடுதி உள்ளதா	தங்கும் விடுதிகள் உள்ளதா		குறிப்புரை
						தனியார்	திருக்கோயில்	
	குன்றத்தூர்	15	பேருந்து	30 நிமிடம்	உள்ளது	இல்லை	இல்லை	
	கோவூர்	15	பேருந்து	30 நிமிடம்	உள்ளது	இல்லை	இல்லை	
	திருவேற்காடு	5	பேருந்து	20 நிமிடம்	உள்ளது	இல்லை	உள்ளது	
திருப்பெரும்-	வல்லக்கோட்டை	10	பேருந்து	25 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
புதூர்	மணிமங்கலம்	30	பேருந்து	1 மணி	இல்லை	இல்லை	இல்லை	
காஞ்சிபுரம்	திருப்புட்குழி	12	பேருந்து	30 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	தாமல்	15	பேருந்து	40 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	கூரம்	8	பேருந்து	30 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	கோவிந்தவாடி	16	பேருந்து	30நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	ஆற்பாக்கம்	13	பேருந்து	25நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	இளையனார்							
	வேலூர்	20	பேருந்து	30நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	மாகறல்	16	பேருந்து	30நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	
	மதுரமங்கலம்	15	பேருந்து	45நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை	

மையம்	தொலைவு கி.மீ.	பயண வாகனங்கள்	உத்தேச பயண நேரம்	உணவு விடுதி உள்ளதா	தங்கும் விடுதிகள் உள்ளதா	
					தனியார்	திருக்கோயில்
காஞ்சிபுரத்திலிருந்து						
அங்கம்பாக்கம்	17	பேருந்து	30 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
மாகறல்	15	பேருந்து	30 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
திருமுக்கூடல்	22	பேருந்து	45 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
திருப்புலிவனம்	22	பேருந்து	45 நிமிடம்	உள்ளது	இல்லை	இல்லை
கடம்பர் கோயில்	18	பேருந்து	30 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
பழையசீவரம்	20	இரயில்	20 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
உத்திரமேரூரிலிருந்து						
பெருநகர்	15	பேருந்து	30 நிமிடம்	உள்ளது	இல்லை	இல்லை
செங்கல்பட்டிலிருந்து						
சீட்டனஞ்சேரி	24	பேருந்து	30 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
ஒரக்காட்டுப்பேட்டை	18	பேருந்து	20 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
பழையசீவரம்	15	பேருந்து	20 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
திருக்கச்சூர்	15	பேருந்து	20 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
நந்திவரம்	20	பேருந்து	30 நிமிடம்	உள்ளது	இல்லை	இல்லை
அனுமந்தபுரம்	20	பேருந்து	45 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
சிங்கப்பெருமாள்கோயில்	9	பேருந்து	15 நிமிடம்	உள்ளது	உள்ளது	உள்ளது
		இரயில்	15 நிமிடம்			

மையம்	தொலைவு கி.மீ.	பயண வாகனங்கள்	உத்தேச பயண நேரம்	உணவு விடுதி உள்ளதா	தங்கும் விடுதிகள் உள்ளதா	
					தனியார்	திருக்கோயில்
<u>செங்கல்பட்டிலிருந்து</u>						
பொன்விளைந்த களத்தூர்	13	பேருந்து	30 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
திருவடிசூலம்	10	பேருந்து	20 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
திருமலைவையாவூர்	25	பேருந்து	30 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
திருப்போரூர்	30	பேருந்து	45 நிமிடம்	உள்ளது	உள்ளது	இல்லை
<u>திருக்கழுக்குன்றத்திலிருந்து</u>						
திருப்போரூர்	25	பேருந்து	30 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
திருவடிசூலம்	20	பேருந்து	45 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
<u>மகாபலிபுரத்திலிருந்து</u>						
திருவிடந்தை	18	பேருந்து	25 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
திருப்போரூர்	18	பேருந்து	25 நிமிடம்	உள்ளது	உள்ளது	இல்லை
சதுரங்கப்பட்டிணம்	19	பேருந்து	30 நிமிடம்	உள்ளது	இல்லை	இல்லை
<u>மதுராந்தகத்திலிருந்து</u>						
திருமலைவையாவூர்	15	பேருந்து	25 நிமிடம்	இல்லை	இல்லை	இல்லை
அச்சிறுப்பாக்கம்	18	பேருந்து	25 நிமிடம்	உள்ளது	உள்ளது	இல்லை

குறிப்புகள்

பயணியர் கையேடு









இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை